Registered as a Newspaper in Ceylon விலை சதம் 20

மில்க் வைற்
நீல சோப்
10 சதம்
கட்டியை வாங்கி
அதிக லாபமடையுங்கள்

# ஈழநாடு

THE EELA NADU
தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (27-2-66) இதழ் 19
விசுவாவசு மாசி 16 ஜுல்க:: பிறை 5 ஞாயிற்றுக்கிழமை

பாலக்காடு ஆர் வி. ஜி. பீடிகள்
தரத்திலும், மணத்திலும்,
குணத்திலும் சிறந்த ஆர். வி. ஜி.
பீடிகளைக் கேட்டு வாங்கி
உபயோகியுங்கள்.

முக்கிய கவனிப்பு: சிலர் போலி பீடிகளை ஒறிஜினல் ஆர். வி. ஜி. பீடிகள் என விற்பனைசெய்கிறார்கள். எங்கள் வான் மூலம் மட்டுமே நாம் ஆர். வி. ஜி. பீடிகளை விநியோகம் செய்கிறோம். ஆதலால் வேறுகார்களிலோ பைசிக்கிள்களிலோ சிலர் விநியோகம் செய்யும் போலி பீடிகளை வாங்கி ஏமாறாதீர்கள்.

# நாட்டில் 5 பல்கலைக் கழகங்கள் இருக்கும்

## உபவேந்தர் பதவி ஒழிக்கப்படும்

### கொழும்புக்கு தனிப் பல்கலைக்கழகம்

### நிருபர்களுக்கு கல்வி மந்திரி பேட்டி

கொழும்பு, சனி

பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்குப் பதிலாக, ஒரு குழுவின் தலைவர்தான் இனி பல்கலைக்கழக உயர் அதிகாரியாக இருப்பர் என்றும், இக்குழுவில் கல்வி விற்பன்னர்களும், இதர முக்கியஸதர்களும் இருப்பார்களென்றும் கல்வி மந்திரி இன்று நடத்திய நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்துடன் சம்பந்தப்பட்ட ஆக்கவேலை, கவனிப்பு, நிர்வாகம் ஆகியவற்றுக்கு இக் குழுவே பொறுப்பாக இருக்குமென்றும் கல்வி மந்திரி இரியகொல்லை கூறினார்.

தலைவரின் பதவிக்காலம் ஒரு முறை மட்டுமே இருக்கும் என்றும் மீண்டும் அவர் நியமனம் ஆகமாட்டாரென்றும் மேலும் அவர் கூறினார்.

பல்கலைக்கழக கோர்ட் ரத்துச்செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

5 பல்கலைக்கழகங்கள்

இலங்கையில் 5 பல்கலைக் கழகங்கள் இருக்குமென்றும் அவர் கூறினார்.

பேராதனைப் பல்கலைக்கழகம், வித்தியோதயா பல்கலைக்கழகம், வித்தியாலங்கார பல்கலைக்கழகம், கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி ஆகியன அவர் குறிப்பிட்ட ஐந்து பல்கலைக் கழகங்கள்.

கொழும்பிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகப் பிரி

(6-ம் பக்கம் பார்க்க)

## வீர சவர்க்கார் காலமானர்

### வரலாற்றுப் புகழ்பெற்ற புரட்சி வீரர்

பம்பாய், பிப். 26

முதுபெரும் விடுதலை புரட்சி வீரரான விநாயகதாமோதர சவர்க்கார் இன்று பகல் 11 30 க்கு பம்பாயில் காலமானர். அவருக்கு வயது 83.

வீரசவர்க்கார் என அழைக்கப்படும் அவர் கடந்த 2 ஆண்டுகளாகவே நோய்வாய்ப்பட்டிருந்தார். கடந்த 22 நாட்களாக வெறும் நீர் மட்டுமே அவர் அருந்தினர். கடந்த ஒரு வாரமாக அவரது உடல் நிலை மிகவும் மோசமுற்றிருந்தார்.

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க அற்புத வீரசாகஸங்களை நிகழ்த்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒரு கூப்பனுக்கு 3 அவுன்ஸ் சர்க்கரை

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்த வாரத்திலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல ஐக்கிய பண்டசாலைகளுலும் ஒரு கூப்பனுக்கு 3.2 அவுன்ஸ் சர்க்கரை விநியோகிக்கப்படவிருப்பதாக அறியப்படுகிறது.

சர்க்கரைத் தட்டுப்பாடு பற்றி பொதுமக்கள் பலர் குறைபாடு தெரிவித்திருந்தைத் தொடர்ந்தே உணவுக் கட்டுப்பாட்டு இலாகா மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. (ந. நி)

## டெஸ்ட் கிரிக்கெட்

கிறைஸ்ட்சேர்ச், பெப். 26

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து தன் முதலாவது இன்னிங்ஸில் 342 ரன்கள் எடுத்து அவுட் ஆனது.

நியூஸிலந்து 3 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 174 ரன்கள் எடுத்தது.

## புதிய அறிவித்தலால் குடிசைக் கைத்தொழிலாளர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

1965-ம் வருடம் அக்டோபர் மாதத்துக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட எவ்வித குடிசைக் கைத்தொழிலுக்கும் அரசாங்க உதவி அளிக்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவித்தல் காரணமாக குடிசைக் கைத்தொழில்களை நடத்தும் தனிப்பட்டவர்களும் சங்கங்களும் பெரும் ஏமாற்றமடைந்துள்ளதாக அறியப்படுகிறது.

தாம் ஆரம்பித்துள்ள குடிசைக் கைத்தொழில் பணமுடை காரணமாகவும் தொடர்ந்து நடத்திவந்த தொழிலை திடீரெனக் கைவிடுவதால் ஜீவனோபாயத்துக்கு வேறுவழியின்றிக் கஷ்டமடையவேண்டிய நிலை ஏற்படுமென்பதாலும் அரசாங்கம் தம்மையும் பதிவுசெய்து நிதி உதவி வழங்கவேண்டுமென, அரசாங்கத்தின் புதிய அறிவித்தலால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குடிசைக்கைத்தொழில் கிராம அபிவிருத்தி அதிகாரிக்கு ஒரு மகஜர் மூலம் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

(ந. நி.)

## காஞவில் இலங்கையர் பாதுகாப்பாகஇருக்கின்றனர்

ஆக்ரா, பெப். 26

காஞவிலிருக்கும் இலங்கையர்கள் எதுவித ஆபத்துமின்றி பாதுகாப்புடன் இருப்பதாக காஞவிலுள்ள இலங்கைத் தூதுவர் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

## கிராமசபைத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

உடுப்பிட்டி, முள்ளிப்பற்று அச்சுவேலி ஆகிய கிராம சபைகளின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் 15, 16, 17-ம் திகதிகளில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முன்னிலையில் தாக்கல் செய்யப்படும்.

## 29-வது ஷரத்து

கொழும்பு, சனி

அகில இலங்கை சோனகர் சங்கத்தின் கூட்டம் அரசியல்சட்டத்தின் 29-வது ஷரத்துபற்றி ஆராய மார்ச் 2-ம் திகதி கூடும்.

## கள்ளச்சாவி உபயோகித்து வீட்டில் திருட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

சாவகச்சேரியிலுள்ள வீடு ஒன்றில் இரவு நேரத்தின் போது சொந்தக்காரர் நித்திரை செய்துகொண்டிருந்த சமயத்தில் திருடர்கள்வீட்டினுள் நுழைந்து கள்ளச்சாவியொன்றைஉபயோகித்து நகைகள் வைக்கப்பட்டிருந்த அறையைத் திறந்து சுமார் 4000ரூபா பெறுமதியான நகைகளையும் துணிகளையும் திருடிச்சென்றுவிட்டதாக அறியப்படுகிறது.

இந்த அறையுள் தனது பெற்றோருடன் படுத்திருந்த இரண்டரைவயதுக் குழந்தை கழுத்திலும் இடுப்பிலும் அணிந்திருந்த தங்கச் சங்கிலியையும் திருடர்கள் திருடிச்சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக எவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் சுப்ரீண்டன் திரு. ஏ.ஜே. இடமல்கொட சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியுடன் விசாரணை நடத்திவருகிறார்.

(ந. நி.)


பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்
14-ம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்



[illegible]
கண் பரிசோதகர்
அனஸ்கோ,
12, மெயின் வீதி, யாழ்ப்பாணம்
(நூதனசாலைக்கு முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதேயன்றி, மனிதன் ஓய்வுநாளுக்காக உண்டாக்கப்பட்டவனல்ல. — மார்க்கு 2:27

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 357

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி 16உ (27-2-66)

# தோட்டங்களில் பலாத்கார சம்பவங்கள்

தோட்டப் பகுதிகளில் அடிக்கடி நடைபெறும் பலாத்காரச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன் தோட்டத் தொழிலாளர்களுக்குப்பிரதிநிதித்துவம் வகிக்கும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளையும் தோட்ட முதலாளிமார்களையும் கொண்ட ஒரு மகாநாடு நடைபெற்றது. தொழில் மந்திரியின் யோசனையின் மீது தொழில் கமிஷனர் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் பல யோசனைகள் தெரிவிக்கப்பட்டதாகவும், தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தும் பொருட்டுத் தாம் ஒரு நகல் ஒப்பந்தத்தைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதாகத் தொழில் கமிஷனர் தெரிவித்த யோசனையை ஏற்றுக் கொண்டு அதுபற்றி ஏப்ரல் மாதக் கடைசியில் கூடி ஆராய்வதெனவும் மகாநாடு தீர்மானித்திருக்கிறதாம். தோட்டப்பகுதிகளில் அடிக்கடி நடைபெறும் பலாத்காரச் சம்பவங்களுக்கு ஒரு முடிவு காணும்பொருட்டு மந்திரியும் தொழிற் கமிஷனரும் எடுக்கும் இந்த முயற்சிகளை நிச்சயம் வரவேற்று ஒத்துழைப்புப் அளிக்க வேண்டும்.

தோட்டப்பகுதிகளில் அமைதியைக் குலைக்கமுனையும் எவர்மீதும்கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தோட்டத் தகராறுகளில் பொலிசார் பாரபட்சம் காட்டமாட்டார்களென்றும் இந்த மகாநாட்டில் பொலிஸ் அதிபர் உறுதியளித்திருக்கிறார். எந்தத் தகராறிலும் பாரபட்சமற்ற முறையில் நடந்து கொள்வதுடன் அமைதியைப் பாதுகாப்பதும் பொலிசாரின் கடமையாகும்.

தோட்டப் பகுதிகளில் பலாத்காரச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு, முதலில் அதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய வேண்டியது அவசியம். தோட்டத் தொழிலாளர் சார்பாக இந்த மகாநாட்டில் ஒன்பது தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர். ஒரு தோட்டத்திலேயே ஒன்றுக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இதனால் தொழிற் சங்கங்களுக்கிடையில் போட்டி அதிகரித்து தொழிலாளர் கைகலப்பில் முடிவடைகிறது. போட்டித் தொழிற்சங்கங்களினால் தான் தோட்டங்கள் பலவற்றில் கைகலப்புகள் அங்கும் இடம்பெற்றிருக்கின்றன. தொழிற்சங்கங்கள் அரசியல்வாதிகளின் தலைமையிலும் அரசியல்கட்சிகளின் கட்டுப்பாட்டுக்குள்ளும் இருப்பதும் தகராறுகளும் கைகலப்புகளும் அடிக்கடி ஏற்படுவதற்கு மற்றொரு காரணமாகும். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்ற விதி முறையும் அரசியல் கலப்பில்லாது தொழிலாளர்களே தங்கள் உரிமைகளைப் பாதுகாக்கவும், உரிமைகளைப் பெறவும் தொழிற் சங்கங்களுக்குத் தலைமை தயைங்கி நடத்தக்கூடிய சக்தியும் பெறுவதற்கான வழிவகைகளும் காணப்பட்டால் தொழிலாளர் தகராறும் பலாத்காரசம்பவங்களும் பெருமளவு குறைந்துவிடும்.

தோட்டத் தொழிலாளரின் சம்பளவிகிதமும் அது வழங்கப்படும் முறையும் தோட்டப் பகுதிகளில் தொழிலாளரின் குறைந்த வாழ்க்கை வசதியும் அங்குபலாத்காரசம்பவங்கள் அடிக்கடி தலைதூக்குவதற்கு மற்றொரு காரணமாகும். நாட்சம்பளத்தில் வேலைசெய்யும் தொழிலாளி, சிறுதவறு செய்துவிட்டாலும் அவரதுமேற்பார்வை உத்தியோகத்தர் சம்பளத்தை வெட்டுவதும் இதர துறைகளிலுள்ள தொழிலாளர்களுக்குரிய சலுகைகளும் மாதச்சம்பள முறையும் தோட்டத் தொழிலாளர்களுக்கு இல்லை. இதனால் அவர்கள் மத்தியில் அதிருப்தியும் விரக்தி மனப்பான்மையும் ஏற்படுவது இயல்பு.

தோட்டப் பகுதிகளில் பலாத்காரச் சம்பவங்களுக்குமுற்றுப்புள்ளிவைப்பதற்கு, முன்னோடியாக தொழிற்சங்கங்களின் செயல் முறைகளையும் ஒருமுகப்படுத்துவதுடன் தொழிற்சங்கப் போட்டிகளுக்கும் இடமிருக்காமல் செய்ய வேண்டும். தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கையையும் ஓரளவாவது வசதியுடையதாக்கவேண்டியதும் அவசியம்.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துக்கும் தொழிற் சங்கங்களுக்குமிடையில் முன்னர் ஓர் ஒப்பந்தம் இருந்ததாகவும் அது 1963-ம் ஆண்டில் முதலாளிமார் சம்மேளனத்தினால் சிதைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. தொழிற்சங்கங்களும் முதலாளிமார் சம்மேளனமும் அரசாங்கமும் நிலைமையை நன்குணர்ந்துள்ளதால் தொழிற் கமிஷனர் தயாரிக்கவிருக்கும் நகல் ஒப்பந்தம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் தொழிலாளரும் தோட்ட முதலாளிகளும் அதைக்கௌரவித்து நடப்பார்களென்றும் எதிர்பார்ப்போம்.

## வண. தனிநாயகம் இலங்கை வருகை

கொழும்பு, சனி

உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டின் கூட்டுக்காரியதரிசிகளில் ஒருவரான வண. தனிநாயகம் அடிகள் இலங்கைக்கு வந்திருக்கிறார்.

கொழும்பு, சனி

இலங்கை தொழிலாளர் சம்மேளனத்தின் உதவிக் காரியதரிசிகளில் ஒருவரான டி. குணதாசா பதவியிலிருந்து ராஜினுமாச் செய்திருக்கிறார்.

பாராளுமன்ற விவாதம்

# அரசியல் சட்டமா அல்லது திருத்தமா

(நேற்றைய தொடர்ச்சி)

இந்த விவாதங்கள் சாதாரண மக்களுக்குத் தெளிவற்றவைகளாகவே தென்படும். ஆனால் சாதாரண மக்கள் இவைகளைச் சிறிய, நடைமுறைக்குப் பொருத்மானவைகளாகவே எதிர்நோக்குவார்கள். உதாரணமாக அவர்கள் கருதுவது ராணுவத்திலும் பொலிஸிலும் உள்ள பிற்போக்கான அதிகாரிகள் சதியொன்றை நடத்த முயற்சித்தால் அதுபற்றி விசாரணைசெய்த சுப்ரீம்கோர்ட் அதுபற்றி விசாரணைசெய்து அப்படிச் செய்யத் திட்டமிட்டார்கள் என்று கண்டுபிடித்தபோதிலும் அதை வெளியிலுள்ள பிரிவிகவுன்ஸில் அரசியல் சட்டத்திலுள்ள சில ஷரத்தின்கீழ் குற்றவாளிகளை விடுதலைசெய்வதற்கு வழியிருக்கிறதெனக் கூறினால் உண்மையில் அரசியல் சட்டத்தில் ஏதோ பெரும் பிழையிருக்கிறதென்பது தான் அர்த்தம். இந்தமாதிரித்தான் சாதாரண மக்கள் இவ்விஷயத்தைக் கவனிப்பார்கள். இப்பிரச்னை இன்று எமக்கு முன்னர் கிளப்பப்பட்டிருக்கிறது.

பாராளுமன்றங்களின் அதிகாரத்தை அரசியல் சட்டங்கள் கட்டுப்படுத்தியதாக நாம் கேள்விப்பட்டது கிடையாது. அரசியல் சட்டமும், பாராளுமன்றமும் தமது அதிகாரத்தை மக்களிடமிருந்து பெற்றிருந்தால் அதற்கு ஆட்சேபமிருக்காது. மக்களே அரசியல் சட்டத்தை உருவாக்கினால் அந்த அரசியல் சட்டத்துக்கூடாக மற்ற அதிகாரத்துக்குப் பொறுப்பான ஸ்தாபனத்தின் உதாரணமாக-பார்லிமெண்டைக்கூட்டலாம். எல்லைக்கோட்டை நிர்ணயிக்க முடியும். ஆனால் இலங்கையைப் பொறுத்தமட்டிலும் இதுதான் நடைபெறுகிறதா? இங்கு இரண்டு மாறுபட்ட இடங்களிலிருந்து அதிகாரம் பிறப்பிக்கப்படுகிறது. மாட்சிமை தங்கிய மகாராணியின் அதிகாரத்தின் மீது எம்மீது அரசியல் சட்டம் திணிக்கப்பட்டிருக்கிறது இது ஒன்று மற்றது, மக்களின் அதிகாரத்துடன் பாராளுமன்றம் ஒன்றை தெரிவுசெய்துள்ளோம்.

திரு. ஸி. பி. டி. சில்வா:- நாம் குடியரசாகவருவோம்'

திரு. கெனமன்;- இந்த அரசியல் சட்டத்தை திருத்துவதுடன் நீங்கள் குடியரசாகிவிடமுடியாது. அதற்கு நாம் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்ய வேண்டியிருக்கும்.

திரு. ஜெயவர்த்தன;- நாம் அப்படிச் செய்வோம்.

திரு கெனமன்:- நீங்கள் அதைச் செய்தால் நான் உங்களுடன்.

திரு. ஜெயவர்த்தன:- அதைத்தான் நாம் சிபார்சு செய்கிறோம்.

திரு. கெனமன்:- ஆனால் நீங்கள் அதைச் செய்யவில்லை. நீங்கள் செய்வது எங்களை மடையர்களாக்குவதுடன் மாத்திரமல்லாமல் மக்களையும் மடையர்களாக்குவதாகும்.

திரு. ஜெயவர்த்தன:- நீங்கள் எங்களுடன் சேர்ந்தால் நாம் அதைச் செய்வோம்.

திரு. சில்வா: கமிட்டி சிபார்சு செய்தால்.

திரு. கெனமன்: தற்போதைய அரசியல் சட்டத்தை புரனமைப்புச் செய்வதற்காகப் பொறுக்குக்கமிட்டி நியமிக்கப்பட்டால் தற்போதைய அரசியல் சட்டத்தின் அடிப்படையில்தான் அது இயங்கவேண்டியிருக்கும். அதிலுள்ள பிரிக்கப்பட முடியாத ஷரத்துகளை மாற்றமுடியாது.

திரு. சில்வா:- நாம் குடியரசாக வந்தால்?

திரு. கெனமன்:- உங்களுடைய பிரேரணையைப் பாருங்கள்.

பிரேரணையாவது:-

''செனட் சபையினால் நியமிக்கப்படவிருக்கும் தெரிவுக்குழுவுடன் இணைந்து ஒரு கூட்டுத் தெரிவுக்குழுவாகி இலங்கை (அரசியலமைப்பும் சுதந்திரமும் பற்றிய) 1946, 1947-ம் ஆண்டுகளின் அரசவைச் கட்டளைகளையும் ஏனைய சட்டங்களையும் கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாகவும் திருத்துவதுபற்றி ஆராய்வதற்குப்பின்வரும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள்...''

திரு. சில்வா:- நாம் அதை பரிசீலனைசெய்து பார்ப்போம்.

திரு. கெனமன்: எனது நண்பர் சபை முதல்வர் பொறுக்குக்கமிட்டி இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய தடையில்லையென்று கூறினார். எவரும் எதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. சில்வா: சிபார்சும் செய்யலாம்.

திரு. கெனமன்:- சிபார்சு செய்வதிலும் தடைகிடையாது. ஆனால் சட்டபூர்வமான நடவடிக்கையெடுக்க முடியாது அதை எப்படிச் செய்யப்போகிறீர்கள். நாம் குடியரசாவதற்கு மற்றொரு சட்டத்தை கொண்டுவரும்படி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தைக் கேட்கப்போகிறீர்களா? இதை எப்படி செய்யப்போகிறீர்கள்.

இப்பிரச்னையை முதலில் நாம் சீர்செய்யவேண்டும். இச்சபையை அரசியல் நிர்ணய சபையாக்குவதற்கு எதுவிததடையுமில்லையென சபை முதல்வர் கூறினார். அதைத்தான் அவர் கூறினார். அப்படியானால் சரியான ஒரு அரசியல நிர்ணய சபையாகவிருக்கட்டும். அதனால்தான் எதிர்க்கட்சித் தலைவியின் கோரிக்கை சரியாக அமைந்துள்ளது. அரசாங்கம் இப்பிரேரணையை வாபஸ்பெறட்டும். எதிர்க்கட்சியினருடன் பேச்சு நடத்தியபின்னர் புதிய அரசியல் சட்டம் ஒன்றைச் சிபார்சுசெய்யும் பொறுக்குக் கமிட்டிக்கான பிரேரணையை கொண்டுவரவேண்டும். அதைவிட மாற்றியமைப்பதற்காகவல்ல (இரைச்சல்) இதைச் செய்யத்தயாரென்றால் முதலில் இப்பிரேரணையை வாபஸ் பெறட்டும்.

திரு. ஜெயவர்த்தன:- நகல் ஒன்றைத்தரவும்.

திரு. கெனமன்:- இல்லை உங்களுடன்நாமும்அமர்ந்து புதிய அரசியல் சட்டத்தின் நகலைத் தயாரிப்போமாக.

திரு. ஜெயவர்த்தன:- பிரேரணைக்கான நகலைத் தாருங்கள். புதிய பிரேரணையைத் தாருங்கள்.

திரு. கெனமன்:- தங்களுடைய பிரேரணையைத் தாங்களே தயாரிக்க முடியாத அளவுக்கு அவர்கள் வங்குரோத்தடைந்துவிட்டார்கள்.

திரு. சில்வா:- இது ஒரு கூட்டுப்பிரேரணை.

திரு. கெனமன்:- நான் கூறுகிறேன். இந்தப் பிரேரணையைத் திருத்தியமைக்க முடியாது.

திரு. சில்வா: சபையை

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

'கண்ணே வா இப்படி. இந்த வலைக்குள் நாம்காதல் செய்வோம்' என்று கூவியழைத்த சிலந்தி ஏமாந்து போய்வலைக்குள்வந்துதனது ஜோடியைக் கொன்று புசித்து ஏப்பம்விட்டதாம்!

இந்தக்கதி தானே நமது தேசிய ஒலிபரப்புக்கும் ஏற்பட்டிருக்கிறது?

நட்டத்திலோடும் தேசிய ஒலிபரப்பை அபயக்குரல் காட்டி கைகொடுத்து எழுப்பிவிடவென்று வந்த வர்த்தக ஒலிபரப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அதை கபளீகரம் செய்ய ஆரம்பித்துவிட்டதா?

நேற்று முன்தினம் இலங்கை வானொலியின் கிராம நிகழ்ச்சியில் ஒரு விவசாயப் போட்டி நிகழ்ந்தது. விவசாயம் சம்பந்தமான சில கேள்விகள் கேட்கப்பட்டன சரியான விடை தருபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. இதில் ஆச்சரியம்ஒன்றுமில்லை. விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதற்காக இப்படியான நிகழ்ச்சிகள்ஒலிபரப்பப்படுவதுவழக்கம் ஆனால் இந்தப் போட்டிக்கு பரிசுகள்வழங்கப்போவது கொழும்பிலுள்ள 'பௌளர் அன்ட் கொம்பனி' என்று தெரிவிக்கப்பட்டபோதுதான் ஆச்சரியம் உண்டாயிற்று.

இந்த கம்பெனிவிவசாயத்தில் உபயோகப்படும் செயற்கை உர விற்பனையில் பிரபல்யமானது. ஆனால் அது ஒரு தனியார் வர்த்தகஸ்தாபனம். அதுபோன்ற வேறு கொம்பனிகளும் செயற்கை உர வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கின்றன. 'பௌளர் அன்ட் கொம்பனி'க்கு மட்டும் இந்த தனி சலுகை வழங்கப்பட்டு, அவர்கள் போட்டியில் பரிசளிக்க முன்வந்தது எங்ஙனம்?

தனியார் வியாபாரக் கொம்பனிகள் வானொலி நேரத்தை பணம் கொடுத்து வாங்கி தங்கள் பொருட்களை விளம்பரம் செய்து கொள்வதற்கென்று வர்த்தக ஒலிபரப்பு இருக்கின்றது. அப்படி இருக்கையில் தேசிய ஒலிபரப்பில் கிராம நிகழ்ச்சியில் செயற்கை உரம் விற்பனை செய்யும் 'பௌளர் அன்ட் கொம்பனி' நுழைந்தமர்மம் என்ன?

தேசிய ஒலிபரப்பில் ஒரு தனிப்பட்ட கொம்பனியின் பெயரோ அல்லது அதனால் தயாரிக்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் பொருளின் பெயரோ உச்சரிக்கப்படுவதே அதன் கொள்கைக்கு முற்றிலும் முரணானது. ஒரு நாடகத்திலோ அல்லது பேச்சிலோ 'ஓவல்டின்' போன்ற ஒரு பெயர் வருவதே தவறு. அது சர்வசாதாரணமாக எல்லோராலும் வழங்கப்படுகின்ற ஒரு பெயராயிருந்தபோதிலும், ஒரு தனிப்பட்ட கொம்பனியால் உற்பத்தி செய்யப்படுவதால், அக்கொம்பனிக்கு விளம்பரம் அளிக்கும் முறையில் அதன் உச்சரிப்பு கருதப்படும். இவ்விதியை மீறி 'பௌளர் அன்ட் கொம்பனி' தேசிய ஒலிபரப்பில் நுழைந்து விட்டது.

தேசிய ஒலிபரப்பும் வர்த்தக ஒலிபரப்பும் ஐக்கியமாக இரண்டறக் கலப்பதற்கு இது ஒரு சூசகமா? மட்டக்களப்பில் விசாரணை நடத்திவரும் வானொலி விசாரணைக் குழுவின் கண்களுக்கு இது எத்துப்படும் என்று நம்புவோமாக.

இந்திய வானொலியின் கிராம நிகழ்ச்சிகள் கவர்ச்சிக்குறைவாயிருப்பதாலும், கிராமங்களிலுள்ள வானொலிப் பெட்டிகள் ஒழுங்காகக் கவனிக்கப்படாமையினாலும் பலர் கூடியிருந்து வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கும் முய

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோ-பாகிஸ்தான் துருப்புக்களை விலக்கும் அலுவல் முடிவுற்றது

## ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன்னைய நிலைக்கு இருபடைகளும் விலகின

### வீரர்களுக்கு மலர்தூவி வரவேற்பு

புதுடில்லி, பெப். 26

**டாஷ்கண்ட் ஒப்பந்தத்தின்படி இந்திய—பாகிஸ்தான் துருப்புக்கள், சண்டையின் போது தாங்கள் பிடித்த பிரதேசங்களிலிருந்து தத்தம் பகுதிகளுக்கு வாபஸ் பெறும் வேலை நேற்றுடன் முற்றுப்பெற்றது.**

ஆகஸ்ட் 5-ம் திகதிக்கு முன்பு இருந்த நிலைக்கு வாபஸ்பெறவேண்டுமென்ற டாஷ்கண்ட் ஒப்பந்தம் நிபந்தனையை இந்தியா நிறைவேற்றிவிட்டது என பாதுகாப்பிலாகா அதிகாரி ஒருவர் கூறினார்.

லாகூர், சியால்கோட், ஹாஜிபீர், டிட்வால் ஆகிய பாகிஸ்தான் பகுதிகளிலிருந்து இந்தியத் துருப்புக்கள் வாபஸாகின. லாகூர் அரங்கில் பறந்து கொண்டிருந்த இந்திய மூவர்ணக் கொடி நேற்று கீழிறக்கப்பட்டது.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் நேற்று பாகிஸ்தானில் ராணுவ அதிகாரிகளுக்குக் காட்டப்பட்டன.

இருநாட்டுத்தளபதிகளும் பாகிஸ்தான் கிராமம் ஒன்றில் சந்தித்தனர். பாகிஸ்தான் சிவிலியன்களின் சொத்துக்கள் அடங்கிய பட்டியல் பாக். அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

சாம், ஜென்ரியான் பகுதிகளிலிருந்து பாகிஸ்தான் துருப்புக்கள் வாபஸ்பெற்று தங்கள் பகுதிக்குச் சென்றுவிட்டார்கள் இந்தியத் துருப்புக்கள் இன்று அப்பகுதிகளுக்குள் நகர்ந்தன.

கேம்கரன் பகுதியில் 11 கிராமங்களிலிருந்தும் பாகிஸ்தான் துருப்புக்கள் வெளியேறின.

பாகிஸ்தான் பகுதியை விட்டு பிரேஸ்பூர் வநத இந்திய அதிகாரிகளுக்கும், வீரர்களுக்கும் மக்கள் பெரும்வரவேற்பளித்தனர். மலர்கள் அவர்கள்மீது தூவப்பட்டு மகிழ்ச்சியுடன் அவர்கள் வரவேற்கப்பட்டார்கள்.

## பட்ஜட் முன்கூட்டி பிரசுரம்

புதுடில்லி, பெப். 26

டில்லி ஆங்கில தினசரி ஒன்று ஒரிஜா ராஜ்யத்தின் பட்ஜட்டை, அது வெளியிடப்பட்ட ஒரு தினத்துக்கு முன் பபிரசுரித்ததுகுறித்து சட்டசபையில்உரிமை பிச்னை சிகிளப்பப்பட்டது. சபாநாயகர் இதுசம்பந்தமான திர்ப்பைநிறுத்தி வைத்திருக்கிறார்.

## நெருக்கடி நிலை பரிசீலனை

புதுடில்லி, பெப். 26

நாட்டில் நெருக்கடி நிலை பிரச்னை முழுவதும் விரைவில் பரிசிலிக்கப்பட விருப்பதாக உள்ளூராட்சி மந்திரி திரு. நந்தா தெரிவித்தார்.

## இந்தோனேஷியாவில் புதிய பதற்ற நிலைமை

### மாணவர் ஆர்ப்பாட்டத்துக்கு சுகர்ணோ தடை

ஜாகர்த்தா, பெப். 26

இந்தோனேஷியாவில் மாணவர்ஆர்ப்பாட்டங்களை ஜனாதிபதி சுகர்ணோ தடை செய்திருக்கிறார்.

5 பேருக்குமேல் கூடக் கூடாது என்றும், இந்த உத்தரவு மீறப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்தோனேஷியாவில் ஜெனரல் நசூதியனை ஆதரித்து கடந்த 4 நாட்களாக மாணவர் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

நேற்று துப்பாக்கிப் பிரயோகத்தில்உயிரிழந்தமாணவரின் உடல் எடுத்துச்செல்லப்பட்டபோது பல்லாயிரக் கணக்கானோர் ஊர்வலத்தில் பங்குபற்றினர்.

இந்தோனேஷியாவில் புதிய பதற்றநிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஜெனரல் நசூதியனை ஆதரித்தும், சுகர்ணோவை எதிர்த்தும் இரகசிய ரேடியோ ஒலிபரப்புகள் மக்களுக்கு வெளியிடப்பட்டு வருகின்றன.

ஜாகர்த்தா நகரெங்கும் துருப்புக்கள் சூழ்ந்திருக்கிறார்கள் ஜனாதிபதி சுகர்ணோவின் மாளிகையைச் சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கானா அரங்கு

## "இன்னும் நானே தலைவன் நானே பிரதம சேனாதிபதி"

### டாக்டர் நிக்ருமா ஹானோய் செல்ல மாட்டார்

பீகிங், பெப். 26

**அரசியலமைப்பின்படி தாமே இன்னும் கானாவின் தலைவர் என்றும், முப்படைகளின் பிரதம சேனாதிபதியும் தாமே என்றும சீனத் தலைநகரிலிருக்கும் டாக்டர் நிக்ருமா அறிவித்திருக்கிறார்.**

சீக்கிரம் தாம் கானா செல்லப்போவதாயும், மக்கள் தனக்கு விஸ்வாசமாக இருப்பதாயும் அவர் கூறியிருக்கிறார்.

கானாவில் ராணுவமும், பொலிசும் தங்கள் படைவீடுகளிலேயே இருக்கும்படியும் மக்கள் அமைதியாக இருக்குமாறும் அவர்விடுத்த அறிக்கையில் மேலும் கூறியுள்ளார்.

### ஹானோய் செல்லார்

டாக்டர் நிக்ருமா தனது வடவியட்னும் விஜயத்தை ரத்துச் செய்துவிட்டதாயும் தமது மனைவியைப் பார்ப்பதற்காக முதலில் கெய்ரோவுக்கும், பின் லண்டனுக்கும் செல்லப்போவதாகவும் மற்றோர் செய்திகள் கூறுகிறது

ஆனல் கானாவில் டாக்டர் நிக்ருமா வீழ்த்தப்பட்டது குறித்து, மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

தாம்தான் திடீர் புரட்சிக்கு சித்த் திட்டமிட்டிருந்ததாயும், சென்ற ஆகஸ்ட் மாதத்திலேயே புரட்சியை நடத்தத் திட்டமிட்டிருந்தது என்றும், ஆனல் டாக்டர்நிக்ருமா வெளியே செல்லும்போதுதான் இது சாத்தியம் என ராணுவத் தலைவர்கள் முடிவு செய்தனர் என்றும் லண்டனில் கானாவின் முன்னாள் உள்விவகார அதிகாரி கூறினார்.

இதற்கிடையில் கானாவில் மாமூல் நிலையைத் தோற்றுவிக்கும் முயற்சியில் புதிய தலைமை ஈடுபட்டிருக்கிறது. குறைந்தது 2 ஆண்டுகளுக்கு அரசியலமைப்புச் சட்டப்படியான அரசாங்கம் இருக்காது என்றும், அதன்பின் உலக நாடுகளிலும் தமது ஆட்சி அங்கீகாரத்தைக் கோரும் என்றும் மேஜர் அங்க்ரா கூறினார்.

### விடுதலையும் கைதும்

கானாவில் நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். அதேசமயம் நிக்ருமாவின் சகாக்கள் கைது செய்யப்பட்டு வருகிறார்கள். நிக்ருமாவின் மேலும் பல நெருங்கிய சகாக்களைத் தேடும் பெரிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது

புதிய தலைவர் அங்க்ராவுடன் கானாவிலுள்ள அமெரிக்க தூதர் நேற்றுப் பேச்சு நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டது.

நேற்று ஆக்ராவில் முன்னாள் ஜனாதிபதியின் மெய்க்காவல் படைக்கும், வெற்றிப்படைக்குமிடையே சிறிய அளவு துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

## நாய்கள் நற்சுகம்

மாஸ்கோ. பெப். 26

3 நாட்களுக்குமுன் வானவெளிக்கு அனுப்பப்பட்ட இரு ரஷ்ய நாய்களின் நிலை நன்றாக இருப்பதாய் அறிவிக்கப்பட்டது. பூமியிலிருந்து 500 மைல் உயரத்தில் அவை வலம்வருகின்றன.

## அமெரிக்காவும் 18 நாடுகளும் இந்தியாவுக்கு உணவு உதவி

### வெளிமந்திரி ரஸ்க் அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 26

இந்தியாவுக்கு உணவு உதவிபுரியும் விஷயத்தில் அமெரிக்காவுடன் மற்றும் 18 நாடுகள் சேர்ந்து கொண்டிருப்பதாக திரு. டீன்ரஸ்க் அறிவித்திருக்கிறார்.

இது சம்பந்தமான திரு. ரஸ்கின் அறிக்கை அமெரிக்க பிரதிநிதிகள் சபைக்கமிட்டியில் வாசிக்கப்பட்டது.

ஐ நா. உணவு விவசாய ஸ்தாபனமும், பாப்பாண்டவரும் விடுத்த வேண்டுகோள் உட்பட எல்லாமாக 7 கோடி டாலர் இந்தியாவுக்கு அன்பளிப்புநிதி சேர்ந்திருப்பதாக திரு. ரஸ்க் கூறியிருக்கிறார்.

இந்தியாவுக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட 30 லட்சம் டன் தானியம் உட்பட, மொத்தம் 65 லட்சம் டன் தானியம் வழங்க அமெரிக்கா உறுதியளித்திருக்கிறதென்றும் அவரது அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

தனது அபிவிருத்தியில் விவசாயத்துக்கு முதலிடம் கொடுக்கும் அவசியத்தை இந்தியத் தலைவர்கள் உணர்ந்திருப்பதாயும் கூறப்பட்டது.

வெளி ஆக்கிரமிப்பை எதிர்ப்பதில் இந்தியாகாட்டிவரும் உறுதியை அவர் பாராட்டியிருக்கிறார்.

இந்தியாவுக்கு உதவி புரியும் நிதிக்கு இத்தாலியில் 470 லட்சம் ரூபால் சேர்ந்திருக்கிறது. தேசிய டெலிவிஷனும் பத்திரிகைகளும் இந்த இயக்கத்தைத் துவக்கின.

8 விமானங்களில் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டன. மலும் 12 விமானங்கள் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு இந்தியா வரவிருக்கின்றன.

நார்வே 17 1/2 லட்சம் ரூபாய் உதவி வழங்கியிருக்கிறது.

## 7 பொலீசாரை நாகர் கொன்றனர்

புதுடில்லி, பெப். 26

மணிப்பூரில் டாலிகேட் என்ற இடத்தில் 11 மத்திய ரிசர்வ் பொலிசாரை 100க்கு அதிகமான தலைமறைவு நாகர்கள் தாக்கியது காரணமான 7 பொலிசார் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

3 ஜீப்புகளுக்கு நெருப்பு வைக்கப்பட்டது. சாமான்களையும், ஆயுதங்களையும் நாகர்கள் கொள்ளையடித்துச் சென்றுவிட்டார்கள்.

இயந்திரத் துப்பாக்கிகள், தாணியங்கும் ஆயுதங்கள் ஆகியவற்றை நாகர்கள் உபயோகித்தார்கள்.

## ஸிரியாவின் புதியதலைவர்கள்

டமாஸ்கஸ், பெ. 26

ஸிரிய புரட்சியைத்தொடர்ந்து புதிய ஜனாதிபதியாக டாக்டர் அட்டாஸி நியமிக்கப்பட்டிருக்கிறார். திரு. யூசுப் சுவாயன் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## இந்தியாவுக்கு அமெரிக்க உரம்

பம்பாய், பெப். 26

3,55,000 மூட்டை உரத்துடன் இரு அமெரிக்க கப்பல்கள் இந்தியா வந்திருக்கின்றன.

## 'நல்லை நாவலர்'

நல்லூரிலே பிறந்து, சைவத்திற்கும், தமிழுக்கும் பெருமை தேடித்தந்த நாவலர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் நாடகம் ஒன்றை அரியாலை அருணோதயா வாசிகசாலையினர், நாவலர் பெருமானின் நினைவு தினத்தை கொண்டாடுமுகமாக நடத்திய விழாவின்போது திறமையாக நடித்துக் காண்பித்தனர்.

நாவலர் பெருமான் தமிழுக்கும், சைவத்துக்கும் செய்த தொண்டுகளையும் பெருமைகளையும் எடுத்துக்காட்டுவதையே கருப்பொருளாகக் கொண்ட 'நல்லைநாவலர்' என்ற இந்நாடகத்தை ஆசிரியர் திரு. எஸ். சதாசிவம் தயாரித்திருந்தார். நாவலர் பெருமானும், அவருடைய வாழ்க்கையில் சம்பந்தப்பட்டவர்களும் எப்படியான உருவ அமைப்பில் தோற்றத்தைக்கொண்டிருந்தார்களோ, எத்தகைய முறையில்வாழ்க்கை அமைப்பைக் கொண்டிருந்தார்களோ அதேபோல் இந்த நாடகத்தில் நடிகர்களைத் தேர்ந்தெடுத்து நாடகம் சிறப்பாகத் தயாரிக்கப்பட்டிருந்தது.

இதில் நாவலர் பெருமானாக நடித்த திரு. பொ. பரமநாதன் 'அசல்' நாவலர் பெருமானின் தோற்றத்துடன் காட்சி அளித்தார். அவர் நாவலரின் குணாதிசயங்களை எடுத்துக்காட்டக் கூடிய அளவுக்கு சிறப்பாக நடித்திருந்தார்.

மற்றும் 'தம்பு' வாக நடித்த ப. தெய்வேந்திரன், சேர். ஜேம்ஸ் லோங்டன் துரையாகநடித்த நா. தில்லைநாதன், பீற்றராகவந்த க. சண்முகநாதன் ஆகியோர் அற்புதமாக நடித்தது, மக்களின் பாராட்டுதலைப்பெறக் கூடியதாக இருந்தது.

—துரை

## நம்பிக்கையில்லா பிரேரணை ஒத்திவைப்பு

அச்சுவேலி, சனி

அச்சுவேலி கிராமசபைத் தலைவர் திரு. க. சுந்தரமூர்த்திமீது பன்னிரண்டு அங்கத்தவர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றைக் கைச்சாத்திட்டு உதவி ஆணையாளர் திரு. மாணிக்கவாசகருக்கு அனுப்பியிருந்தனர்.

இதைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் கைச்சாத்திட்டோர்களில் மூவர் சமூகமளிக்காத காரணத்தினால் விசாரணை பின்போடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் இராசி பலன்

எழுதுவது
சோதிட ஆசான் செ. தெல்லியூர்

Colombo Studio

[விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 16-ந் திகதி ஞாயிறு முதல் (27-2-66) 22-ந் திகதி சனிக்கிழமை (5-3-66) வரை]

### மேட இராசி

தொழில்வெற்றி, உயர்தர அதிகாரிகள் ஆதரவு, பொருள்வரவு, சந்தோஷ சமாச்சாரங்கள் கேட்டல், சொத்துக்கள் சேர்க்கை, எதிரிகள் வீழ்ச்சி, சுபகருமக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளல், வீண் விவாதங்களைத் தவிர்த்தல் சச்சரவுகளை விலக்கிகொள்ள இடமுண்டு. உத்தியோகத்தினருக்கு நல்ல பலன்கள் கிட்டுதல், வர்த்தகர்-கமத்தொழிலாளர்-மாணவர்- பெண்கள் யாவருக்கும்சுபகாலமாகும்.

### இடப இராசி

நல்ல நண்பர் சேர்க்கை, வார இறுதியில் பொருள் வரவு, தேகாரோக்கியம் காணல், குடும்பத்தில் சுபீட்ச-சமாதான நிலைமை காணல், எதிரிகள்மடக்கம், சுபகரும கொண்டாட்டங்கள் நடத்தல், கல்விச் சிறப்பு, கஷ்டமான பிரயாணங்கள், முயற்சிகளில்சிறிது தடைகாணல், வர்த்தகர்- உத்தியோகத்தர் - பெண்கள்-மாணவருக்கு இவ்வாரம் விசேட பலன்கள் கிட்டல், கமத்தொழிற் சிறப்பு.

### மிதுன இராசி

பயனற்ற முயற்சிகள், எதிரிகளால் கஷ்டம், தொழிலில் பலவித இடர்களும் காணல், நட்டம், செலவு அதிகரித்தல், கஷ்டமான பிரயாணம், வீண்அபவாதம் கேட்டல், விபத்துக்களில் அகப்பட்டு காயமடைதல், குடும்பத்தில் சச்சரவு. இனபந்துக்கள் பகை, உத்தியோகத்தர்-மாணவர்- வர்த்தகர்-பெண்கள் ஆகியோருக்கு மத்திமபலன்கள்நடத்தல்-கமத்தொழில் நட்டம் காணல்.

### கடக இராசி

சில விடயங்களால் இலாபம் கிட்டல், தேகாரோக்கியம், குடும்பத்தில் சுபகரும கொண்டாட்டம் காணல், (பிறப்பு, விவாகம் போன்றவை), பண நட்டமடைதல், ஊழியர் கஷ்டம் தருதல், விபத்துக்கள் நேரல், கஷ்டமான நீண்டபிரயாணம் மேற் கொள்ளல், பணமுடை, உத்தியோகத்தருக்குகஷ்டம், கமத்தொழில் மத்திமபலன்காணல், வர்த்தகருக்கு நட்டம் காணல், மாணவருக்கு மத்திமபலன், பெண்களுக்கு சிறப்பு.

### சிங்க இராசி

கஷ்டமான நீண்ட பிரயாணங்கள் ஏற்படல், ரோக பீடை, கெட்ட செய்திகள் கேட்டல், அவமானம், விரும்பத்தகாதமாற்றங்கள் ஏற்படல், முயற்சிகளில் பின்னடைவு, பணநட்டம், மனச்சஞ்சலம், உத்தியோகத்தருக்கு மத்திமபலன், கமத்தொழில்-வர்த்தகம் சமநிலை, மாணவருக்குகல்வியில் ஊக்கம் காணல், பெண்களுக்கு காதல் விவகார கஷ்டம் காணல்.

### கன்னி இராசி

முயற்சிகள் வெற்றி, அதிகாரிகள் வீழ்ச்சி, சத்துரு பீடை, தேகாரோக்கியம், சுபிட்சம்நிலவுதல், வருவாய் அதிகரிப்பு, கீர்த்தி, உயர் அந்தஸ்து கிட்டல், சுபகருமங்கள் நடத்தல், விபத்துக்களைத்தவிர்க்குக, உத்தியோகத்தர்- கமத்தொழிலாளர்- வர்த்தகர்-மாணவர் பெண்கள் ஆதியோருக்கு சிறப்புப் பலன்கள் கிட்டல்.

### துலா இராசி

பல வழிகளாலும் இலாபச்சேர்க்கை, சந்தோஷமும் சுபிட்சமும் நிலவுதல், நல்ல நண்பர் சேர்க்கை, செல்வாக்கு அதிகரிப்பு, சந்தோஷமான பிரயாணங்களில் ஈடுபாடு, செலவுஅதிகரிப்பு, வாகன உபயோகத்தில்பாதுகாப்பு அவசியம். கமத்தொழில் விருத்தி, உத்தியோகத்தருக்கு மத்திம பலிதம், வர்த்தகம் சமநிலை, மாணவர் கல்விச்சிறப்பு, பெண்களுக்கு பலதுறைகளிலும் சிறப்புக்கிட்டல்.

### விருச்சிக இராசி

எல்லாக்கிரகங்களும்இவர்களுக்கு நற்பலன் தீப்பலன் இரண்டையும் விளைக்க இயலாதநிலையில் இவ்வாரம் இருக்கும். ஆயினும் சந்தோஷத்துடன் துக்கமும், வருவாயுடன் செலவும் தேகபீடை வந்து நீங்குதலும், பிரயாணக்கஷ்டங்கள் பின் சுலபமாக முடிதலும்காணப்படும். தெய்வ வழிபாட்டுடன் இருப்பதும் வீண்முயற்சிகளில் ஈடுபடாது இருப்பதும் நலமாகும்.

### தனு இராசி

நல்லநண்பர்கள்சேர்க்கை எதிரிகள் பீடை, சந்தோஷம், தேகாரோக்கியம், முயற்சிகளில் சித்திகாணல், சுபிட்சம் காணல், சுபகருமக் கொண்டாட்டங்களில் பங்குகொள்ளல், நண்பருடன்-குடும்பத்துடன் தர்க்க விவாதங்கள்ஏற்படல், செலவுகள் அதிகரித்தல், வீண் பழிகேட்டல், உத்தியோகத்தர்களுக்கு சுப மாற்றங்கள்கிட்டல், வர்த்தகருக்கும் கமத்தொழிலாளருக்கும் நற்பலன் கிட்டல், பெண்களுக்கு செலவு அதிகரித்தல், மாணவருக்குகல்விச்சிறப்பு.

### மகர இராசி

முயற்சிகளில் வெற்றி, தடைப்பட்டவை சித்தியடைதல், இலாபம் கிட்டல், எதிரிகள் வீழ்ச்சி சொத்துச்சேர்க்கை, சுபகருமக் கொண்டாட்டங்கள் நடத்தல், அதிகார விருத்தி, கஷ்டபலன்கள் சிறிதளவு இருப்பினும் அவை வெளிக்காட்டாமை, கமத்தொழில்- உத்தியோகம் - வர்த்தகம்- கல்வித்துறையினருக்குசிறப்புப்பலன்கள் காணல், பெண்களுக்கு விவாகம்-கல்வி போன்றவற்றில் மனம்படிதல், பிறர் ஆதரவுகிட்டல்.

### கும்ப இராசி

இவர்களுக்கு கஷ்டமான பலன்கள் பல வழிகளிலும் காணப்படுவதால் கஷ்டமான நீண்ட பிரயாணங்களை விலக்கியும், வாகனஉபயோகங்களை கட்டுப்படுத்தவும், பிணைப்போதலைத் தவிர்க்கவும், தேகநலத்தைப் பேணியும்நடக்குக வர்த்தகத்தை- கமத்தொழிலை விஸ்தரிக்க வேண்டாம் பெண்கள் அமைதியாக இருப்பது நன்மை. மாணவர் மனச்சஞ்சலத்தை ஒதுக்கி கல்வியில சிரத்தை கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் பொறுமையுடன் இருத்தல் அவசியம்.

### மீன இராசி

இவர்களுக்கு இவ்வாரம் நன்மையான பலன்களிலும் கஷ்ட பலன்களே கூடுதலாகக்காணப்படுகின்றன. முயற்சிகளில் வெற்றி-பண வரவு காண்பதுபோல செலவும் நஷ்டங்களும் ஏற்படும். ஏமாற்றங்களும், பின்னிடைவுகளும், மதிப்புக்குறைதலும் உண்டு. தேக சுகத்தைப்பேணி நடக்குக. கமத்தொழில் விருத்தியிருப்பினும் தாயாதிகள் சச்சரவு பாதிக்கும். உத்தியோகத்தர்கள்- மாணவர்-வர்த்தகர் பெண்கள் மத்திம பலன் பெறுவர்.

# சிறகு வலைத் திருட்டு தடுக்க யோசனை

யாழ்ப்பாணம், ஞாயிறு ஒவ்வொரு ஊர்ச் சிறகு வலைக் கடற்தொழிலாளருக்கும் வெவ்வேறு நிற வலைகள் கொடுபட வழி மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் தமக்குச் சொந்தமில்லாத வேறு நிற வலைகள் வைத்திருப்பவருக்கு தண்டனை வழங்கக்கூடியதாகச் சட்டம் இயற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் பாஷையூர் அர்ச். அந்தோனியார் கடற் தொழில் சங்கத்தினர் உடுப்பிட்டி எம். பி திரு. எம். சிவசிதம்பரத்தைப் பேட்டி கண்டபோது எடுத்துக் கூறினர்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சார்பில் பேட்டியளித்த திரு. சிவசிதம்பரம் மேற்படி கடற்தொழில் சங்கத்தினரின் பின்வரும் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கு தாம் ஆவன செய்வதாக உறுதியளித்தார்.

விரைவாகச் செல்லக் கூடியதும் 'சேர்ச்லைட்' பொருத்தப்பட்டதுமான இயந்திரப் படகு யாழ்ப்பாணப் பொலிஸ்பகுதியினருக்குக் கொடுத்து இரவில் ரோந்து சுற்றிவர வசதியளிப்பது.

யாழ்ப்பாணத்தில் எப்பகுதியிலாவது செல்லும் கார்களைச் சந்தேகப்பட்டால் பொலிஸ் பகுதியினர் சோதனையிட்டு பாவித்த வலைகள் இருக்குமாயின் வலைகளைக் கைப்பற்றுவதுடன், வலைகளைக் கொண்டு செல்லும் வாகனத்தையும் பறிமுதல் செய்யக் கூடியதாக சட்டம் இயற்றநடவடிக்கை மேற்கொள்ளுதல். கார்ச்சாரதியின் லைசென்ஸையும் பறிமுதல் செய்ய வழி அமைத்தல். குறுலோன் நூல்மால் என்பன தரமுள்ளதாகவும், மலிவாகவும் அதிகமாகவும் இறக்குமதி செய்து சிறகுவலைத்தொழிலாளர் சங்கங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக ஒழுங்குகள் மேற்கொள்ளுதல்.

## தாமரைக்குளத்தில் மிதந்த சடலம்

பருத்தித்துறை, சனி துன்னாலையைச் சேர்ந்த ஆழ்வான் சின்னத்தம்பி என்பவரது சடலம்துன்னாலை வடக்கிலுள்ள தாமரைக் குளமொன்றில் மிதக்கக் காணப்பட்டது. இதுபற்றி இவரது தம்பியான ஆ. சிரம்பானும். மருமகனான க. செல்லையாவும் துன்னாலை கிராமசேவகர் திரு. தாமோதரம்பிள்ளைக்கும், பருத்தித்துறைப் பொலிஸாருக்கும் தகவல் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. இ. சு. இராமநாதன் மரண விசாரணை நடத்தினார். மரண விசாரணையின் போது இறந்தவருக்கு ஆறு அல்லது ஏழு வருட காலமாக மூளைக் கோளாறு இருந்ததென்றும் குளித்துக் கொண்டிருந்தபோது தண்ணீருள் மூச்சுத்திணறியதால் மரணம் சம்பவித்ததெனவும் தெரிவிக்கப்பட்டது. மூச்சுத்திணறியதால் மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இறந்தவரின் உடலில் சில பகுதிகளை மீன்கள் சாப்பிட்டிருந்தன.




## கொழும்பு

ஞாயிறு 27 - 2 - 66

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமியநற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரைஇசை, 8-00 தேர்ந்த இசை, 8-15 ஞானமிர்தம்.

344 மீற்றர் & 49 மீற்றர்

8-30 முத்திநெறி—சைவ சஞ்சிகை, 9-00 முஸ்லீம் நிகழ்ச்சி, 9-30 மெல்லிசை, 11-15 சிறுவர் மலர்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திலிருந்து.

இரவு 6-15 ஆலய அஞ்சல், 8-00 முஸ்லிம நிகழ்ச்சி, 9-15 பாட்டு - சகுந்தலா சிவராசா, 10-00 மாதர் கேட்டவை.

ஜீ. சி. ஈ. 1966

ஜீ சி ஈ பரீட்சையில் சித்தி அடைவது இலகுவாகிவிட்டது. அற்லஸ் ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்கள் உங்களுக்கும் சித்தியை நிச்சயம் தரக்கூடியன.

விபரங்கள் இலவசம்

தமிழ் மூலம் ஆங்கிலம்/சிங்களம்

தெளிவான தமிழ் விளக்கங்களுடன் எழுதப்பட்ட சிறந்த ஆங்கில சிங்கள பாடங்கள் அரிச்சுவடி தொடங்கி ஜீ. சி. ஈ. வரை எம்மிடம் உண்டு.

விபரங்கள் இலவசம்

தமிழ் சிங்கள அகராதி

சிங்களம் கற்க மிகச் சிறந்த கை நூல்

விலை 4-50
த. செ. 1-00
சகல விபரங்கட்கும்

அற்லஸ் ஹோல்
லிமிட்.,
723 மருதானை ரோட்,
கொழும்பு
தொலைபோசி இல. 9759.

உஷாயர் கிறீக்கோ!! நூற்றுக்குநூறு சுத்தமான

உஷாயர் கிறீக்கோ கோப்பி

ஜோன் கிறீன் கம்பெனியாரால் உத்தரவாதத்துடன் தயாரிக்கப்பட்டது

நிறம் மணம் குணம் நிறைந்தது

நம்பிக்கையுடன் வாங்குங்கள்
தினமும் உல்லாசமாய் அருந்துங்கள்

ஜோன் கிறீன் அன் கோ.,

66, வோல்லிலேன், — முகத்துவாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டில்
அல்வாய் தெற்கு கந்தர்
சுப்பர் செல்லையா
— வழக்காளி

இல. 8919

எதிராக

1 அல்வாய்தெற்கு நாகர் சுப்பர் செல்லையா
2 ஷெயூர் தற்காலம் அரசாங்க ஆஸ்பத்திரி வவனியா கதிர்காமு கந்தசாமி
3 அல்வாய் தெற்கு பெண் சிவபாக்கியம்
4 ஷெ வேலுப்பிள்ளை சிவகுரு
5 ஷெ கந்தன் கணபதி
6 ஷெ கந்தன் ஆழ்வான்
7 ஷெ வல்லியப்பர் சோமசுந்தரம்
8 ஷெ பெண் விசாலாட்சி
9 ஷெ தினகரிப்பிள்ளை வல்லிபுரம்
10 ஷெ பெண் தங்கம்மா
11 புலோலி தெற்கு வல்லியப்பர் ஏரம்பு
12 புலோலி மேற்கு ஆள்வார் இராமு
13 அல்வாய் தெற்கு சங்கரப்பிள்ளை வடிவேலு
14 கட்டைவேலி கிராம சபை
15 அல்வாய் தெற்கு சின்னையா சிவலிங்கம்
16 ஷெ பெண் சரஸ்வதி
17 ஷெ கந்தையா கைம் பெண் தெய்வானை
—எதிராளிகள்

அல்வாய் நீலகுட்டியார் குறிச்சியிறை நாவலடி நில. பர 20 7/8 என்னும் ஆகனம் 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச்சட்டத்திற்கமைய மேற்படிகோட்டில்மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல்வழக்குத் தொடர்ந்திருக்கிறதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்சில் எதிரகள் மேற்படி கோட்டில் 1966-ம் வருஷம் பங்குனி மாதம் 9-ந் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி
(ஒப்பம்)
மு. ஸ்ரீபத்மநாதன்
கோட்டு லிகிதர்
1966-ம் ஞு மாசி மீ 11வ

### மணிப் பிரதிஷ்டை

அச்சுவேலி, ஞாயிறு
உடுவில் கிழக்கு கற்பக விநாயகராலயத்தில் சமீபத்தில் மணிப்பிரதிஷ்டைசிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் பல அடியார்கள் பங்குபற்றினர்.




உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கிளப்புகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 'பி' பிரிவும், குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் காரசாரமாக மோதிக்கொண்டன. ஆரம்பத்தில் இருந்து முடிவு வரை அரியாலைக் கோஷ்டியினரை குருநகர் கோஷ்டியினர் சுற்றிவளைத்து படாதபாடு படுத்தினர். இடைவேளைக்குமுன் நடந்த போட்டியில் அரியாலைக் கோஷ்டியினர் இயன்றளவு விட்டுக் கொடுக்காமல் விளையாடினர். எனினும் குருநகர் கோஷ்டியின் முன்னணி வீரரான கிளைவ் மிகவும் சாதுரியமாக முதலாவது கோலை வெளுத்துவாங்கினுர். அரியாலை முன்னணி வீரர்கள் கோல்கள் போடுவதற்கு பல தடவை முயன்றும் அது குருநகர் பின்னணிவீரர்களிடம் பலிக்கவில்லை. இடைவேளையின்போது அரியாலை ஒன்றும் எடுக்காதவகையில் குருநகர் ஒரு கோல் பெற்றிருந்தது. இடை வேளைக்குப்பின் நடந்தபோட்டியில் அரியாலை வீரர்களின் விளையாட்டு அவ்வளவு எடுபடவில்லை. அடுத்தடுத்து அந்தோனிப்பிள்ளை, ஸ்வீன் என்னும் வீரர்கள் ஆளுக்கொரு கோல்கள் போட்டார்கள். எனினும் மேலும் மேலும் எதிர்க்கோஷ்டி கோல்களை அடிக்கவிடாதவண்ணம் அரியாலை பின்னணி வீரர்களான நந்தகுமாரும். குகவரதராசனும் அருமையாக விளையாடினர். குருநகர் கோஷ்டியில் கிறேசியன், ஜேசுதாசன் ஆகியோரின் விளையாட்டு பாராட்டக் கூடியது. இப்போட்டி முடிவில் குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகம், அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 'பி' பிரிவை 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டி பண்ணை மைதானத்தில் நடைபெற்றது.

ஆசிரியருக்குக் கடிதம்

## யாழ்ப்பாண நகரம்

தற்கால நகரம் என்று அழைக்கக்கூடிய அளவுக்கு யாழ்ப்பாண நகரம் வளரவில்லை என்பது யாவராலும் ஒப்புக் கொள்ளக்கூடியது. அளவு, மக்களுக்கு அளிக்கும் சௌகரிய சாதனங்கள் என்பவற்றை அளவுகோலாக எடுத்துச் சீர்தூக்கும் போது யாழ்ப்பாண நகரை நகரம் என்று அழைப்பதற்கே அருகதையற்றது என்று சொன்னல் ஒருவரும் கோபப்படமாட்டார்கள். இருந்தபொழுதிலும் இலங்கைவாழ் தமிழ் மக்கள் கூடுதலாக வாழும்பகுதியின் தலைப்பட்டினம் என்ற பெருமையை உடையது அது. இப்படிப் பெருமை வாய்ந்த நகரம் பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டு நாலு விஷயங்களில் அசிரத்தை காரணமாகவோ, அல்லது பணக்கஷ்டம் காரணமாகவோ திட்டமான கொள்கை வகுத்து, திடமாக நடந்து கொள்ளாதது மனவருத்தத்திற்குரியது. குறிப்பிட்ட நாலு விடயங்களாவன:- பொதுச் சந்தை, பஸ்நிலையம், பொது நூல்நிலையம், பொதுவிளையாட்டரங்கம்என்பவையே.

பொதுமக்கள் ஒருசில நிமிடங்களில் தேவையான பொருட்களை வாங்கக்கூடிய முறையில் பொதுச்சந்தை அமைந்திருத்தல் வேண்டும். கல்கத்தாவிலுள்ள புதுச்சந்தையையும் சென்னையிலுள்ள மூர்மார்க்கட்டையும் பார்க்க நேர்ந்தவர்கள் நல்லமுறையில் அமைக்கப்பட்ட சந்தை இருப்பதினால் நுகர் பொருட்கள் வாங்குவது எவ்வளவு சுலபம் என்பதை அறிவர். மேற்காட்டிய சந்தைகளைப்போல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நீண்டகாலத்திட்டத்தின்கீழ் அமைக்க முயற்சி செய்யலாம் மாநகரசபை.

பஸ் நிலையத்தைப் பொறுத்தவரையில் இ. போ. ச. வும், மாநகரசபையும், மத்திய அரசாங்கமும் சேர்ந்து ஒன்றுக்கொன்று விட்டுக் கொடுத்து நடடிக்கை எடுத்துக்கொள்வது சகலவிதத்திலும் விரும்பத்தக்கது. இப்படிச்செய்தால் அமைப்பதும், அழிப்பதும், கட்டுவதும், இடிப்பதும் போன்ற வேண்டாத வேலைகளைத் தடுத்துக்கொள்ள வழி செய்யும். இங்கே யாழ்ப்பாணப் பொதுச் சந்தை பட்ட பாட்டை வாசகருக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

நாகரீகமான வாழ்வை அமைத்துக்கொள்ள நூல் நிலையம் எவ்வாறு பயன்படும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை. நூல்நிலையம் முதற்றரமான நூல்நிலையங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடியளவு கவனித்துக்கொள்ளப்படவில்லை. கட்டிடம் கட்டியதன்பின் பராமரிப்புச் செய்யப்படாது காணப்படுகிறது. நூல்நிலையவளவு துப்புரவாகவும், கவர்ச்சியாகவும் காணப்படவில்லை. உள்ளேயும் சில குறைகள் காணப்படுகின்றன. இக் குறைகளை நீக்க மாநகரசபை முன்வரவேண்டும்.

பகிரங்க விளையாட்டுத் திடலும் சீரிய முறையில் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படவேண்டும் என்பதை விளையாடுபவர்களும் விளையாட்டுப் பிரியர்களும் ஏனையோரும் விரும்புவர். தற்போதுள்ள விளையாட்டு மைதானம் நன்ருக அமைக்கப்பட்டிருக்கிறது, இருந்தும் மழை, வெய்யில் தாக்காதவாறு இரசிகர்கள் இருந்து பார்ப்பதற்கு வசதியில்லாது இருக்கிறது. ஸ்ரேடியம் கூரை போடப்பட்டு இருப்பதை யாவரும் விரும்புவர். இதற்காக ஏற்படும் செலவை ஸ்ரேடியம் நிதி என ஒன்றை மேயர்தொடக்கிச் சரிக்கட்டிக் கொள்ளலாம். இவ்விடயத்திலும் மாநகரசபை சிரத்தைஎடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

வி அரியநாயகம்
மன்னுர்.

## வரி விளம்பரம்

### தேவை

லங்கா புகையிலை இன்டஸ்ட்ரீஸ் ஸ்தாபனத்தாரின் சிகரட்டுகளை சயிக்கிலில் சென்று விற்பனை செய்வதற்கு நல்ல அனுபவம் நிறைந்த விற்பனையாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில். 27-2-66 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 5 மணிக்கிடையில் நம்பர் 74/3 கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம் 1979

பிரபல நாட்டியக் கல்லூரிக்காக பரதநாட்டிய ஆசிரியை தேவை. தராதரப் பத்திரங்களுடன் எதிர்பார்க்கும் சம்பளம் என்ன என்பதையும் குறித்து, விளம்பர இல: 1982 ஈழநாடு மே/பா என எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1982

### வைத்தியம்

தொய்வு, க்ஷயம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய யாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர் வைத்தியர் பரிபூரணனந்தா கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

மெயின் வீதியில் இரண்டாம் குறுக்குத்தெரு சந்தியில் வியாபாரத்திற்கு ஏற்ற சாய்ப்புக் கட்டிடம் வாடகைக்கு உண்டு. பிறக்டர் கனகரட்ணம் சிவஸ்தான். ராஜ வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1961

### கல்வி

இலங்கையின் தரமுயர்ந்த தபால்மூலம் கல்வி ஜி. சி. ஈ. சாதாரணம் / உயர்தரம். ஜி. ஏ. கியூ. / பி. ஏ. 22 ஸ்கொலசிப்புகள் வழங்கப்படும். ஐக்கியகலாசாலை, நெல்லியடி / கரவெட்டி. 1881

### விற்பனைக்கு

நல்ல நிலைமையில் இயங்கும் சோடா பக்ரறி சகல தளபாடங்களுடன் விற்பனைக்குண்டு விபரம்: சண்முகம் ஸ்ரோஸ், உரும்பிராய். 1980

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் நாவலர் ரேட்டு—அத்தியடி ரேட்டு சந்தியில் ஒரு துண்டு நிலமும் அதிலுள்ள 264-ம் இலக்கக் கடையும் தளபாடங்களும் விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு சு. இரத்தினசிங்கம், 91, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 1981

கெஸ்ரினர் (Gestetner) 105 சுழலும் அச்சு (Mechine) யந்திரம் விற்பனைக்கு உண்டு. அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நேரில் பார்வையிடலாம். விபரங்களுக்கு: காரியதரிசி, இலாபநிதிச் சங்கம், வழக்கம்பரை, சுழிபுரம். 1975

திறமான, புதுப்பித்த டயர்கள், கார், லொறி, டிருக்ரர் முதலான வாகனங்களுக்குரிய சகல அளவிலும் விற்பனைக்கு இருக்கிறது. சிற்றி ரையர் ஸ்ரோர்ஸ், No. 6. ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். 1969

4 அல்லது 5 பரப்பு காணி நல்லூர் செட்டித்தெருவில் கந்தசுவாமி கோவிலுக்குக் கிட்ட விற்பனைக்குண்டு, தரகு தேவையில்லை. விபரங்களுக்கு தியாகராசா, 310, நாவலர்ரேட், நல்லூர், யாழ்ப்பாணம். 1960

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

### நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ற்சி அறவே பயனற்றதாகி விட்டதென்று இந்திய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஏ.கே. சந்தா கமிட்டி தெரிவித்திருக்கிறது. கிராமிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் அதே சமயத்தில் கிராமத்தவர்கள் கேட்பதற்காக அரசாங்கத்தினுல் உதவப்பட்ட ஒரு வானெலிப் பெட்டி பத்திரமாகப்பூட்டி வைக்கப்பட்டிருந்ததை இந்தக் கமிட்டியார் ஓரிடத்தில் கவனித்தார்களாம்.

அடுத்த ஏழு வருடங்களுக்குள் இந்தியா அடங்கிலும் டெலிவிஷன் கொண்டுவரப் படவேண்டுமென்றும் அதை ஓர் அரசாங்க இலாகாவின் ஆதிக்கத்துக்குள் அடக்கி வைக்காமல் விரிந்தநோக்குடன் சுதந்திரமாக செயலாற்றுவதற்கு ஒரு கோப்பரேஷன் அமைக்கப்படவேண்டுமென்றும் அந்த கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. சந்தா கமிட்டியின் அறிக்கையை வாங்கி வாசிக்குமாறும் நமது வானெலி விசாரணைக்குழுவுக்கு சிபார்சு செய்யவிரும்புகிறேன்.

- வழிப்போக்கன்

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
○ பெனியன்
○ ஸ்போட் சேட்
○ ரி சேட்
● ரெறி சேட்
● ரெறி பிளவுஸ்
● பேபி வெஸ்ட்
● காலமேஸ் (Nylon & Cotton)
லேடன் காமென்ஸ்
32A, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்
உவாட் அன் டேவி
( ஆங்கில மருந்துச்சாலை )
148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேடப்பட்டு வந்த நபர் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு வீடு உடைத்தல், திருட்டு முதலிய குற்றங்களைச் செய்ததாகச் சந்தேகிக்கப்பட்டவரும், பல காலமாகப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவருமான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவர் நேற்று மாலை கிளிநொச்சியில் யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் கனகரத்தினம், பொலிஸ் கான்ஸ்டபிள் தயானந்தா ஆகிய இருவராலும் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார்.

இந்த நபர் பலமுறை சிறை சென்றதாகவும் இவர் பல பொலிஸ் நிலையங்களால் தேடப்பட்டு வந்ததாகவும் அறியப்படுகிறது. (ந. நி)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜா தேவி
நடித்த
கல்யாண பரிசு

REGAL--JAFFNA
NOW SHOWING
Gregory Peck, Anthony Quinn
in
Guns of Navarone
( Cinemascope - Color )

## 'வாழ்க்கைக்கு உதவும் கல்வி தேவை'

யாழ்ப்பாணம், ஞாயிறு 'இலங்கையில் ஏராளமான படித்த இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரையும், வாழ்க்கையில் உபயோகமான சிறந்த முறையில் நடக்கக்கூடியவிதமாக வழிப்படுத்தவேண்டும்''

வண்ணார்பண்ணை கில்னர் மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கரத்தரங்கு ஒன்றில் ஆசிய நிதி ஸ்தாபனத்தின் பிரதிநிதி திரு. ஜேம்ஸ். எச். நோயிஸ் ஆரம்ப உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண இளைஞர் சமூக, பொருளாதார முன்னேற்றச்சங்கத்தின் ஆதரவில் ''பாடசாலைகளில் தொழிற் கல்வி'' என்னும் பொருள்பற்றி நடந்த இக் கருத்தரங்கில் திரு. கே. நேசையா, திரு. ஈ. ராஜரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

திரு எஸ். யூ. சோமசேகரம் தலைமையுரையில் கூறியதாவது:-

ஆசிய நிதியுதவி ஸ்தாபனம் இலங்கைக்கும் மற்றும் பல நாடுகளுக்கும் உதவியளித்து வருகிறது. இன்று நடைபெறும் கருத்தரங்கை ஆசிய நிதியுதவி ஸ்தாபன பிரதிநிதி ஆரம்பித்துவைப்பது மிகப்பொருத்தம். பாடசாலைகளில் தொழிற் கல்வி என்னும் பொருள்பற்றியே கருத்தரங்கு நடைபெறுகிறது. கல்வித்திட்டத்தை மாற்றியமைத்து, மாணவர்கள் தாங்கள் விரும்பிய தொழில் பயில வழிவகுக்க வேண்டும். நாம் சுதந்திரமடைவதற்குமுன்பு ஆங்கில நிர்வாகமே நடைபெற்றது. சுதந்திரமடைந்தபின் வித்தியாசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அதற்கு ஏற்றபடி மாணவர்கள் குறிப்பிட்ட தொழில் பயில்வது அவசியம். கூடியசம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் தங்கள் தொழிலில் அக்கறைப்படாதவர்களாயிருப்பதைக் காண்கிறோம். ஆதலால் ஒவ்வொருவரும் தங்கள் எதிர்காலம் சிறக்க குறிப்பிட்ட தொழிலைப் பயில வேண்டும்.''

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
பொலிஸ்காரன் மகள்
தினசரி 4-15க்கு மட்டும்
பிறிமிடிவ் லண்டன்
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

### விஞ்ஞான முன்னேற்றம்

திரு. கே. நேசையா பேசும்போது கூறியதாவது:-

எல்லாவகையான கல்வியும் உத்தியோகத்திற்காகத்தான். இரண்டாவதாக எல்லாவகையான கல்வியும் வாழ்க்கைக்காகத்தான். மூன்றாவதாக எல்லாவிதமான கல்வியும் சமூகத்தில் சீராக வாழ்வதற்கு. இளம் சந்ததியினர் நல்ல அறிவு வளர்ச்சியுடையவர்களாக இருக்கின்றார்கள். கடந்த சில வருடங்களாக விஞ்ஞானம் அதிக முன்னேற்றம் அடைந்திருப்பதுதான் இதற்குக் காரணம். ஒவ்வொருவருக்கும், சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றங்களில் சமபங்குண்டு. இளைஞர்களுக்கும் அதே பங்குண்டு

எதிர்காலத்தில் புதுவகையான தொழில்கள் காத்திருக்கின்றன. மேல்நாடுகளில் கைத்தொழில்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டதன் காரணமாக பல புதிய தொழில்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

சுவீடன் போன்ற நாடுகளில் சாதாரண கிராமப்புறத்தில் உள்ளவர்கள்கூட விஞ்ஞானத் தொடர்பின்றி வாழமுடியாது.

இலங்கையில் மற்ற நாடுகளிலும்பார்க்க மாணவர்கள் விஞ்ஞான பாடத்தை விரும்புவது குறைவு. ஐக்கிய அமெரிக்கா, சீனா போன்ற இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் விஞ்ஞானப் பகுதி மாணவர்களுக்கே அதிக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நாலில் ஒரு பகுதியே விஞ்ஞானபகுதி மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தகுதியற்ற கலைப் பகுதி மாணவர்களால் விஞ்ஞானப்பகுதி மாணவர்கள் வெளியில் நிற்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களையும் அவர்கள் விருப்பப்படி பாடங்களைத் தெரிவு செய்ய விடவேண்டும்.

சுவீடினில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேல்பிரிவாக வகுப்புகள் பிரிக்கப்பட்டுள்ளன. மேற்பிரிவில் எல்லா மாணவர்களுக்கும் விஞ்ஞானம் போதிக்கப்படுகிறது. அத்துடன் மூன்று பாஷைகள் அங்கு போதிக்கப்படுகின்றன. பின்லாந்து, ஹாலந்து ஆகிய நாடுகளில் 4 பாஷைகள் போதிக்கப்படுகின்றன. சுவீடனில் மத்திய பிரிவில் எல்லோருக்கும் சமூகசேவையும், மேற்பிரிவில் எல்லோருக்கும் குடியியலும் போதிக்கப்படுகின்றன. அங்கு பாஷைகளில்

பாதிப்பேர் மூன்று வாரம் தொழிற் பயிற்சி பெறுவார்கள். நியூயோர்க்கில் கூட்டுறவுக்கல்வி அதிக பலனளிப்பதைக் காணலாம். இக் கல்வி முறை சுவீடினிலும் பார்க்கச் சிறந்தது. 16 வயதுள்ள மாணவர்கள் தங்கள் நேரத்தில் 50 சதவீதத்தைப் பாடசாலையிலும், 50 சதவீதத்தை தொழிற்சாலையிலும் கழிப்பார்கள். அங்கு தொழிற் கல்வியை மற்றப் பாடங்களுடன் இணைக்கச் செய்துள்ளார்கள்.

திரு. ஈ. ராஜரத்தினம் பேசும்போது கூறியதாவது: எதிர்காலதில் சிறந்த பிரஜைகளை உருவாக்குவதற்காகத்தான் பாடசாலைகளில் தொழிற் கல்வி அவசியமாகிறது. உத்தியோகத்தை மனதில் கொண்டுதான் மாணவர்கள் பயில்கின்றார்கள். விஞ்ஞானப்பகுதியில் பயிற்சிபெற்றால் தொழில் பெறமுடியும் என்பதற்காகத்தான் மாணவர்கள் விஞ்ஞான பகுதியை நாடுகின்றனர். தற்பொழுது ஒரு சாதாரண வேலைக்கு எஸ். எஸ். ஸி தராதரம் கேட்கப்படுகின்றது. எல்லோரும் குறிப்பிட்ட ஒரு தொழிலை விரும்பி பயிலாமல் உத்தியோகத்திற்காகப் பயில்வது இறுதியில் பயனளிக்காது. பாடசாலைகளில் கூட்டுறவு முறையில் பணியாற்றினால், அது மாணவர்களுக்கு ஒரு பொழுதுபோக்காகவும், பணம்பெறக் கூடியதாகவுமிருக்கும்.

திரு. சத்தியநாதன் நன்றியுரை கூறினார்.

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை), மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

27.2.66



இதுவரை ஹாஸ்ய பாத்திரங்களில் நடித்துவந்த நாகேஷ் இப்படத்தில் கதாநாயகனாகத் தோன்றி மிகவும் அற்புதமாக நடித்திருக்கிறார்.
நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ
சர்வர் சுந்தரம்

## வீர சவர்க்கார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அழியாப்புகழ்பெற்ற வி. டி. சவர்க்கார் 1883-ம் ஆண்டு பிறந்தார்.

இங்கிலாந்தில் இருந்தபோது புரட்சிக் குழு ஒன்றை அமைத்த சவர்க்கார், சிப்பாய்க்கலகம் என்று ஆங்கில சரித்திராசிரியர்களால் வருணிக்கப்பட்ட 1857-ம் ஆண்டு 'சிப்பாய்க்கலகத்தை' விடுதலைப் போர் வரலாறு என்ற புகழ்பெற்ற மராத்தி நூலாக எழுதினார்.

பின் இதே நூலை தாமே ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இங்கிலாந்தில் வெளியிட்டார். உடனடியாக அது தடைசெய்யப் பட்டது. எனினும் இத்த நூலின் மூலம் இந்தியாவின் தேசிய ஆன்மாவை முதலில் கண்டறிந்தவர் என சவர்க்கார் புகழ்பெற்றார்.

நாஸிக் சதிவழக்கில் பங்கு கொண்டதன் காரணமாக அவர் கைதுசெய்யப்பட்டு 50 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார். அந்தமானில் கடுங்காவலில் வைக்கப்பட்ட அவர் பின்பு ரத்னகிரியில் சிறைவைக்கப்பட்டார். 1937-ம் ஆண்டு அவர் விடுதலை செய்யப்பட்டார்.

கவிதை, கட்டுரை, நவீனம் ஆகிய துறைகளில் 40 நூல்களை அவர் எழுதிப் புகழ்பெற்றார்.

'எனது தேசப்பிரஷ்ட கதை' என்ற தலைப்பில் அவர் எழுதிய நூல், வரலாற்றுப் புகழ்பெற்றது.

அவரது 'சுதந்திர யுத்தம்' சம்பந்தமான நூல் இந்தியமொழிகளில் பெயர்க்கப்பட்டது. ஆனால் வீரக்கனல் கக்கும் இந்த நூல் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்டது. ''எரிமலை'' என்ற தலைப்பில் அவரது நூல் தமிழிலும் வெளியானது.

நாஸிக்கொலைச் சதி வழக்கில் சவர்க்கார் இங்கிலாந்தில் கைதுசெய்யப்பட்டு கப்பலில் கொண்டுவரப்பட்டபோது, மார்செய்ல்ஸில் வைத்துக்கடலில் குதித்து நீந்தித்தப்பினார். ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டு அந்தமான் தீவில் அவர் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார். அவர் கப்பலில் இருந்து தப்பிய சாகஸத்தை உலகப் பத்திரிகைகள் முதல்பக்கக்கொட்டை எழுத்துக்களில் பிரசுரித்தன. அதுமுதல் அவர் வீர சவர்க்கார் என அழைக்கப்பட்டார்.

## நாட்டில் 5 பல்கலைக்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வுக்குப்பதிலாக வேறு தனி சர்வகலாசாலை நிறுவப்படும் என்றும் கல்விமந்திரி கூறினார்.

### மந்திரிகள் ஆராய்வர்

பல்கலைக்கழகக் கல்வி முறையில் சில சீர்திருத்தங்கள் கொண்டுவரும் திட்டத்தை மந்திரிசபை ஆராய்வதாயும் ஏற்கப்பட்டபின் அது அமுலுக்கு வரும் என்றும் அவர் தெரிவித்தார். மாணவர்களிடம் காணப்படும் கல்வி கற்கும் ஆவலையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்ய உயர் கல்லூரிகள் சில கனிட்ட சர்வகலாசாலைகளாக்கப்படுவதற்கு வெகு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

### உயர் கல்விசபை

உயர்கல்வி தேசியசபை ஒன்று ஸ்தாபிக்கப்படவிருப்பதாகக் கூறிய கல்விமந்திரி உயர்கல்வி சம்பந்தமான திட்டங்கள், கொள்கைகள் ஆகியவற்றை அது நிர்ணயிக்கும் என்றார். இச்சபைக்கு சர்வகலாசாலைக் கமிஷனின் அதிகாரம் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

சர்வகலாசாலை ஸ்தாபிக்கப்படும் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டிருப்பதாயும், பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதன்மூலம் அவை ஸ்தாபிக்கப்படும் என்றும்கல்விமந்திரிகூறினார்

## அரசியல் சட்டமா ....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது நேரத்துக்கு ஒத்திவைக்கலாம்.

டாக்டர் என். எம். பெரேரா:- முன்னறிவித்தல் இல்லாமல் எப்படி நாம் புதிய பிரேரணை ஒன்றை பரிசீலனைக்கு எடுக்க முடியும்?

திரு. கெனமன்:- நான் அரசாங்கம் செய்யவேண்டிய சுலபமான வழியைக் கூறட்டுமா? முதலில் இந்தப் பிரேரணையை வாபஸ் பெறட்டும் இரண்டாவது எதிர்க்கட்சியினருடன் கூட்டத்தை நடத்தி இலங்கையின் புதிய அரசியல் சட்டத்தின் நகலைத் தயாரிப்பதற்கான பொறுக்குக்கமிட்டியின் நியமனத்துக்கு வேண்டிய பிரேரணையைக் கொண்டுவரட்டும். அதை இன்று செய்யமுடியாது. மற்றொரு பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றி அதன்பின்னர் அங்கத்தவர்களை நியமிக்க வேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில் இதே அங்கத்தவர்களை ஏற்றுக் கொள்ளத்தயார். ஆனால் அரசியல் சட்டத்தை திருத்தியமைப்பதற்கான பொறுக்குக் கமிட்டிக்கல்ல. இதுதான் எமது கோரிக்கை.

திரு. சில்வா:- தற்போதுள்ள பிரேரணை எதிர்க்கட்சியினருடன் கலந்தாலோசித்துத்தான் கொண்டுவரப்பட்டது. 4 மணிக்கு மறுபடியும் அவர்களுடன் ஒன்றாக அமர்ந்து புதிய பிரேரணையைத் தயாரிக்கலாம் அதை எதிர்பார்த்து விவாதத்தை ஒத்திவைக்கச் சம்மதிக்கிறேன்.

டாக்டர் என். எம்.:- அது சரி.

திரு. ஜெயவர்த்தன:- விவாதத்தை ஒத்திவைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
வாரமலர்

## எனக்குறக்கம் இல்லை!

— மு. சடாட்சரன் —

எனக்குறக்கம் இல்லையடா இனியவனே நண்பா!
இதயத்தில் பொங்கியெழும் இன்னுணர்வை மொண்டு;
மனித இனம் உய்ந்திடுமோர் மார்க்கமதை நாடி;
மனம்மகிழச் செல்கின்றேன் மன்னவனின் முன்னல்!
உணவுண்டே உடல்பேண ஒருபோதும் எண்ணேன்!
உண்மையினைப் பொய்யாக்கி உயிர்மாய மாட்டேன்!
தினவெடுக்கும் தோளிலுயர் தேன்குடத்தைத் தூக்கி,
தேய்ந்துலையும் சீவனுக்கே ஊற்றிவருகின்றேன்!

காலமெலாம் இப்பணியை நான்சதமென் றெண்ணி
கடலலைமேல் படகேறிப் பாய்விரித்தேன் நண்பா!
கோலநிலா வந்துமுகம் காட்டிமயல் ஊட்ட;
கோதையெனை வீழ்த்துவதற் கூடல்செயும் வேளை,
நீலநெடு வான்வெளியில் நின்றழியும் விண்மீன்,
நினைவுகளை மீட்டிவிட நான்தொடருகின்றேன்!
சோலையில்தேன் வண்டுகளாய்ச் சுதந்திரத்தை நாடி,
சுகிர்த்திருக்கப் போகின்றேன் சோர்ந்துவிழ
மாட்டேன்!

நோக்கமெலாம் பாதையிலே தேக்கியதால் நண்பா!
நோய் செய்யும் ஆசைவழி போயலையா துள்ளம்!
தாக்குகிருள் என்நெஞ்சைத் தையல்விழி வேலால்;
தாகமவள் தீர்ப்பதுவா? நான் சுணங்க மாட்டேன்!
நீக்கமற நாயகனைச் சேர்ந்துவக்க வேண்டி,
நித்தியத்தை நம்பியொரு பாலமமைக் கின்றேன்!
ஏக்கமெலாம் இதையெண்ணி இரவுபகல் யாவும்,
எனக்குறக்கம் இல்லையடா இனியவனே நண்பா!

# இலங்கையில் மீன்பிடித் தொழில்

கடலில் உள்ள மீன்கள் முதலிய பொருட்களை விற்று வருவாயை ஏற்படுத்திக் கொள்ளுதல் கடற்கரையோரங்களில் வாழும்மக்கள் இன்றும்செய்துவரும்தொழிலாகும். இது மக்களின் பழமைவாய்ந்த தொழில்களில் ஒன்று.

மனிதனுக்கு உடல் வளர்ச்சிக்கு வேண்டிய சத்துக்கள் மீனிலும் பெருமளவு இருக்கின்றபடியால் மனிதன் மீனையும் தனது உணவுடன் சேர்த்துக்கொண்டான் போலும்.

இன்று மனித இனம் புற்றீசல்போல் பெருகிக்கொண்டுவரும் வேகத்தில் மனிதனுக்கு வேண்டிய எல்லா வகைப் பொருள்களின் உற்

**கைத்தொழில் அரங்கு**

பத்தியிலும் அதிகரிப்பை ஏற்படுத்தவேண்டிய நியதி தினமும் வளருகின்றது மீன்பிடித்தொழிலைப் பொறுத்தமட்டில் இலங்கையிலிருந்து பெருந்தொகையான பணம் கருவாடு, தகரமீன், மீன் எண்ணெ போன்றவை வாங்குவதற்காக வெளிநாடுகளுக்குச்செல்லுகிறது பரந்த கடல்நடுவேஇருக்கும் நமக்கு இக்கதியா ஏற்படவேண்டும் என எண்ணத்தோன்றுகிறதல்லவா?

கடந்த காலங்களில் நம் நாட்டில் மீன்பிடித்தொழிலுக்கு பல தடைகள் இருந்து வந்தபோதிலும் இப்போது அத்தடைகள் நாளுக்குநாள் நீங்கி துரித முன்னேற்றமாய் வருகிறதெனலாம். இலங்கையின் கரையோரங்களில் மிகவும் சிறந்த மீன்பிடித் தளங்கள் இருக்கின்றன. இவற்றில் விரிவானமுறையில் மீன்பிடித்தொழிலை நடத்துவதோடு, ஜப்பானிய முறையைக்கையாண்டு, கணவாய், ஆமை, இருல், நண்டு ஆகியவற்றை வளர்த்து இனம் பெருக்கவும்முடியும்.

### பழைய முறையில் ஊறிக்கிடக்கின்றனர்

இலங்கையில் இன்னும் கடற்தொழிலாளர்கள் பழைய முறையையே கைவிடாது கடைப்பிடித்து தொழிலை நடத்துவதால் இவர்கள் அதிக இலாபம் கிடைக்கக்கூடியளவு மீன்களைப்பிடிக்க முடியாது கஷ்டப்படுகிறன்றனர். இவர்கள ட்ேளர் (Trawler) மோட்டார் படகு, நவீன வலைகள் போன்றவைகளை உபயோகித்துப்பலன் பெறத்தகுதியற்றதற்கு முக்கியகாரணம் பணமுடையேயாகும்.

### மீனவர்படும் கஷ்டங்கள்

இலங்கையில் கடற்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் யாவரும் நிதி நிலைமையில் கஷ்டமுடையவர்களே என்ருல் மிகையாகாது. இவர்களிடம் போதிய பணமின்மையால் ஏதோ அன்ருட வாழ்க்கையைக் கவனிப்பதே முக்கியமானதாகக் கருதிக் கொள்கின்றனர். இரவு, பகல் எனவும் காற்று, மழை என்பனவும் பொருட்படுத்தாது கஷ்டப்பட்டு கடலிலே தஞ்சம் என வாழும் மீனவர்கள் சில நாட்களில் ஒரு மீனுமின்றிக் கரையை வந்தடைவர். சில நாட்களில் எதிர்பாராத அளவுக்குமேல் தொகையாகப் பிடித்துவிடுவார்கள். இப்படிச் சில நாட்களில் தொகையாகப்பிடித்துவிட்டாலும் மீனவர்கள் மனதில் நிம்மதியில்லை. பல கரையோரப் பகுதிகளில் போதிய போக்குவரத்தின்மையால் சந்தைப்படுத்த முடியாமையாலும், போதிய பணமின்மையால் குளிர்ப் பெட்டிச் சாதனங்களைக்

**பி. இராஜரத்தினம்**

கொண்டுபக்குவப்படுத்த முடியாமலும்கஷ்டப்படுகின்றனர்.

### என்ன செய்யலாம்?

இக்கஷ்டங்களை ஓரளவுக்கு நன்கு ஆராய்ந்துணர்ந்த மீன்பிடிஇலாகா, இக்கஷ்டங்களை நீக்கி வருகின்றதென்ருலும் குறிப்பான அளவு முன்னேற்றம் நம் நாட்டுக் கடற்தொழிலில் இன்னும் ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். மேலும் பல மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலைகளை நம் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக சிறந்த மீன்பிடித் தளங்களுக்குக் கிட்டவே நிறுவுவதன்மூலம் அநேக இளைஞர்கள் நல்ல பயனை அனுபவித்துக் கொள்ளவும் வேலையில்லாப் பிரச்னையை வெகுவாகக் குறைத்துக் கொள்ளவும் நம்நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் மாறுதல்களை ஏற்படுத்தவும் முடியும்.

மேலும் தரமான மீன் பிடித்தொழில் ஸ்தாபனங்களை நிறுவவும் அத்தளங்களுக்கருகாமையில் மீன் சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தவும் முயற்சியெடுக்க வேண்டும். இத்தொழிற் சாலைகளில் மீன்களைப் பக்குவப்படுத்தல் மீன்எண்ணெய் தயாரித்தல், மீனைப்பக்குவமான முறையில்தகரங்களில் அடைத்தல் போன்ற பல பிரிவுகள் நிறுவப்படமுடியும். இவற்றை வெளிநாட்டு நிபுணர்களுடன் ஆரம்பிப்பதுடன் திறமையான இளைஞர்களை, கனடா, யப்பான் போன்ற மீன்பிடித்துறையில் பெயர் பெற்ற நாடுகளுக்கு அனுப்பிப்பயிற்றுவிக்கலாம்.

நம்நாட்டில்பலபணம்படைத்தோர் தாங்களும் அனுபவியாது, மற்றவர்களையும் அனுபவிக்க முடியாத அளவில் பொருந்தொகையான பணங்களை முடக்கிவைத்திருக்கின்றனர். இதனுல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிய இடையூறு ஏற்படுகிறது. இவர்கள் தங்கள்பணத்தைகைத்தொழில்கள் மூலம் நாட்டின் புழக்கத்துக்கு விட்டால் எவ்வித நன்மைகள் ஏற்படும் என்பது நமக்குமட்டுமல்லாது பணத்தைப் பதுக்கிவைத்திருப்பவருக்குமே நன்கு புரியும் என்பதில் ஐயமில்லை.

### மீன் விற்பனை

இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள நியாயமான விலை மீன்விற்பனை நிலையங்கள் பொதுமக்களுக்கு மிகப் பெருமளவில் பயன்படுகின்றதென்பதை மறைக்க முடியாது தொழிலாளி பெறும் விலையையும், பொதுமக்கள் கொடுக்கும் விலையையும் ஒப்பிட்டுப்பார்ப்போமானல் இன்று நிலவும் விற்பனை முறையின் சீர்கேடுகள் நன்கு விளங்கும். தொழிலாளிக்குக் கிடைக்கும் பணம் சொற்பமே. அதே வேளையில் பொதுமக்கள் அதிகமான பணத்தை மீனுக்காகக் கொடுக்கிருர்கள். காரணம் இவ்விருபகுதியினருக்கும் இடையில் தரகர்கள் இருப்பதே. இவர்கள் கூடிய லாபத்தைத் தட்டிக்

(VIII-ம் பக்கம் பார்க்க)

## தத்துவ ஞானிக்கு தேவலோகஸ்தானம்

வோல்டேயர் என்றபிரபல பிரெஞ்சு தத்துவ ஞானிக்கு கடவுளில் நம்பிக்கையில்லை. ஒரு சமயம் அவர் ஜேர்மன் சக்கரவர்த்தியின் தர்பாருக்குப் போயிருந்தபோது தமது நாத்திகக் கொள்கையை விளக்கி, 'தெய்வ லோகத்தில் என்னுடைய ஸ்தானத்தை ஒரு ஜேர்மன் டாலருக்குக்கூட விற்கத் தயாராயிருக்கிறேன்' என்று வீம்பு பேசினர். இதைக் கேட்டுக்கொண்டிருந்தஒருபிரபு, 'ஐயாவே, ஒருவருடைய விலையுள்ள பொருள் அவருடைய உடைமை என்பதை நன்ருக அத்தாட்சிப் படுத்திக்கொண்டபின்னர் தான் நாங்கள் விலை பேசுவோம். உமக்கு தெய்வ லோகத்தில் இடமுண்டு என்பதைநிரூபிப்பீரானல் நான் ஒன்றல்ல ஓராயிரம் டாலர் கொடுத்து அதை வாங்கத் தயாராயிருக்கிறேன்' என்று சொன்னர்.

வோல்டேயர் அப்படியே ஸ்தம்பித்துப் போனர்.

## 'என்ன தம்பி, மெலிந்துபோனுய்?'

ஒருநாள் கொழும்பில் வேலைபார்க்கும் ஒரு நண்பர் லீவில் ஊருக்கு வந்திருந்தார். அவரைக் கண்டதும் ஓர் உள்ளூர் ஆசாமி, 'ஆ, தம்பி, எப்ப வந்தனீர்? என்ன ஆளே உருமாறிப் போய் நல்லாய் மெலிந்து போனீரே!' என்று குசலம் விசாரித்தார். அடுத்தகணம் அவருடைய முகத்தில் 'பளார்' என்று ஓர் அறை விழுந்தது! அந்த ஆள் வெலவெலத்துப்போனர்.

கொழும்புக்காரர் சிரித்துக் கொண்டே அவருடைய முதுகில் தட்டிக்கொடுத்து, 'எப்படியண்ணே! இப்பொழுது தெரிகிறதா, நான் மெலிந்து போயிருக்கிறேனு அல்லது திடகாத்திரமாயிருக்கிறேனு என்று?' என்று கேட்டுக்கொண்டு அப்பால் போய்விட்டார்.

கொழும்பிலிருந்து வந்தவராச்சே, அங்கேயெல்லாம் நேரத்துக்கு நல்ல சாப்பாடு கிடைக்குமோ என்று நினைத்து அனுதாபத்துடன் குசலம் விசாரிக்கப் போன அந்த மனிதனுக்கு இவர் இப்படி செய்திருக்கலாமா? என்று நான் ஒரு கணம் யோசித்தேன் பிறகு அவர் அந்த மாதிரி மறுமொழி கொடுத்ததிலும் ஓர் அர்த்தம் இருக்கிறதுதான், என்று எனக்குள்ளேயே எண்ணிக் கொண்டேன்.

ஒருவர் உண்மையிலேயே மெலிந்து போயிருக்கலாம். மனக்கவலையால் அவருடைய உடம்பு வாடியிருக்கும் அல்லது தேகசுகவீனம் காரணமாக உடல் இளைத்துப் போயிருக்கும் அப்படிப் பட்டவருக்குப்போய் 'ஏன் மெலிந்துவிட்டாய்' என்று கேட்டால் அவருக்கு ஆத்திரம் வருவது இயற்கை. களவெடுத்தவனிடம் 'நீ ஏன் களவெடுத்தாய்' என்று கேட்டால் அவனுக்கு கோபம் உடனே வந்துவிடும். களவெடுக்காதவன் அந்தக் கேள்வியைச்

**வி. என். பி.**

சிரித்து சமாளித்துவிடுவான். இது போலத்தான் உடல் மெலிந்து போயிருக்கும் ஒருவர், 'அட நான் மெலிந்துபோயிருக்கிறேனே. இதை நான் மற்றவர்களுக்குக் காட்டப்படாது' என்று நினைத்துக் கொண்டிருக்கையில், குறுமுட்டாகப் போய் அந்தக் கேள்வியை முகத்தில் வீசினல், அவர் பதிலுக்குப் 'பளார்' என்று அறை கொடுப்பதில் ஆச்சரியமில்லை. தவறு நம்முடையது; அவருடையதல்ல.

குள்ளமாயிருக்கும் ஒருவரைப் பார்த்து 'ஏனப்பா இப்படிக் குள்ளமாய்ப் போனுய்' என்று கேட்கிறோமா?

மெலிந்துபோயுள்ள ஒருவரிடம் நாமும் அதைக் கண்டு பரிதாபப்படுவதாக அவர் எண்ணட்டும், ஆனல் அவருடைய சிநேகத்தைச் சம்பாதிக்கலாம் என்று நினைத்துக்கொண்டு, நாம் கேட்கும் கேள்வி அவருடைய தாழ்வு மனப்பான்மையைத் தாக்கிவிடும். தம்முடைய குற்றத்தைக் கண்டுபிடித்துவிட்டோமே என்று அவர் மனம் கொதிக்கும் இதனல் அவர் மேலும் மெலிவடைவாரேயன்றி அவருக்கு நன்மை எதுவும் உண்டாகாது.

டாக்டர்மாருக்கு இந்தத் தத்துவம் நன்ருக விளங்கும்.

(VIII-ம் பக்கம் பார்க்க)

## செய்தே முடித்துவிட்டார்கள்

அமெரிக்காவிலுள்ள பெரிய தொழிற்சாலைகளைப் பார்வையிட்டுவிட்டு திரும்பிய ஓர் ஆங்கிலேயர் தம்முடைய தொழிற்சாலையிலும் 'ஒன்றையும் ஒத்திப்போடாமல் இன்றே செய்து முடியுங்கள்' என்று பல நோட்டீஸ்பலகைகளைத்தொங்கவிட்டார். ஒரு மாதம் கழித்து ஒரு நண்பர் அந்த நோட்டீசுகளின் பலாபலன்களைப் பற்றி விசாரித்த போது அந்த ஆங்கிலேயர் சற்றுநேரம் யோசித்து விட்டுச்சொன்னர்: 'அவற்ருல் பலன் ஏற்பட்டுத்தானிருக்கிறது. என்னுடைய ஆபீஸ் பையன் கடற்படையில் சேர்ந்துவிட்டான், இரண்டு டைபிஸ்டுகள் சம்பளஉயர்வு கேட்கிருர்கள். தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்யப்போவதாகப் பயமுறுத்துகிருர்கள். காஷியர் 1000 பவுனைத் தூக்கிக்கொண்டு டிமிக்கி விட்டுவிட்டார். தலைமைக் குமாஸ்தா என்னுடைய காதலியோடு கம்பிநீட்டிவிட்டார்!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சிலிட்ட நெருப்பு

மனவலின் மருமகன் அந்தோனி அங்கே வந்துகொண்டிருந்தான்.

"அண்ணே, உந்தச்செருமல் எனக்கு எப்பனும் பிடிக்கேலே. ஆள் ஒருமாதிரிச் செட்டுக் காட்டிக்கொண்டு வாருர்போலக்கிடக்கு ஆளை ஒருமாதிரிக்கவனியுங்கோ?" என்று ரத்தினம் அண்ணருக்குச் சொல்லிக்கொண்டு, வேலி ஒரமாக இருந்து நிலத்தில் விரல்போட்டுக் கீறிக்கொண்டிருந்தான் குணசிங்கம்.

அந்தோனி நெருங்கிவரும்போது ரத்தினம் அண்ணர் கேட்டார்:

"தம்பி அந்தோனி, எப்ப கொழும்பால வந்தனி?"

## எஸ். அகஸ்தியர்

'வந்தனி' என்ற வாக்கு அந்தோனிக்குக்கொஞ்சமும் பிடிக்கவில்லை. 'பட்டிக்காட்டு நாயள்' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இதற்கு ஒடு வார்த்தை வலுஉறைப்பாகச் சொல்லவேணும் என்ற துடிப்பில் அந்தோனியின் நெஞ்சு ஆமை போல் ஆழ்ந்தது.

நக்கலாகச் சிரித்துக்கொண்டே, "வந்தனி, போனனி' எண்டெல்லாம் எங்களைப் பாத்துச் சொல்றதுக்கு, அப்படியெல்லாம் நாங்கள் குதிரைக்காறங்கவில்லை" என்ருன் அந்தோனி.

துரைராசா அவுக்கென்று நசித்துச் சிரித்துக்கொண்டு சொன்னுன்:

"நீ குதிரைக்காறனில்லை. ஆனுல், சுரண்டிப்பிழைச்சுத்தின்ற ஒரு பிராணியின்ர அருமை மருமோன் எண்டது எங்களுக்கு நல்லாத் தெரியும்."

இப்படி ஒரு இண்டல் வார்த்தையால் துரைராசா மயறி அடித்தது மாதிரித் தூக்கி எறிந்துபேசுவான் என்று அந்தோனிஎதிர்பார்க்கவில்லை. அவனுக்கு மூக்கு முட்டக் கோபம் வந்துவிட்டது. தும்பி மீன்போல சிலும்பிக்கொண்டான்.

ஆனுல் நடுக் குறிச்சியில் நின்று சண்டித்தனம் காட்ஞல், மரக்கோல் தாங்கிய மரக்கைகள் தன்னைப்பதம் பார்த்துவிடும் என்ற பயத்தால், தனக்கு வந்தகோபத்தை மறைத்து, அதை ஒரு கேலிச்சிரிப்பாய்ப்பறக்கவிட்டான்.

"உந்த நரிச்சிரிப்பெல்லாம் எங்களுக்கு வடிவா விளங்கும். நாங்கள் அப்பிடி எல்லாம்வெறும்பேயரில்லை" என்று முறுகிஞன், குணசிங்கம்.

சந்தியிலே இந்தச்சந்தடி கேட்ட கசுப்பாறு அப்பா, குடுகுடென்று ஓடிவந்து, "துரைராசா, உதென்ன உதில நிண்டு கொம்மாளம் அடிக்கிறியள்? அவரவரே போய் உங்கட வேலையில்லட்டியளைப்பாருங்கோ. எக்கணம் பொலிஸ்காறங்கள் வரப்போருங்கள்" என்று புறுபுறுத்துக்கொண்டு, 'இந்தக்கண்டறியாத புள்ளையளோட தலையடிக்க ஏலாதப்பா' என்று தனக்குள்ளும் சொல்லிக்கொண்டார்.

உடனே கூட்டம் கலைந்து போயிற்று.

'என்ர புள்ளயளை நான் பேசிப்போட்டன் போலகிடக்கு. அதுகள் மனதுக்க என்ன நினைச்சுக்கொண்டு போகுதுகளோ? காரியமில்லை எல்லாம் ஆர்? எங்கட புள்ளையள்தானே?' என்று தனக்குள் சாந்திகொண்டபோது, அவர் முகத்தில் சிரிப்பு வந்தது.

— 7 —

ஒரு வாரமாகிவிட்டது.

தொழில்துறைக்கு ஊரில் இருந்து ஒரு மனுவும்போகவில்லை. துறைக்கொட்டிலில் காவலுக்கு நிற்கிற மார்க்குக் கிழவனும் ஊரோடு வந்து இருந்துவிட்டார். துறைமுகத்தில் வள்ளங்களும், கம்பு தடிகளும் தேடுவாரற்றுக் கிடந்தன.

ஒரு நாள்: பொழுது குந்தி உறையில் விழும்போது துரைராசா ஒடிவந்து "கசுப்பாறப்பா, துறையில நாளை துவங்கி, தொழிலாளியளிட்ட வரி எடுக்கப்போருங்களெண்டுகதையாயிருக்கு. நீ கேள்விப்பட்டியே?" என்று பரபரப்போடு கேட்டான்.

இதைக்கேட்ட கசுப்பாறப்பாவுக்கு, இடிமுழக்கத்தோடு கடல் பொங்குவது போலிருந்தது.

உடனே கசுப்பாறுஅப்பா, தான் முடித்துக்கொண்டிருந்த மாலையும், தடியையும் அப்படியே கட்டி, வளையில் சொருகிவிட்டு, சவரிமுத்துவின் வீட்டைத்தேடிநடந்தார்.

ஆனுல், சவரிமுத்து ஏற்கனவே இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு, நடுக்குறிச்சிக்கு, இன்னும் சில ஆட்களோடு வந்துசேர்ந்துவிட்டான்.

சற்று வேளைக்கெல்லாம் நடுக்குறிச்சியில் ஊரவர்கள் வந்து கூடிவிட்டார்கள்.

"இதெல்லாம் அவன்பாவியின்ர வேலைதான். நேரநிண்டு நாயம் பேச ஏலாமல் கடைசியில பழிவேண்டத் துவங்கியிட்டான். நாங்களும் கடைசிவரையிலும் ஒரு கை பாக்கிறதுதான்" என்று ஆவேசமாகக் கத்திஞன் துரைராசா.

"மனிசர் உழைப்புப் பிழைப்பு இல்லாமல் செத்துக்கொண்டுகிடக்கினம். அதுக்குள்ள வரியாம் வரி. இனி ஆரை வரிஞ்சுபோட்டுக்குடுக்கிறது" என்ருன் சவரிமுத்து.

லூர்த்தையாண்ணர் சொன்னுர்:

"செத்தாலும் வரிகுடுக்கிறேல்லை. என்ன நடக்குதெண்டு ஒருக்காப் பாப்பம்."

கூட்டத்தில் பேசிய ஒவ்வொருவரும் வரியை எதிர்த்து ஒரே குரலில் பேசுவதைக் கண்ட கசுப்பாறப்பாவுக்குக் கடல்பொங்கிய சந்தோஷம் நெஞ்சில் வழிந்தது. முகம் மலர்க்கச் சிரித்துக்கொண்டார்.

ஒரு தடவை கூட்டத்தைக் கண்ணெறிந்து பார்த்துவிட்டுச்சொன்னுர்:

"இப்படி உறுதியாக - ஒற்றுமையாகக் கடைசிவரையும் நிண்டோமெண்டால்,

## குறுநாவல்

கடவுள் வந்தாலும் எங்களை அசைக்க ஏலாது. இந்தப் புடியைக் கைவிடாதையுங்கோ."

அவர் இவ்வாறு சொன்னதும், அவ்வேளை 'சடார்' என்று ஒரு குரல் கேட்டது.

"அது சரி, வரி எடுக்கிற விஷயம் கவுண்மேந்துவின்ர பொறுப்பாயிருக்கேக்க, நாங்கள்எப்பிடி வரியைக்குடுக்காமலிருக்கிறது?"

'யார் அப்படிக்கேட்டது?' என்று எல்லோரும் தலையை உயர்த்திப்பார்த்தார்கள். தம்பிப்பிள்ளை, ஆமை தலையையிழுத்தமாதிரி மெதுவாகத்தலையைக்குனிந்துகொண்டான்.

(தொடரும்)

# பினீசியா நாட்டில் சிவவழிபாடு

மத்தியதரைக் கடலின் கிழக்குக்கரையில் பாலஸ்தீனத்துக்கு வடக்கிலுள்ள நீண்டுஒடுங்கிய தரைப்பகுதி முற்காலத்தில் பினீசியா என அறியப்பட்டது. பினீசியா என்னும் பெயர் பனை (Palm) என்னுமடியாகப் பிறந்ததெனச் சொல்லப்படுகின்றது. பினீசிய மக்கள் புகழ்பெற்ற கடலோடிகளாகவிருந்தார்கள். அக்காலத்து அறியப்பட்டிருந்த எல்லா நாடுகளோடும் அவர்கள் கடல்வழியாக வாணிகம் புரிந்தார்கள். விவிலிய மறையின் பழைய ஏற்பாட்டில் சொல்லப்படும் சாலமன் அரசன் (கி. மு. 900) ஹிரம் என்னும் பினீசிய அரசனைத் துணைக்கொண்டு பினீசிய மாலுமிகள் மூலம் மரக்கலங்களை ஒபிர்என்னும் துறைமுகத்துக்கு அனுப்பி மயில், குரங்கு, அகில், யானைத்தந்தம், பொன், நறுமணப்பொருள்கள் முதலிய அரும்பண்டங்களைப் பெற்ருன். ஒபிரினின்று சென்ற பண்டங்கள் தம்மோடுதமது பெயர்களையும் கொண்டு சென்றன. அப்பண்டங்களைக் குறிக்கும் தமிழ்ப்பெயர்கள் பழைய எபிரேய மொழியிற் காணப்படுகின்றன. ஆகவே ஒபிர் எனப்பட்ட இடம் தென்னிந்தியாவில் மலையாளக் கரையிலுள்ளதென மாக்ஸ்மூலர், டாக்டர் ஹால் முதலிய ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனர்.

வேதங்கள், பாணிகள் என்னும் ஒரு கூட்டத்தினரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. பாணிகள் என்னும் சொல் வணிகர் என்பதன் திரிபு என ஆராய்ச்சியாளர் துணிந்துள்ளனர். பனியா என்பதும் வணிகர்என்பதன் திரிபு வாணிகத்தின்பொருட்டுச் சென்ற இந்திய வணிகர் மத்தியதரைக்கடலை அடுத்த நாட்டில் குடியேறிஞர்களென்றும் அவர்கள் பினீசியரென அறியப்பட்டார்களென்றும் வரலாற்ருசிரியர்கள் எழுதியிருக்கின்ருர்கள். பாரத நாட்டினின்றும் சென்ற இவர்கள் முற்காலத்தில் பரதர் என அறியப்பட்டார்களென்றும், அவர்கள்அல்பியன்தீவிற்குடியேறியமையால் அல்பியன்தீவு பிரிட்டன் எனப்பெயர்பெற்றதென்றும், பிரிட்டன் என்பது பாரத்-ஆஞ (Bharat-Ana)என்பதன்திரிபென்றும், வடல் (Waddell) கூறியுள்ளார். (The Indo - Sumerian seals deciphered P. 10)

பினீசிய நாட்டில் மொவாப் (Moab) என்னுமிடத்தில் மெஸ்ஸா அரசன்(கி.மு. 850) நாட்டிய கற்றூணென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தூணில் வெட்டப்பட்டிருக்கும் எழுத்துக்களுக்கும் பழைய பிராமி எழுத்துக்களுக்கும்ஒற்றுமை காணப்படுகின்றது. ஆகவே இந்தியர் எழுத்தெழுதும் முறையைப் பினீசியரிடமிருந்து கற்று அதனை இந்தியாவிற் பரப்பிஞர்களென முன்னைய வரலாற்ருசிரியர்கள் எழுதிவந்தார்கள். மொகஞ்சதரோ எழுத்துக் கண்டுபிடிக்கப்பட்டபின் இக்

## அயல் நாடுகளில் சைவம் - 9

கொள்கை தவறுடையதெனக் கருதப்படுகின்றது. இந்தியாவினின்றும் சென்ற மக்களே தம்மோடு எழுத்தெழுதும் முறையைக்கொண்டு சென்ருர்களெனக்கருதப்படுகிறது. ஒவ்வொரு ஒலியைக் குறிக்கவும், ஒவ்வொரு குறியீட்டை அமைத்து எழுதும் முறையைக் கண்டுபிடித்து அதனை மேற்கு ஆசியாவிற் பரப்பியவர்கள் பினீசியர்களேயாவர். பினீசியரின் முழுமுதற் கடவுள் பால்(பகல்). பால்கடவுளுக்கு மாபெரும் கோவில்கள் இருந்தன. கோவில்களில்அருட்குறியாக இலிங்கங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. தயர் நகரிலிருந்த பால்கடவுளின் கோவிலில் மரகத இலிங்கமொன்றும் பொன் இலிங்கமொன்றும் வைக்கப்பட்டிருந்தன. எரதோதஸ் என்னும் வரலாற்ருசிரியர் குறிப்பிட்டிருப்பது வருமாறு: "நான் பினீசிய நாட்டிற்குச்சென்றேன். அங்குள்ள பால்கடவுளின் கோவிலில் இரண்டு தூண்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஒன்று பொன்ஞலானது; மற்றதுமரகதத்தாலானது தயர் பட்டினம் அமைக்கப்பட்டபோது அக்கோயில் கட்டப்பட்டதென்றும் தயர் பட்டினம் இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளின் முன்நிர்மாணிக்கப்பட்டதென்றும் அங்குள்ளோர் கூறினர்." இவ்விரு இலிங்கங்களும் எடுத்துச்செல்லப்பட்டு சிபிரால்டரில் நாட்டப்பட்டன. ஆகவே சிபிரால்டர் எர்குலிசின் தூண்கள் (Pillars of Hercules)என்னும் மறுபெயரையும் பெற்றது.

மத்திய ஆபிரிக்காவிலே உரோடிசியாவில் சிம்பவி என்னுமோரிடமுளது. அங்கு கட்டிடங்களின் அழிபாடுகள் காணப்படுகின்றன. அவைகளுக்கண்மையில் மாக்கல்லில் செதுக்கப்பட்ட இலிங்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. இலிங்கத்தின்மீது பூமாலைவளையம் வெட்டப்பட்டுள்ளது. முற்காலத்தில் உரோடிசியா, பினீசியரின் குடியேற்ற நாடாகவிருந்தது பினீசியரின் குடியேற்றத் தீவாகவிருந்த சைபிரசிலும் பூமாலை வளையங்களால் அலங்கரிக்கப்பட்ட இவ்வகை இலிங்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

### ந சி. கந்தையாபிள்ளை

உரோடிசியாவில் பண்டை அழிபாடு என்னும் நூல் கூறுவது வருமாறு: "உரோடிசியில் மாக்கல்லில் செதுக்கப்பட்ட இலிங்கமொன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது மாவரைக்குங்கல் (ஆட்டுக்கல்) போன்று நீண்ட உருளை வடிவினது. அதன் தலையில் பூமாலை வளையம் காணப்படுகின்றது. பூமாலை வளையத்தைக்குறிக்கிறது. இவ்விலிங்கம் பினீசியருடையது என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. சைபிரசும் பினீசியரின்குடியேற்றத்தீவாகவிருந்தது. அங்குபபோஸ்(Paphose) என்னுமிடத்திலுள்ள கோவிலில் இதுபோன்ற இலிங்கம் காணப்படுகின்றது. சிரியாவில் எமுசு (Emusu) என்னுமிடத்தில் காணப்படும்கதிரவன் கோவிலிலுள்ள இலிங்கங்களிலும் பூமாலைகள் காணப்படுகின்றன."

எல்லா மத்தியதரை நாடுகளிலும் போலவே பினீசியாவிலும் சிங்கவாகனத்தின் மீது நிற்கும் தாய்க்கடவுள் வழிபடப்பட்டது. பினீசியர் குடியேறிவாழ்ந்த சைத்திரா (Cythera) என்னுமிடத்தில் சிங்கவாகனத்தின்மீது நிற்கும் தாய்க்கடவுளின் சிலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. E, of Religion and Ethics)

பினீசியர், சிவப்புச் சாயமூட்டப்பட்ட ஒருவகைத் துணியைக் கிழக்குத்தேயங்களுக்குக்கொண்டு சென்று விற்ருர்கள். துணிக்கு ஊட்டும் சாயம் கடலுயிரிலிருந்து எடுக்கப்பட்டது இச்சாயமூட்டப்பட்ட துணிகள் பினீசிய மொழியில் பப்புரா என அறியப்பட்டது. பப்புரா என்பதிலிருந்து கருஞ்சிவப்பை உணர்த்தும் பேர்ப்பிள் (Purple) என்னும் ஆங்கிலச் சொல் பிறந்தது. இச்சாயமூட்டப்பட்ட பினீசியரின் துணி இந்தியாவில் பச்சவடம் என அறியப்பட்டது. பச்சவடம் என்பது பப்புரா என்பதன் திரிபென்று கருதப்படுகிறது. சிவப்புச் சாயமூட்டியதுணிகள்கடவுளுக்கு அணியப்பட்டன. இந்தியக் கோவில்களில் கடவுளை அழைக்கச் சங்குவாத்தியம் பயன்படுத்தப்பட்டது போல் மத்தியதரை நாடுகளிலும் சங்கு ஒலிக்கப்பட்டது.

ஆதாரம்:

1. The ancient ruins of Rhodesia — R. N. Hall and W. G. Neal.
2. Wild lives of Africa— Julliette Huxley.

## தத்துவக் கதை

(IIIம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்துவிடுகிறது. அலுத்துப் போய்த் தூங்கிவிட்டேன். எவ்வவவு நேரம் தூங்கினேனே?

விடிகாலையில்வந்து அம்மா என்னைத் தட்டிஎழுப்பிஞள்.

"தந்தி வந்திருக்கிறது."

நூறு நாருயிரம் கதைகள் பேசிஞலும் எழுதிஞலும் மனம் என்பது என்னமோ மனம்தான். துறவிக்கு மட்டுமே அதன் தொந்தரவுகளும் சேட்டைகளும் தெரியலாம். அலுத்துப்போய் அதை ஒரே சீராய் ஓடப்பண்ணிவிட அவன் முயன்று விடமுடியும். சாதாரணமனிதனுக்கு மனதின் சேட்டைகளும் பிரலாபங்களும், அதன் கோமாளித்தனங்களும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது ஏது?

அம்மா எதையோ பற்றி அழுது தீர்த்தாள்.

தந்தியைப் பார்த்தேன்.

சாவீட்டுத்தந்தி.

நெஞ்சு இருண்டது.

"என்னடா . என்ன..."

"குமரேசனின் தாய் காலமாகிவிட்டாளாம்."

அம்மா ஏதோ இரண்டு நிமிடம்பேசிஞள். அதன்பின் எழுந்து போய் விட்டாள். எதையோ எண்ணியவளாய் திரும்பி வந்தாள்.

"நீ போறியா?"

"ஓம்."

ஃ ஃ ஃ

அழகிய கிராமப் புறமது. வழிநெடுகிலும் அழகும் பயனும் சேர்ந்த நெற் பயிர்கள் சரிந்து சரிந்து ஆடின. நிலம் எங்கும் அழகும் பயனும் தரும்சோலைகள். மனம் நண்பனின் தாயை எண்ணிச் சுற்றிற்று.

'புருஷனுக்குப் பிறகு ஒன்றும் இல்லை' என்கிற நிலை. தமிழ்ப்பெண்தான் அவளும். அவள் நிலையும் அதுதான். அதற்கு முந்தி ஏதாவது இருந்திருக்கலாம். நோய் வேறு உலுப்பிற்று. நிணம் அழுகிஒடும் பயங்கரநோய் அது தன் உதிரத்தெழுந்த குருத்தே அருவருத்து ஒதுக்குகிற நோய் அது.

வீட்டை அடைந்து விட்டேன்.

[VII-ம் பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தத்துவச் சிறுகதை

# அழிவும் தெய்வும்

— "முனியப்பதாசன்" —

யன்னலுக் கப்பால் வானின் அழகியதுண்டுதெரிகிறது. அந்த முகிற்துண்டில் ஓராயிரம் சலனம். நூலிழைகள் பெருகிப் பெருகி அறுகின்றன. பொட்டுப் பொட்டாய்த்தெரியும் நீலப் புள்ளிகள். அவற்றின்மங்கிய ஒளியின் ஊடே ஒளிசிதற முனையும் சுடரின் அழகு. ஓங்கிவளர்ந்துநிற்கும் தென்னைமரம். காலத்தையே வரிகளாய்க்கொண்டுஅந்தத் தேய்விலே அழகையும்பயனையும் சேர்த்துநிற்கும் அதன் கம்பீரம், இந்தஉலகத்து நல்லனவற்றின் கம்பீரமாய்த் தெரிகிறது. ஓட்டின் வெம்மையைத் தவிர்ப்பதற்காய் விருந்தையில் வேய்ந்த சீலிங் பலகையுள் எலிகளின் உலகம். ஒன்றைப்பற்றி ஒன்று ஓட இடையே புகுந்து இன்னொன்றுஓட, எது எது, எதன் எதன் இலக்கு என்று வரையறையற்ற உலகம் - அந்த உலகத்தின் பசிகள் - அந்தப் பசிக்கேற்றாற் போல ஓடும் ஓட்டத்தில் பிறக்கிற இப்போதைய ஒலிகள், நாராசமாய் வழிகிறது. உலகம் உறங்கிக்கொண்டிருக்கிறது.

பிரார்த்தனைக்கு மட்டிலுமே உரித்தான அமைதியும் அழகும் சேர்ந்த இந்தப் போதில், என்மனம் லயம் கெட்டுப் புரள்கிறது. பயிற்றிய புலன்களே, பயிற்றியவன் பயிற்றிய தன்மையில் எழுந்தஆங்கார முனைப்பைப் பார்த்துச் சிரிக்கின்றன. அலையே அலையை ஓடிப்பிடிக்கிறாற்போல, அதுவும் இதுவுமாய்ச் சிதறுகின்றன. இருதய வீணையில் 'ஓம்' என்னும் நாதத்தை - பொதுவான இசையின் பெருக்கை - அது உயிரைத் தொடுகிற சுகத்தை ஏற்றி, தான் சூனியமாய் - அந்தச் சூனியத்துள் அகண்ட விசால உயிர்த்தத்துவத்தின் அழகிய சுகங்களைச் சுரப்பிக்க முயன்று கொண்டேயிருந்த முனையே கருகிச்சாம்புகிறது. ஆரம்பப்படியில் நெற்றிப்பொட்டிலோ, மூக்குநுனியிலோ, கோவில்மணியின் நாத ஒலியிலோ, குழந்தை மண்ணைத் தொடுகிறபோது எழுகிற முதல் குரலிலோ லயம்பட்டுத் தேறியபடிகளே, எட்ட எட்ட நகருகின்றன. உற்றமும் சுற்றமும் சிரிக்கச் சிரிக்க இருக்கிற போதும், நடக்கிறபோதும், கிடக்கிற போதும் என் உள் உருவாக்க முயன்ற மண்குடிசை கலைகிறது. 'இவைதான்' நான் என்று என்னை மூக்கும்முழியுமாயும், அவை மண்ணில் கீறிய நல்லதும் கெட்டதும் உறங்கிநிற்க, நான் உறங்கவும், அந்தஉறக்கத்துள் ஆட்படாது என்னைச் சுற்றியும், உள்ளேயும் அயலேயும்-அகமும் புறமுமாய் எதன் ஒளியின் கற்றைகள் சுடர்விடவேண்டுமென்று ஓடிக்கொண்டிருக்கிறேனே, அந்த ஒளியில் ஓர் அணுவையும் இந்த மண்குடிசையின் மங்கலான தீபத்திரியில்ஏற்றிவிட முடியாமற்போகுமோ என்கிற நடுக்கம், அங்கமெலாம் தொற்றிக்கொள்கிறது. நினைப்புக்களை ஒடுக்கிவிடுகிற முனைப்பே நினைப்பின் வித்தாய்ப் பெருகுகிறது. மரணம் வந்து என் வாயிற்படியைத் தட்டிக் கொண்டிருக்கிறாற் போன்றஒலிகள் நிறைகின்றன.

மரணம் ...
மரணம் ...
மரணம் ...
ஓ ... அழகிய மரணம்

'பிறிமிற்றிவ்ஏஜஸ்' என்று வரலாறுகள் வரையறுக்கிற காலத்தில், மனிதர்கள்வானையும் நீரையும் நிலனையும் ஒளியையும் காற்றையும், அவற்றைத் தனித்தனியாயும், அவற்றின் சேர்க்கையில் பிறந்த பிறிதொன்றன் தீரத்தையும்கண்டு, வழிபாடு செய்து கொண்டாற்போல, இந்த மரணத்தின் புகழ் பாடி அதன் தீரத்தில் இருந்தும் ஒதுங்கிவிட மனம் சடுதியாய் முனைந்தது. தெய்வத்தையும், தெய்வாம்சங்களையும் ஏமாற்றும் போக்கில், தானே ஏமாந்து போவதில் மனம் படும் அவசம் இருக்கிறதே; அதைஎன்னவென்று சொல்வது?

சாயங்காலத்தில், கடலின் கரையோரத்தில் நின்று, எல்லையற்ற பெருவெளியில் கண்ணை மலர்த்துகிறபோது, கூட்டத்தை இழந்து ஒன்றேஒன்றாய் நீந்தும் வெண்கொக்கின் இசையில் மரணம். மோதி மோதிச் சிதறும் சிற்றலையில், ஓயாமல் வீசும் வாடைக் காற்றில், நொடிப்போதில் அதுமாறிச் சோழகமாய்ப் பெயரும் பெயர்ச்சியில் - மரணம் அடிபெயர்க்கிறது. மாலையில் இதழ்வாடி நிற்கும் மலரில், அழிவின் எல்லை தெரிகிறது. மழை நீங்கிய விரிவானில் தோயும் செம்பஞ்சுக் குழம்பில், உயிர் அழிவின் செங்குருதி ஓடுகிறதோ? அறிவும், உணர்வும், அழகும் தளர்ந்துநிற்கும் பெண்ணின் தரையில், குரலில், தோல் மடிப்பில், ஆணின் கம்பீரம் மங்கும் ஆண்டில்... எதிலும் மரணம்.

ஓ... அழகிய மரணம்.

தன்உள்தானாய் நெகிழ்ந்து பரவும் அழகிய சிரிப்பு முகிழ்த்து என் இதழ்வழியே கசிகிறது. 'பைத்தோக்கிறஸ்' என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் அழகிய வரிகள் நினைவில் மோதுகின்றன. 'ஓல் திங்ஸ் ஆர் நம் பேர்ஸ்'- 'எல்லாமே எண்ணிக்கைக்கு அப்பாற்பட்டவை' என்னும் அவன் அழகிய வார்த்தையில் எது தேறிவிட்டது? கடுங்கோடையில், தார்றோட்டின் கான் ஓரங்களில், உயிர்வற்றிஉடல் சிதறியிருக்கும் புற்பரப்பைக் கிளறினால், உள்கிழங்கில்மட்டும் ஏதோ ஒரு உயிர் அணு ஒட்டிக் கொண்டிருக்குமே; அதுபோல பைத்தோக்கிறஸின் வற்றி உலர்ந்த பரிகாசத்திற்கே உரித்தான வார்த்தைகளில் கூட ஏதோ ஒரு உயிரின் பசுமை படிந்திருக்கிறாற்போலத்தான் இப்போது எனக்குப்படுகிறது. பிரபஞ்சத்தின் சகல வாழ்வின் இயக்கத்தையும், அதுதரும் போராட்டத்தையும், நன்மை தீமைகளையும் யாரால் முற்றும் உணர்ந்து தேறிச் கனிந்து விடமுடிகிறது. எல்லையற்றபெருவெள்ளத்தில் மிதந்து மிதந்து போகும் வஸ்து, எதனோ ஒன்றில் சிக்குண்டு நின்று, தன் தேக்கத்தின் அவதியில், பெருக்கில் மிதந்துவரும் பலவற்றின் சேர்ப்பிடமாய் மாறி, அந்தச் சேர்ப்பைத் தன் தோற்றத்தின் தோற்றமாய்க் காட்டிக்கொள்கிறாற் போலத்தான் ஞானமும், ஞானியும். பிறகென்ன? அவனவன் தன் அனுபவத்தையும், சுற்றுச்சார்பையும், நிலைக்களனையும், அவற்றின் கலப்பையும்பேசிவிடுகிறான். எது தேறிவிடுகிறது? ஞானமா? அவஞானமா? சிவஞானமா? பைத்தோக்கிறஸைப்போல, ஒவ்வொன்றையும் இதுதான் ஞானம் என்று பேசிவிடுகிறானே...? உலகம் [illegible] மரணமாய் மட்[illegible]குப் படுகிறது. அழகிய மரணம்தான்.

என் மனதில் எழுந்த வார்த்தைகளை ருசுப்படுத்துமாப் போல எண்ணங்கள் பிறக்கின்றன. கர்ப்பப்பையில் உயிர் நெளிகிறபோது ஏற்படும் உணர்வின் சுகத்தைத் தாய்மையில் கனிந்துநிற்கிற உயிர் மட்டுமேதான் உணர்ந்து கொள்ளமுடியும். செத்த குழந்தை உருவின் பிண்டத்தைச்சுமந்துநிற்கும் பெண்ணில் தாய்மையின் அழகும் உயிரும் ஒருசேரச் சொட்டுவதும் என்னவோ உண்மைதான். உயிர் ஊருகிற உணர்வின் சுகம்...? மரணநினைவின் உயிர் உந்தலில் எது எதுவோ உணர்வுகள் பிறக்கின்றன.

எங்கோ வெகுதொலைவில் நாய் ஒன்றன் ஊளை, சன்னமாய்க் கேட்கிறது. யமன்... மரணத்தின் ஒலியோ? இருண்ட தடித்த ஏரியோடு எருதும், பாசக்கயிறும், அழிவிலும் அழியாமல் நிற்கிற நிரந்தரத் தன்மையோடு யமன். உலகம் மாறிச் சுழல்கிறது. பயம் என்னைக் கப்பிற்று பக்கென்று வியர்த்தது. மரணத்தின் - யாரும் கணிக்கமுடியாத அதன் வேகம் பின்னுக்கு அடிபெயர்த்துப் பார்க்காத அதன் கம்பீரம், நெகிழ்வு பற்றியும் நெகிழாத அதன் கொடூரம்... இதன் வட்டமாய் எழுந்த மரண ஒலிகள்......

ஸ்பரிச உணர்ச்சியைத் தோல் உணர்த்தித்தான்விடுகிறது. பிறக்கும்போதே மனிதன் தெய்வத்தின் தன்மைகளையும் நிரப்பிக்கொண்டுதான் பிறக்கிறானே? அந்த மரணபயத்தின் அவசரத்தில் மனம் எதனையோ தூண்டிற்று.

புலன் சேர்ந்து இருதயம் கசிந்து இதழ் பிரிந்து குரல் பிறந்தது.

'ஓம்.'
'ஓம்.'
'ஓம்.'

புதிய நயங்கள் சொட்டிற்று. புதிய அர்த்தங்கள் ஓங்கார ஒலியைச் சுற்றிப் பிறந்தன. ஒலியுள் ஒலியாகி எதனையோ பிடித்து உந்த முயன்றேன்.

ஓம்... மரணத்தின் முற்றுப் புள்ளி. மரணத்தின் அகண்ட வெளி. வெளியே பனி பெய்கிறது. அனலாய் வெய்யில் வீசுகிறது. கருமுகில் திரள்கிறது. மழை சோ என்று பொழியப்போகிறது. கடல் குமுறப்போகிறது. புயல்... ஊழிப்புயல்... நிமிடம் நிமிடமாய் உலகம் ஊழிப்புயலில் ஆட்பட நகரும்வேகம் தெரிகிறதே? குழந்தைகளே இந்தப் பெருவெளியில் இதமாய் இருக்க வாருங்கள், என்னும் அழைப்பின் குரல் மட்டும்தான் அந்த அழகிய 'ஓம்'ல் பொதிந்து நிற்கிறதோ? உள்ளே போனால் யாரைத் தேடுவது? யார் என்பதும் எவர் என்பதும் ஏது? பவள மல்லிகையின் மணம்மட்டுமே நிரம்பிய பிணங்கள்... காலமும் தட்பமும் வெட்பமும் வாழ்வு முறையும்போய் பிணம் என்னும் தனித்துவத்தோடு மட்டுமே கிடக்கும் பிணங்கள்... ஓம்...ஓம். அழகிய மரணம் தோற்குமிடம்.

தோற்றம். எல்லாம் தோற்றம்தான். 'இல்ஸ் ஆர் [illegible]களே - என்று ஆங்கிலக் கவி ரெனிஸன் எங்கோ சொன்னானே? மலையே மலையில்லாத போது - மலையின் நிழலாய் இருக்கிற போது, தோற்றம் தோற்றமாகிவிட முடியுமா? கண் முன்னால் தெரிகிறசகலதும்,

''ஓம்' ... மரணத்தின் முற்றுப் புள்ளி. மரணத்தின் அகண்ட வெளி. வெளியே பனிபெய்கிறது. அனலாய் வெய்யில் வீசுகிறது, கருமுகில் திரள்கிறது. மழைசோ என்று பொழியப் போகிறது. கடல் குமுறப்போகிறது. புயல்... ஊழிப்புயல்... நிமிடம் நிமிடமாய் உலகம் ஊழிப் புயலில் ஆட்பட நகரும் வேகம் தெரிகிறதே? குழந்தைகளே இந்தப் பெருவெளியில் இதமாய் இருக்க வாருங்கள், என்னும் அழைப்பின் குரல் மட்டும்தான் அந்த அழகிய 'ஓம்'ல் பொதிந்து நிற்கிறதோ? உள்ளே போனால் யாரைத்தேடுவது? யார் என்பதும் எவர் என்பதும் ஏது? பவள மல்லிகையில் மணம் மட்டுமே நிரம்பிய பிணங்கள்... காலமும் தட்பமும் வெட்பமும் வாழ்வுமுறையும் போய், பிணம் என்னும் தனித்துவத்தோடு மட்டுமே கிடக்கும் பிணங்கள்......ஓம்......ஓம். அழகிய மரணம் தோற்கும் இடம்?''

நானும் நீயும் கூடப் பல வேறுபட்ட அணுக்களின் சேர்க்கைகள் என்று நவீன விஞ்ஞானம் சொல்லவில்லையா? பார்க்கப்போனால் நீநீயில்லை; நான் நானில்லை; மலர் மலரில்லை; நதி நதியில்லை, என்பதெல்லாம் வரண்ட தத்துவ உண்மைகள் அன்று; விஞ்ஞான உண்மையும் கூடத்தான். கண்முன்னால் தெரிந்த யமனின் உருவெளித்தோற்றம், மரணத்தின் உருவெளித்தோற்றங்கள் மறைந்துவிட்டன. 'ஓம்' என்னும் எழுத்தின் ஓங்கார ஒலிகள் நிறைகின்றன.

உலகம் சலனமற்றிருக்கிறது. ஆழ்ந்த தூக்கத்திலா இருக்கிறதோ? தூக்கமாய் இருக்கிறபோது அங்கேஎதன் அளவிலே விழிப்பும் இருக்குமோ? நிழல்வாடி மரங்களின் அழகிய இலைகள் கீழ் நோக்குக்கூம்பி மௌனமாய் இருக்கின்றன. அதன் சாம்பர் நிறம் போர்த்த மேற்பசுமை வெளிறடைந்து இனிதாய்த்தெரிகிறது.

அறிவு, வினாவின் ஆரம்பமோ என்னவோ? உணர்வுகள் எழுந்து ஓங்கி ஆழமாய்ப் பதிந்து மறைகிற போது எதுவோ ஓர் உண்மையை உணர்த்திப் பதிந்துவிடுகிறது. அறிவின் வினாவோடு உணர்வின் உண்மைகள் மங்குகின்றன. அறிவு என் உள் வினாவாய் எழுந்து, என் உணர்வுகளை மங்கச் செய்தன.

புத்த தத்துவம் உணர்வு சமைத்துவிட்ட உண்மையின் வினாவாய் எழுகிறது. உலகம் என்பது நித்தியமாற்றம். மாற்றங்கள் மாற்றங்களாய் மட்டுமே கண்ணிற்குப் புலப்படுகிறபோதுதான்மாற்றத்தின் தன்மை தெரிகிறது. பசுமைத் துடிப்போடு நிற்கும் முகை மலர்ந்து இலை அதன் நரம்புகள், காம்புகள் என்று விரிகிறபோதுதான் உள்ளம்ஏற்றுக்கொள்கிறது. முகைக்கும் அதன் மலர்ந்து விட்டவாழ்விற்கும்இடையே நிமிடந்தோறும் நடந்து கொண்டிருக்கும் மாற்றங்கள் தெரியத்தான் இல்லை. நவீன விஞ்ஞானக் கருவிகளைக்கொண்டு பார்க்கக்கூடுமானால் நடக்கும் மாற்றங்கள் தெரியக்கூடுமோ, என்னமோ? நித்தியமாற்றமாய்ப் பிரபஞ்சம்இயங்குகிறபோது மரணம்என்பதுஏது. ஐரோப்பியதத்துவவரலாற்றின் அழகிய ஞானி 'ஸ்பயினோசா'வின் தத்துவமும் ஒன்றாகூடிற்று. ஒரு பொருளின் தன்மை அப்பொருளின் தன்மையில் இல்லை. ஒரு பொருளின் தன்மையைக்கொண்டு இன்னொரு பொருளின் தன்மையை அளவிடுதல் சாத்தியமில்லை. பார்க்கப்போனால் ஒரு பொருளின் மரணத்தன்மை பிறிதொரு பொருளின் மரணத்தன்மையோடு பொருந்தாதோ?

மரணம் என்பது என்ன? மாற்றமா? தேய்வா? பிறிதொன்றன் பிறப்பா?

தன் அறிவிற்கும் தன் பருவத்திற்கும் தெரியாமல் கன்னித்தன்மையைக் கழியாத பெண்ணின் அடிவயிற்றில் உந்திப் புரளும் உணர்வுகளை அவள் புதிய உயிரின் உந்தல்கள் என்று தீர்மானித்துவிடுவதில்லை. அந்த உயிர்ச்சுகத்தின் உந்தலை உணரவும், அனுபவிக்கவும் பக்குவமான ஒரு சூழ்நிலையை இந்த உலகம் அழகாய் உருவாக்கி விட்டிருக்கிறது. இயற்கை அந்தச் சூழ்நிலையைச்சுற்றிப் படருகிறது. தெய்வத்தை நோக்கி ஓடுகிறவனும் அந்தக் கன்னியைப்போலத்தான். தெய்வத்தோடு கலக்கவும், அந்தக்கலப்பில் உயிர் உணர்வின் சுகத்தைப்பெறவும் உலகத்தின் சம்பிரதாயத்தின் திருமணச் சடங்கு இல்லை பக்குவம் என்னவோ வேண்டித்தான் இருக்கிறது. அந்தப் பக்குவத்தைப்பிரார்த்தனையில் பெற்றுவிட முயன்ற என் முனைப்பு அடியோடு சேர்ந்து மரணம் என்னும்கேள்வியாய் நிலைத்துவிட்டது.

நெடுநேரமாய் உறக்கம் மரணம் என்னும் பயங்கரத்தை-அதன் நானாவிதமான தத்துவங்களை அலசிக் கொண்டேயிருக்க, யாரால்

(IIம் பக்கம் பார்க்க)

உருவகக்கதை

## கொடியும் குருவியும்

— க. கனகலிங்கம் —

ஆற்றங் கரையை அடுத்த ஓர் அழகிய பூஞ்சோலை. இளமரங்கள் பல நறுமலர்களைச் சொரிந்தன. தீஞ்சுவைக்கனிகள் எங்கும் சிதறுண்டு கிடந்தன. மலர்களின் மணத்தில் மயங்கி மது உண்டு களிக்க வண்டினம் மலர்களைச் சுற்றி வட்டமிட்டன. சோலையின் மத்தியில் ஓங்கி வளர்ந்த ஓர் அகில மரம் விண்ணளாவ நின்றது. அதன் கிளை ஒன்றில் மெல்லிய பூங்கொடி படர்ந்திருந்தது. பக்கத்துக் கிளையில் ஒரு தூக்கணாங் குருவி கூடு கட்டி வசித்து வந்தது.

அன்றொருநாள்: வானம் இருண்டது. சிறு துளிகள் வானத்திலிருந்துபொழிய ஆரம்பித்தன. கடுங் காற்றுவேகமாகச்சுழன்று வீசத்தலைப்பட்டது. காற்றின் வேகத்தைத்தாங்கிக் கொள்ளச் சக்தியற்ற மரங்கள், திகிரி சுழன்று நிலைபெயர்ந்தன. காற்றின் வேகம் உச்சக்கட்டத்தை எய்தியபோது அதற்கு எதிர்நிற்கமாட்டாத அகிலமரம் வேரோடு சாய்ந்துவீழ்ந்தது. அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த பூங்கொடி மரத்தோடு சேர்ந்துநிலத்தில் சாய்ந்து தன் வாழ்வை முடித்துக் கொண்டது.

தூக்கணாங் குருவி தன் கூட்டினின்றும் விர்ரென்று பறந்து போய் வேறோர் கிளையில் கூடுகட்டத் தலைப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'சஸ்பென்ஸ்' மன்னர்

கடந்த கால் நூற்றாண்டுகாலத்துக்குள் ஆல்பிரட் கிச்காக் தலைசிறந்த துப்பறியும் சினிமாப் படங்களைப் பிடித்து, பல்லாயிரக் கணக்கானவர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்துவிட்டார்.

ஸ்வீடன் நாட்டுத் தலைநகரானஸ்டாக்கோமிற்கு ஒரு தடவை அவர் போயிருந்தார். இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி ஓர் ஒட்டலுக்கு போன் செய்தார். அந்த ஒட்டல் நிர்வாகிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை! பெரிய விருந்தொன்றையே ஏற்பாடு செய்து விட்டார். அந்த விருந்தில் துப்பாக்கிகள், விஷப்போத்தல்கள், கத்திகள் போன்ற அமைப்பில் சாப்பாட்டு வகைகள் இருந்தனவாம்! ஏனெனில் கொலை பற்றியெல்லாம் படமெடுக்கும் 'மாஸ்டர் ஒவ் சஸ்பென்ஸு'க்கு வைக்கும் விருந்தல்லவா?

கீழை நாடுகளுக்கெல்லாம் அவர் சென்றால் பத்திரிகைகளெல்லாம், 'சஸ்பென்ஸ் மன்னர் வந்துவிட்டார்' என்று கொட்டை எழுத்தில் போடுகின்றன.

கிச்காக்கைப் போல் தலை சிறந்த டைரக்டர் உலகில் இல்லையென்று சினிமா உலகத்தவர் பேசிக் கொள்கின்றனர்.

மற்ற டைரக்டர்கள் எழுதி முடிக்கப் பெறாத கதைகளை வைத்துக் கொண்டுதான் படப்பிடிப்பை ஆரம்பிப்பர். ஆனால் கிச்காக் கதை முழுவதையும் 'ரெடி'யாக வைத்துக் கொண்டு படப்பிடிப்பை ஆரம்பிப்பார்.

தனது இளம் வயதில் கேட்ட பயங்கரக் கதைகளை—கருத்துக்களை நினைவில் வைத்துக்கொண்டு அவற்றைப்பயன்படுத்தி வருகிறார் கிச்காக்.

'நோட்டோரியஸ்' எனும் சினிமாவில், தான் கேட்ட கதையை வைத்துத் தான் படமெடுத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

லண்டனில் பிறந்த இவரை, இவர் தந்தை மிகவும் விசித்திரமான முறையில்வளர்த்தாராம்! ஐந்துவயதிருக்கும்போது, இவருடையதந்தை இவரிடம் ஒரு கடிதத்தைகொடுத்துஇவரைபொலிஸ்ஸ்ரேசனுக்கு அனுப்பி வைத்தாராம். அந்தக் கடிதத்தைப்படித்துப் பார்த்த பொலிஸ் அதிகாரி, ''உன் தந்தை உன்னை இங்கே ஏன் அனுப்பியிருக்கிறார் தெரியுமா? கெட்டநடத்தையுள்ள சிறுவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கிறதென்பதைப் பார்க்கத்தான்!'' எனக்கூறிஅந்தத் தண்டனைகளை அவருக்குக் காட்டினாராம். அந்த நினைவுகளை ஆல்பிரட் தன்னால் என்றும் மறக்கமுடியாதென்று அண்மையில்பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

20 வயதில் சினிமா உலகில் புகுந்து படிப்படியாகவே முன்னேறிய கிச்காக் '39 படிகள்', 'மறைந்த பெண்', 'சைக்கோ' ஆகிய படங்களை எடுத்துப்புகழ் பெற்றார்.

கிச்காக் ஒருபடத்துக்கு வாரத்திற்கு ஏழு நாட்களுமே உழைக்கிறார். நாளொன்றுக்கு பதினைன்கு மணிநேரம்வேலை செய்கிறார்.

''ஏன் இவ்வளவு வயதாகியும் இப்படி உழைக்கிறீர்கள்?'' எனக் கேட்டால், சாதாரணமாகப் பெரியமனிதர்கள், 'கலைக்குத்தொண்டு செய்ய வேண்டும் என்ற ஆசையில் தான்!' எனப்பதில் கூறுவார்கள். ஆனால், கிச்காக்கோ இப்படித் தான் சொல்லுகிறார்.

''வெட்கத்தோடும் அப்பாவித்தனமாகவும் இதை கூறுகின்றேன்; நான் இப்படி உழைப்பது பணத்தின் பேரிலுள்ள தணியாத ஆசையினால்தான்!''

— பாமா —

## ''ஜூலியஸ சீசர்''

ஷேக்ஸ்பியரின் 'ஜூலியஸ் சீசர்' என்ற சோக நாடகத்தை கடந்த 19-ம் திகதி இரவு குருநகர் நாடக மன்றத்தினர் நடித்துக் காட்டினார்கள். மிகவுமபோற்றத தக்கதோர் முயற்சியென்றே கூறவேண்டும். கொலையுண்ட சீஸரின் பிரேதத்தைப் புதைக்கவந்தஅந்தனி தனது சொற்சாதுரியம் மிக்க பிரசங்கத்தினால் ரோமாபுரி மக்களை தன்வயப்படுத்தி புரூட்டஸ் முதலிய சதிகாரருக்கு எதிராக அவர்களைத் தூண்டிவிடும் கட்டத்தில் நாடகம் ஆரம்பித்து, இடையில் நிறுத்தப்பட்டு, மறுபடியும் காசியஸ் முதலியோர் சதி உருவாக்கும் கட்டத்துக்கு வந்தது நாடகம் பார்ப்பவர்களிடையே ஒரு வித குழப்பத்தை உண்டுபண்ணி நாடகத்தின் 'டெம்போ' என்ற விறுவிறுப்பையும் குறைத்து விட்டது. மற்றும்படி நடிகர்களும் நாடக உதவியாளர்களும் நாடகத்தை வெற்றியாக்குவதற்குத் தங்களால் இயலுமானவற்றைச் செய்தார்கள். கிளியோபட்ராவை 'கிளியோ, கிளியோ' என்றழைக்காமல் 'கிளியே' என்றழைக்கலாமே!



''ஆ! புரூட்டஸ் நீயுமா!'

நடிகர்களுள் சாசியஸாக நடித்தமெக்மஸ், த.யோசவ் (புரூட்டஸ்), த. பிலிப்பு (சீசர்), த. யேசுராசா (காஸ்கா) பாராட்டுக்குரியவர்கள்.

டைரக்டர்களில் ஒருவரான வித்துவான், புலவர் வேல்மாறன் யாழ்ப்பாணத்தில் ஒருசிறந்தநாடகஅரங்கு தேவையென்று தமது சிறப்புரையில் கூறினார்.

## சென்ற ஆண்டில் வெளியானபடங்கள்

1965-ம் ஆண்டில் தமிழகத்தில் 41 நேரடித் தமிழ்ப் படங்கள் தயாராகின. இவற்றில் ஐந்து வர்ணப் படங்களாகும. இரண்டு படங்கள் வயதுவந்தவர்களுக்கு மட்டும். ஜெயகாந்தனின் ''உன்னைப் போல ஒருவன்'' என்ற படத்திற்கு இந்திய ஜனாதிபதியின் பரிசு கிட்டியது கே. ஆர். விஜயா ஒன்பது படங்களில் கதாநாயகியாக நடித்திருக்கின்றார். எம். ஜி. ஆர். ஏழு படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கின்றார். 1965-ல் வெளியான படங்கள் பின்வருமாறு:-

இரவும் பகலும், அன்புக்கரங்கள், எங்க வீட்டுப் பிள்ளை, பழநி, உன்னைப் போல ஒருவன், படித்த மனைவி, காட்டுராணி, காக்கும் கரங்கள், பணம் படைத்தவன், வெண்ணிற ஆடை, சாந்தி, வல்லவனுக்கு வல்லவன், வாழ்க்கைப் படகு, பூஜைக்கு வந்தமலர், பஞ்சவர்ணக்கிளி, கார்த்திகைத்தீபம், பணம் தரும் பரிசு, விளக்கேற்றியவள், தாயும் மகளும், ஆயிரத்தில் ஒருவன், ஹலோ மிஸ்டர் ஜமீன்தார், என்ன தான் முடிவு, இதயக்கமலம், வீர அபிமன்யு, நீ, கலங்கரை விளக்கம், கல்யாண மண்டபம், திருவிளையாடல் கன்னித் தாய், தாயின் கருணை, எங்கவீட்டுப்பெண், சரசா பீ. ஏ., குழந்தையும் தெய்வமும், தாழம்பூ, நீல வானம், பூமாலை, நாணல், ஒரு விரல், ஆசைமுகம், நீர்க்குமிழி, ஆனந்தி.

தொகுப்பு:
சி. சுதந்திரராஜா,
தாவடி.

நாடக விமர்சனம்

## இளிக்காதே, சிரி!

யாழ்ப்பாணத்தில் முழு நீள நகைச்சுவை நாடகத்தை இலக்கணம் தவறாது தரக்கூடிய சக்திதமக்கு மட்டும்தான் என்று சொல்வதுமாதிரிசிவராத்திரியன்று கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவில்வீதியில் 'கலைக்குவியல்' நாடக மன்றத்தினர் 'இளிக்காதே, சிரி!' என்ற அருமையான நாடகத்தினை விருந்தாகத் தந்தார்கள்.

கதையில்லாமலேயேகதையைக்கொண்டுசென்று, காட்சிக்குக்காட்சிசிரிக்கவும் சிந்திக்கவும் வைத்து, முழுநீள நகைச்சுவை நாடகம் என்ற 'லேபலை' காப்பாற்றிய பெருமை, நாடத்தின்கதை, வசனம், டைரக்ஷன்பொறுப்புகளை ஏற்று, கதாபாத்திர மேற்று நடித்த திரு. நா. கேகைலிங்கத்தையேசாரும்.

விதானையாராக நடித்த கேகைலிங்கத்தின் மனைவி விசாலாட்சியாக நடித்தவர் அவர் பதினைந்து வயதுமகன் கமலன்தான் என்று ரசிகர்கள் முதலில் அறிந்திருந்தால் இன்னும் சிறிதுகூடுதலாக ரசித்திருக்கலாம்!

தரகராக நடித்த சு. நவரத்தினம் நாடகத்தின் உயிர்நாடி; காட்சிக்குக் காட்சி வந்து சிரிக்கவைக்கிறார். அவர் நடிப்புக்கு - ஒரு 'சபாஷ்!'

'கொன்னை'யராக வந்து சிரிக்க வைக்கிறார் அரசரத்தினம். நர்ஸாக நடித்தவர் சினிமா நடிகர் நாகேஷைக் காப்பி அடிப்பதால் அவர் நடிப்பு எடுபடவில்லை. மற்றும் இதயன், ருத்திரன், குலேந்திரன்நடித்துள்ளனர்.

நடிகர்களின் 'மேக் - அப்'பைப்பற்றிப் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. நாடகத்தின் வெற்றிக்கு அதுவும் ஒரு காரணமே! ஒப்பனையை நல்ல முறையில் செய்த ஸ்ரீமதி கமலா கேகைலிங்கத்தைப் பாராட்டலாம்!

மொத்தத்தில்— நகைச்சுவை நாடக உலகுக்கு 'கலைக்குவியல்' நாடகமன்றத்தினர்தொடர்ந்துசேவை செய்வார்களாக!

—ராஜன்

## காரும் காதலும்

உருவிலும் நிறத்திலும் ஒத்த இருகார்கள், இருவரை நித்தியக்காதலில்இணைக்கும் சுவையான காட்சியொன்று விஜயகோபால்பிக்சர்சாரின் 'தேடி வந்த தெய்வம்' எனும் படத்தில் வருகிறது.

அவை ரவிச்சந்திரனுக்கும் காஞ்சனாவுக்கும் சொந்தமானவை. காஞ்சனா நவநாகரிகக் கடையொன்றுக்குச் சென்றுவிட்டு அதன் முன்னால் நின்று கொண்டிருந்த தனது காருக்குச் சென்று அதைக் கிளப்பப் போகிறார். ஆனால் அவரிடமிருந்த சாவி அக்காருக்குச் சேரவில்லை. அந்நேரம் பார்த்து ரவிச்சந்திரன் வந்துவிடுகிறார். அது காஞ்சனாவின் கார் அல்ல என்று ரவிச்சந்திரன் கூறவும் அவர் கோபத்தோடு தனது காருக்குச் சென்று வேகமாக மறைந்து விடுகிறார்.

ஆனால் ரவிச்சந்திரன் தன் [illegible] பின்னால் தொடர்ந்து [illegible]தைக் காஞ்சனா கண்ணாடியில் பார்க்கிறார். காஞ்சனா தன் வீட்டுக்குவந்ததும் ரவிச்சந்திரனின் காரும் அங்குவந்து நிற்கிறது. அவர் காரைவிட்டு இறங்கிக் காஞ்சனாவிடம் ஒரு சிப்பத்தைக் கொடுக்கிறார். அதை அவசரத்தில் தனது காரில் வைத்துவிட்டு வந்ததாக ரவிச்சந்திரன் சொல்கிறார்.

## மருமகள்பாகத்தில் விஜயகுமாரி

அவளை அவள் கணவன் மனதார தாலிகட்டினான். எல்லோரையும்போல் அவளைத் தன் வீட்டிலேகொண்டு வைத்துக் குடும்பம் நடத்தினான். ஆனால் அவன் தாயோ தன் மருமகளைவெறுத்தாள். அவள் ஒரு நிமிடம்கூட வீட்டில் இருக்கக்கூடாது என்று எண்ணி வெளியே போகும்படி சொல்லிவிட்டாள்.

கட்டியவனும் அம்மாவை தட்டிக் கேட்க முடியாமல் ஊமையாகிவிட்டான். அவள் வீட்டைவிட்டு வெளியேறினாள்.

இப்படி ஒரு காட்சியை ஸ்ரீ புரொடக்ஷன்சார் தங்களது கொடிமலர் படத்திற்கென அண்மையில் எடுத்தார்கள். விஜயகுமாரி மருமகளாக நடித்தார்.

இதில் ஏவி. எம். ராஜன், முத்துராமன், விஜயகுமாரி, காஞ்சனா, எம். வி. ராஜம்மா ஆகியோர் நடிக்கின்றனர்.

திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பை ஸ்ரீதர் கவனிக்கிறார்.

## கலை அரங்கம்

## ''நாடகமே என் நெஞ்சில் நிறைந்தது''

— சகஸ்ரநாமம்

குணசித்திர நடிகரான எஸ். வி. சகஸ்ரநாமம் அரிய திறமையுள்ளவர்களின் வரிசையில் சேர்ந்தவர். அவர் நாடகமேடையிலும், வெள்ளித்திரையிலும் மிகச்சிறந்த முறையில் நடிக்கக்கூடியவர்.

''திரைப் படங்களை விட நாடக மேடை தான் என் நெஞ்சோடு நிறைந்தது. அதற்குத்தான் நான் எனது நேரத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகிறேன்'' என்று அவர் கூறியுள்ளார்.

சகஸ்ரநாமம் மேனகா என்ற படத்தின்மூலம் வில்லனாக அறிமுகமானார். அதைத் திருப்பூர் சண்முகம் பிலிம் சார் 1935-ம் ஆண்டு எடுத்திருந்தனர். அது பம்பாயிலுள்ள ரஞ்சித் படப்பிடிப்பு நிலையத்தில் படமாக்கப்பட்டது.

ஆனால் அவர் 13-வது வயதிலேயே நடிப்புத்தொழிலுக்கு வந்துவிட்டார். டி. கே. எஸ். சகோதரர்கள் நடித்து வந்த நாடகக்குழுவில் அவர் அப்போது சேர்ந்தார்.

நாடகங்கள் சமுதாயத்திலும், எழுத்தாளரின் இலக்கியப்பணியிலும் [illegible] சினிமா [illegible] ளான என்று அவர் கூறுகிறார். ''சினிமா நடிகனுக்கு நேரடியாகப் பெறமுடியாத பாராட்டுகளை, நாடகநடிகனவன் மக்களின் நேரடியான உணர்ச்சிகளை உடனடியாகத் தெரிந்து பெரிதும் மனநிறைவு பெறுகிறான்'' என்பது அவரது கருத்தாகும்.

முதிர்ச்சிமிக்க அந்நடிகர் பல நடிகர்களை உருவாக்கியிருக்கிறார். இன்று அவர்கள் பட உலகில் பெரும்புள்ளிகளாக விளங்குகின்றனர். அவர்களில் பண்டரிபாய், மைனாவதி, முத்துராமன் ஆகியோரும் உள்ளனர்.

ஐம்பத்திரண்டு வயதான சகஸ்ரநாமம் இன்னும் சுறுசுறுப்பான நடிகராயிருக்கிறார். அவர் நாடகங்களை எழுதுவது அல்லது நாடகங்களை நடத்துவது, அல்லது படங்களில் நடிக்கச் செல்வது என்று ஓய்வு ஒழிச்சலின்றி உழைக்கிறார்.

அவர் நடித்து வெளிவரவிருக்கும் படங்கள் சன்பீம் பிக்சர்சின் ''சாதுமிரண்டால்'', உமையாள் புரடக்சன்கின் ''அவன் பித்தனா?'', [illegible] ஆர். பிக்சர்சின் ''[illegible]ணி மகுடம்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமேடை

திரு. வில்சனின் தொழிற் கட்சி அரசாங்கம், ஓராண்டு தீவிர ஆலோசனைக்குப்பின், அடுத்த 15 ஆண்டுகளுக்கான புதிய பிரிட்டிஷ் பாதுகாப்புத்திட்டத்தைவெள்ளை அறிக்கைமூலம் சமீபத்தில் வெளியிட்டது.

சென்ற வாரம்தான் பிரிட்டிஷ் தளங்கள்பற்றி இப்பத்தியில் எழுதினோம். அதைத் தொடர்ந்து வெளியாகியிருக்கும் இந்த முக்கியமான அறிக்கையைப்பற்றி எழுதுவதற்கு இது நல்ல சந்தர்ப்பமாகும்.

ஐரோப்பாவுக்கு வெளியே பிரிட்டிஷ் பாதுகாப்புப் பொறுப்புப்பற்றி இந்த அறிக்கை தெளிவாகக் குறிப்பிடுகிறது. பிரிட்டிஷ் பாதுகாப்புச் செலவு 200 கோடி பவுணை இறுதியில் குறைக்கப்படுவதற்கும் இதில் வழி செய்யப்பட்டிருக்கிறது.

★

## நேட்டோ தொடரும்

'நேட்டோ' என்ற வட அட்லாண்டிக் ஒப்பந்த ஸ்தாபனத்திற்கு பிரிட்டன் 60,000 துருப்புக்களைக் கொடுத்திருக்கிறது. இதற்கான வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கும் பட்சத்தில் தொடர்ந்து இத்துருப்புக்களை பிரிட்டன் பராமரித்துவரும். ஆண்டு ஒன்றுக்கு சுமார் 890 லட்சம் பவுன் இதற்காகச் செலவிடப்பட்டுவருகிறது. பிரிட்டனின் மிகப்பெரிய பாதுகாப்புப் பொறுப்பு இது தான்.

★

## ஐரோப்பாவுக்கு வெளியே

ஆனல் ஐரோப்பாவுக்கு வெளியே ஏடன், சைப்ரஸ், மால்டா ஆகிய இடங்களிலுள்ள சில தளங்கள் எடுபட்டுவிடும். அதே சமயம் சுதந்திரம் அடையவிருக்கும் பிரிட்டிஷ் கயானு, தென்னுபிரிக்க பிரிட்டிஷ் பிரதேசங்கள் ஆகியவற்றிலுள்ள தளங்கள் நீண்ட காலம் வைத்திருக்கப்படமாட்டாது. ஹாங்காங்கிலுள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் சில காலம் பராமரிக்கப்படும். தூரகிழக்கிலும், தென்கிழக்காசியாவிலும் நிலைமை அனுமதிக்கும்பட்சத்தில், பிரிட்டிஷ் துருப்புகள் குறைக்கப்படும்.

★

## ஆஸ்திரேலியாவில்.....!

இந்தோனேஷியாவின் மலேஸிய எதிர்ப்புக் கொள்கையின் விளைவாக மலேஸியாவிலும், சிங்கப்பூரிலும் வைக்கப்பட்டிருக்கும்55000 பிரிட்டிஷ் துருப்புக்கள் அந்தந்த அரசாங்கங்களின் விருப்பத்திற்கேற்பவும்இணக்கமான நிலைமைக்கேற்பவும் நீடிக்கும். எனினும் இவை அகற்றப்படும் நிலைமையேற்பட்டால், ஆஸ்திரேலியாவில் அவற்றை நிலைநிறுத்த ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஏடனிலுள்ள பிரதான தளத்திலிருந்து 25,000 பிரிட்டிஷ் துருப்புக்கள் 1968 ம் ஆண்டுவாக்கில் அகற்றப்பட்டு பாரசீகக் குடாவுக்கு கொண்டு செல்லப்படவிருக்கிறது: மத்திய தரைக்கடற் பகுதியிலுள்ள 22,000 பிரிட்டிஷ்துருப்புக்கள் குறைக்கப்படவிருக்கின்றன.

★

## அமெரிக்க விமானங்கள்

தற்போது பிரிட்டிஷ் விமானப்படையில் உள்ள பழைய கான்பரா விமானங்கள் அகற்றப்படவிருக்கின்றன. இதற்குப் பதிலாக ஒவ்வொன்றும் 25லட்சம் பவுன் பெறுமதியுள்ள 50 ''எப் 111 ஏ'' சூப்பர் ஸோனிக் ஜெட் விமானங்களை பிரிட்டன் வாங்கும் என அறிவிக்கப்பட்டது.

★

## கடற்படை

கடற்படையின் தற்போதைய விமானந் தாங்கிக்கப்பல்கள் படிப்படியாக 1970-ம் ஆண்டுக்குள் குறைக்கப்படும். பெரும் பொருளாதாரச் சுமையை நீக்குவதற்கே இந்த நடவடிக்கை. அதேசமயம் புதிய விமானந் தாங்கிக் கப்பல்கள் கட்டப்படமாட்டாது. எனினும் கேந்திர முக்கியத்துவமான இடங்களில் குறிப்பிட்ட அளவு புதிய ரக விமானந் தாங்கிகள் பராமரிக்கப்படும்.

★

## சூயஸுக்கு கிழக்கே

சூயஸுக்கு கிழக்கே பிரிட்டன் மேற்கொள்ளவிருக்கும் புதிய பாதுகாப்புக்கொள்கைகள் நாட்டில் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன. கன்சர் வேட்டிவ் கட்சி இதைத்தீவிரமாக எதிர்த்து வருகிறது என்பதும், கடற்படைமந்திரி திரு கிறிஸ்டோபர் மேஹியூ, கடற்படை முதல் அதிகாரி அட்மிரல் டேவிட்லூஸ் ஆகியோர் ராஜினுமா செய்திருப்பதும் பலருக்குத் தெரிந்திருக்கும்.

★

## மூன்று நிபந்தனைகள்

ஐரோப்பாவுக்கு வெளியே பிரிட்டன் மூன்று நிபந்தனைகளுடன் செயல்படும் என நம்பப்படுகிறது.

நேசநாடுகளின் ஒத்துழைப்பின்றி சூயஸைப் போன்ற பெரும் யுத்த நடவடிக்கையில் பிரிட்டன் ஈடுபடாது எனக் கூறப்படுகிறது. செண்டோ, ஸீட்டோ ஆகிய ராணுவக்கூட்டுக்களில் பிரிட்டன் அங்கம்வகிப்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

போதுமான வசதிகள் அளிக்கவும், திறமையான முறையில் பயன்படுத்தவும் உத்தரவாதம் அளிக்கப்பட்டால் மட்டுமே பிரிட்டன் இன்னொரு நாட்டுக்கு ராணுவ உதவி வழங்கும் என்பது இரண்டாவது நிபந்தனை.

ஒரு சுதந்திர நாட்டில், அதன் விருப்பத்துக்குமாருக பிரிட்டன் ராணுவத்தளங்களை வைத்துக்கொள்ளமுயலாது என்பது மூன்ருவது நிபந்தனை.

எனினும் இந்த எதிர்கால நிலைமைகள் மலேஸியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரிட்டனின் தற்போதைய பொறுப்புக்களைப் பாதிக்காது என பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

பிரிட்டன் தற்போது பெருஞ்செலவில் வாங்கவிருக்கும் 50 அமெரிக்க விமானங்கள், இன்னும் ஐந்து ஆண்டுகளில் அது பிரான்சுடன் சேர்ந்து உற்பத்தி செய்யவிருக்கும் இடைக்காலத்தை நிரப்புவதாயிருக்கும். பிரிட்டிஷ் ராணுவ-உபகரணங்களை அமெரிக்காவுக்கு விற்பதன்மூலம் விமானச்செலவு ஈடுசெய்யப்படும்.

★

## 3000கோடி செலவு

பிரிட்டன் தற்போது ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3000 கோடி ரூபாய் பாதுகாப்புக்காகச் செலவிடுகிறது. இது இந்தியாவின் ராணுவச்செலவைவிட ஆறுமடங்கு அதிகம். அமெரிக்காவின் ராணுவச் செலவில்எட்டில் ஒருபங்குக்கும்குறைவு.

1970-ம் ஆண்டுக்கு முன் உத்தேச 2700கோடி ரூபாய் செலவுடன் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியுமென அரசாங்கம் நம்புகிறது.

வேறு சில சுவாரஸ்யமான தகவல்களையும் பிரிட்டிஷ் அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது. கடற்படைக்கும், விமானப்படைக்குமாக 200 ''பெண்டன் ஜெட்'' சண்டை விமானங்களை அமெரிக்காவிடமிருந்து அதுவாங்கும்.

★

## வெளிச்செலாவணி

பாதுகாப்புத்துறைக்கு 29 கோடியே 30 லட்சம் பவுண் வெளிநாட்டுச் செலாவணி பிரிட்டனின் கையைவிட்டுப் போகிறது. 1970-ம் ஆண்டுக்குள் இதில் மூன்றில் ஒரு பகுதியை வெட்டிவிடலாம் என தொழிற்கட்சி அரசாங்கம் கருதுகிறது.

★

## தூர, தென்கிழக்கு

அடுத்த 10 ஆண்டுகளில் தூரகிழக்கிலும், தென்கிழக்காசியாவிலும்தான் சமாதானத்துக்கு பெரும் அபாயம் இருப்பதாயும், காமன்வெல்த் நாடுகள் சில இதனுல் நேரடி அபாயத்துக்கு உள்ளாகலாம் என்றும் பிரிட்டிஷ் வெள்ளை அறிக்கை கூறுகிறது.

எனவே பிரிட்டிஷ் படைகள் அங்கு இருப்பது அவசியமென்றும், நிலைமை சீர்டையும்போது அவைகுறைக்கப்படலாம்என்றும் மேலும் அதில் கூறப்பட்டிருக்கிறது

அதே சமயம் சுதந்திர உலகைப் பாதுகாக்கும்பணியில் மற்றவர்களுடன் ராணுவபலத்தைப் பகிர்ந்துகொள்ளவும் பிரிட்டன் முன்வந்திருக்கிறது.

★

## தேர்தல் வரலாம்

தற்போது மூன்றே மூன்று பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி, விரைவில் ஒரு பொதுத்தேர்தலை நடத்தலாமென எதிர்பார்க்கப்படுகிறது. தொழிற்கட்சி அரசாங்கத்தின் பொருளாதார, பாதுகாப்புக் கொள்கைகளுக்கு பிரிட்டிஷ் வாக்காளர்கள் என்ன பதில் அளிப்பார்கள் என்பது அப்போது தெரியவரும்.

## பிரிட்டனின் புதிய பாதுகாப்பு கொள்கை

---

குடிசைக் கைத்தொழில்

# கதர் நெசவு

ஆலைகளில் தயாராகும் துணியுடன் விலையில் கதர் போட்டியிட முடியுமாஎன்று கேட்கிறார்கள். நிச்சயமாக 'முடியாது' என்பது மெய். ஆனல், மனிதனின் உழைப்பினுல்தயாரிக்கப்படுகிறவைகளுக்குப் பதிலாக மனித உழைப்பைக் குறைத்துவிடும் யந்திரங்களினுல் தயாரிக்கப்படுகிற பொருள்கள் ஒவ்வொன்றின் விஷயத்திலும் இதேதான்நிலைமை. தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் துணி, இரும்பு, சர்க்கரை முதலியவைகளுக்கு வெளிநாட்டுப்போட்டியைச் சமாளித்து நிற்பதற்கு ஏதாவது ஒருவகையில் அரசாங்கத்தின் உதவி வேண்டியிருக்கிறது. கேள்வியை இந்தவிதத்தில் கேட்டதே தவறு. ஒழுங்கான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஒரு தொழில், அவ்வாறு ஒழுங்காக அமைக்கப்பெருத இன்னுமொருதொழிலைப்பகிரங்க மார்க்கெட்டில் எப்பொழுதுமேவிரட்டிவிடமுடியும். ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கும் தொழிலுக்கு ஏராளமான உதவி இருந்து, கணக்கற்ற மூலதனமும் அதற்கு இருக்குமாயின் தற்காலிகமாக நஷ்டம் வந்தாலும் சரி என்று அது தயாரிக்கும் பொருள்களை விற்கமுடியுமாகையால், இவ்வசதியில்லாத தொழிலை இது இன்னும் எளிதாக விரட்டிவிடமுடியும். இந்நாட்டில் அநேக தொழில் முயற்சிகளுக்கு இந்தத் துக்ககரமான [illegible] ஏற்பட்டிருக்கிறது.

### கிராமங்களை அழிக்க இலகுவான வழி

எல்லையில்லாத அந்நிய நாட்டுப் போட்டிக்கு ஆளாகிவிடும் எந்த நாடும், பட்டினி கிடக்க வேண்டிய நிலையை அடைந்து, அதன் மூலம் அந்நியர் விரும்பினுல் அவர்களுக்கு அடிமையுமாகிவிடும். இதுதான் அமைதியாக ஒரு நாடு மற்ருெரு நாட்டுக்குள் நுழைந்துவிடுவது என்று சொல்லப்படுகிறது. இன்னும் ஓரடி மேலே போய்க்கவனித்தால் கையினுல் செய்த பொருளுக்கும் யந்திரங்களினுல் தயாராகும் பொருள்களுக்கும் போட்டி ஏற்படும்போதும் இதுதான் முடிவு என்பது விளங்கும். இக்காரியம் நம் கண்முன்னுலேயேநடந்துவருவதைநாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். மாவு மில்கள் வந்து மாவரைக்கும் திரிகைகளைப் போக்கிவிட்டன. எண்ணெய் மில்கள் கிராமச் செக்குகளை விரட்டிவிட்டன. நெல்மில்கள் நெல்குத்தும் உரல்களையும், சர்க்கரை மில்கள் வெல்லம் காய்ச்சும் சட்டிகளையும் ஒழித்துவிட்டன. கிராமத் தொழிலாளரின் உழைப்புக்குப் பதிலாகவந்திருக்கும் இவை, கிராமவாசிகளை ஏழ்மைப்படுத்தி [illegible] அதிகப் [illegible] றன. இது மேலும் அதிக காலத்திற்கு நடந்துகொண்டேபோகுமானுல், மேற்கொண்டு எவ்வித முயற்சியுமில்லாமலேயே கிராமங்கள் அழிந்துவிடும். கிராமங்களை அழித்துவிடுவதற்கு இதைவிடத் தந்திரமான, அதிக லாபகரமான முறை எதையும் யாரும் கண்டுபிடித்துவிடமுடியாது. இதிலெல்லாம் இருக்கும் பெரிய பரிதாபம் என்னவென்ருல்,

— காந்தியடிகள் —

நிலைமையை அறியாமலேயே கிராமவாசிகள் தங்களுடைய நாசத்திற்குத் தாங்களே உதவிசெய்துகொண்டிருப்பதுதான். இன்னுமொன்றையும் தெரிந்துகொள்ளவேண்டும். விவசாயம்கூட இப்பொழுது லாபகரமானதாக இல்லையென்பதுதான் அது. சில பயிர்களில் விவசாயிகளுக்கு விதைத்த விதையின் விதை கூடக்கிட்டுவதில்லை!

### கதர் எப்போது வேண்டாம்?

இவ்வளவு பயங்கரமான நிலைமைகளை நான் ஒப்புக்கொண்டபோதிலும் உண்மையான ஒரே பொருளாதாரப்பரிகாரம் கதர்தான் என்று நான் சொல்லுவதன் பொருள் என்ன? இத்திட்டத்தைப்பற்றிய எல்லாவற்றையும்கூறுகிறேன். வேலை செய்வதற்கு உடல் வலுவுடன் இருக்கும், 16 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் அவர்களுடைய வயல்களிலோ, குடிசைகளிலோ, அல்லது ஒவ்வொரு கிராமத்திலும் தொழிற்சாலை அமைத்து அதிலோர் வேலையும் போதுமான ஊதியமும் கொடுப்பதற்கு இதை விடச் சிறந்ததானமற்ருெரு திட்டம்ஏற்படும்வரையில்-ஒழுங்காகநடத்தப்படும்வாழ்க்கைக்குத்தேவையான, அத்தியாவசியமான சுகங்கள், வசதிகளைக்கிராமவாசிகளுக்கு அளிக்கும் வரையில்— கிராமங்களுக்குப் பதிலாக போதுமான நகரங்கள் அமைக்கப்படும் வரையில் கதர் ஒன்றுதான் உண்மையான பொருளாதாரத்திட்டம். நாம் எதிர்பார்க்கக்கூடியநீண்ட காலம்வரையிலும் கதர் ஒன்றேதான் நிலையான திட்டமாக இருக்கும். இதை எடுத்துக்காட்டுவதற்காகவே இத்திட்டத்தைக் குறித்து நான் இவ்வளவு சொல்லவேண்டியதாயிற்று,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்பத்தமிழ் பெண்ணே உனக்கு உத்தியோகம் வேண்டுமா?

[உத்தியோகத்துறையில் ஈடுபடும் மாதர் குலத்தின் மாபெரும் இலட்சியங்கள்' என்ற தலைப்பில் 'பூரணி' எழுதிய கட்டுரைக்கு எதிரொலியாக திரு. ம. ச. துரைராசா 'இன்பத் தமிழ்ப் பெண்ணே உனக்கு உத்தியோகம் வேண்டுமா' என்ற இக்கட்டுரையை வரைந்துள்ளார். உத்தியோகம் வகிக்கும் மங்கையர் பற்றிய கருத்துக்களை வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேம் ]

தமிழர் குடும்பங்களில் குடும்பச்சுடராகஒளிவிட்டுப் பிரகாசிக்கும் இன்பத்தமிழ் பெண்ணே அன்றைய தமிழ் அறிஞர்கள் உன்னே, உன் பெருமையை, கடவுள் உன்னே எதற்காகப் படைத்தாரோ அந்த ஒப்பற்ற

## கருந்தரங்கம்

குடும்பப்பொறுப்பை அந்தப் பொறுப்பின் சிறப்பைப் பாடமுடியாமல், வர்ணிக்க முடியாமல் உன்னே மனேயாளே, மனேவியே, இல்லாளே என்னும் காரணப் பெயருக்கெல்லாம் கருப்பொருளாக உன்னேப்படைத்ததன் அர்த்தம் உனக்கு விளங்கவில்லையா?

சுதந்திரதாகம் கொண்டிருந்த பாரதி, அன்று பாரத மாதா பட்ட வேதனையைச் சகிக்க மாட்டாமல், தாய் நாட்டுப் புதல்வர்கள் சிறையை நிரப்பி அல்லல் படுவதைப் பொறுக்கமுடியாமல் "ஏய் இன்பத்தமிழ் பெண்ணே உன் துணேவன் துன்பப்படுகின்ருன், சிறையில் அன்னியரால்வதைக்கப் படுகின்ருன் நீ ஏன் வீட்டிற்குள் ஒதுங்குகின்ருய்? வீறு கொண்டெழு", என்று சுதந்திர வெறியைத் தூண்டிவந்தார். அவ்வாறு பாரதியால் சிருஷ்டிக்கப்பட்ட புதுமைப் பெண்ணுக்கும், இன்று உத்தியோகம் வகிக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம் மலேக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம்.


பாரதியின் பெயரால் தமிழரின் மானத்தை வாங்கும் ஆண்களுடன் வேலே பார்க்கும் பெண்களிடம் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குடுப்பப் பெண்ணின் குணங்களேக்காணமுடியுமா? இதை எடுத்துக்கூறும் அன்பர்கள் சுயநலவாதிகளா? இந்த உலகில் வாழும் அத்தனே உயிர்களிடத்திலும் சுயநலம் தாண்டவமாடுவதை எந்த மனிதனும் மறுக்கமுடியுமா? கடவுளின் முன் தன்னே ஈடேற்றும்படி வேண்டிநிற்கும் பக்தன் ஒரு சுயநலவாதி. தன் எழுத்துக்கள் யாராலும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என எண்ணும் எழுத்தாளன் ஒரு சுயநலவாதி. உலகில் எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு பெண்களுக்கு மதிப்பும் மரியாதையும் தாய்க்குலம் என்று தனி இடமும் கொடுப்பது நம் இன்பத் தமிழ்நாடு.

உத்தியோகம் வேண்டும், சமத்துவம் வேண்டும் என்றெல்லாம் தம்பட்டம்அடித்துக் கொண்டு திரியும் ஆங்கில மோகம் கொண்ட மோகினிகளே, தயவுசெய்து சகலநாடுகளும் போற்றும் எங்கள் பெண்ணின் பெருமையை அன்னியரைப் பின்பற்றி அழித்து விடாதீர்கள். அன்னியரின் சிறந்தவைகளே ஏற்போம்; அதே நேரத்தில் எமது பண்பாட்டையும் வளர்ப்போம். எமக்குத் தேவையற்ற அன்னியப் பழக்க வழக்கங்களே நாம் ஏன் பழகவேண்டும்? கண்ணுக்குமை, நகத்திற்குப் பூச்சு, கையிலே பை, உதட்டுக்குச் சாயம் இதெல்லாம் உனக்குத்தேவைதானு? மஞ்சள் குங்குமப் பெண்ணே நீ இன்னும் இருக்கின்ருயா?

இந்திய காங்கிரஸ் தேர்தலில் வாக்குகளே பெறுவதற்காக இந்திரா காந்திக்கு நேருவின் பெயரால் இடம் கொடுத்தது போன்றுதான் இலங்கையில் திருமதி பண்டாரநாயக்காவுக்கும் இடம் கிடைத்தது. இவற்றையெல்லாம் பெண்ணின் முன்னேற்றத்துக்குஉதாரணங்களாகக் கொள்வது தவறு. இவை அரசியல் தந்திரங்கள்.

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாமை. இக்குணங்களே ஒரு தமிழ்ப் பெண்ணுக்கு ஒட்டிட்டால் ஆண்-பெண் வித்தியாசம் அற்று நம் தமிழ்ப் பெண்ணின் பெருமை காற்ருேடு காற்ருகப் போய்விடும். தெய்வத் தமிழ்ப் பெண்ணே, பண்டைய இலக்கியப் பெண்ணே, குடும்பச்சுடரின் திருவிளக்கை, இன்றைய நவநாகரிகப்பெண், ஆங்கில மோகப்பெண் அழித்துக் கொண்டு போகிருள். பெரியோர்களே, எழுத்தாளர்களே, எங்கள் கண்ணகியின் வழித்தோன்றல் பெண்களே அன்னிய பழக்க வழக்கங்களில் இருந்து காப்பாற்றுவீராக.



## அழகுக்கோர் மருதோன்றி

காந்தள் விரல் என்று வர்ணிக்கப்படும் நங்கையரின் மென்மையான விரல்களுக்கு மேல்நாட்டு நாகரிக சாதனங்கள்மட்டும்தான் அழகுபடுத்தும் என்று எண்ணிவிடாதீர்கள். இலக்கியங்களிலும், சிற்பங்களிலும், சித்திரங்களிலும் தீட்டப்பட்டிருக்கும் பண்டைய பாரதமங்கையரின் அழகுக்கலேக்கு அழகூட்டுவனவாக இயற்கைச்சாதனங்களே உதவி செய்தன.

அவ்வகை இயற்கைச் சாதனங்களில்ஒன்றுதான் மாந்தளிர் விரல்களே வனப்புறச்செய்த மருதோன்றி என்ற மூலிகையாகும். இதனேக்கொண்டு நங்கையர் தம் செங்காந்தள் விரல்களேமேலும் செம்மைப்படுத்தினர்.

மருதோன்றி கீழைத் தேயத்தில் நன்கு வளரும் ஒரு வகைத் தாவரம். இதன் தளிர்களேக்கொய்து நன்ருக அரைத்துக் கைகளில் பூசுவதால் சிவந்தசாயம்பெற்றுக்கொள்ளலாம்.

மருதோன்றித் தளிரை அரைக்கும்போது எலிமிச்சம்பழச்சாறு, வெற்றிலே, பலாமரத்தின் உட்பட்டை போன்ற இவற்றில் ஒன்றைத் தளிருடன் சேர்த்து அரைத்தால் பிரகாசமான செம்மை நிறமாக மிளிரும்.

மருதோன்றிப் பசையைப் பூசுமுன் கைகளுக்குத் தேங்காயெண்ணெயைத் தடவினுல் சாயம் நன்ருக ஏறும். உள்ளங்கைகளில் பலவித வர்ணங்களில் தீட்டலாம்.

இரவில் பூசும் மருதோன்றியைக் காலேயில் மென்மையாக நீக்கிவிட வேண்டும். கரங்களே நீரில் கழுவமுன் எண்ணெய் தடவினுல் நிறம் பல நாட்கள் நீடித்துநிற்கும்.

மணநாட்களிலும், சிறந்த திருநாட்களிலும் இதை அணிந்து மங்கையர் மகிழ்கின்றனர், கவிகள் இக்கவினழகை பல இடங்களில் வர்ணித்துள்ளனர். இதோ அதில் ஒரு பாடல்.

"கலேந்த என் கூந்தல்
திருத்திட மாட்டீரா
ஓ! அன்பரே!
குழைத்த மருதோன்றி
கரங்களில் இட்டுள்
ளேன்பாரீரோ"

என பாரசீகக் கவிஒருவர் ஒருபெண்மணி கூற்ருகப் பாடி மகிழ்கிருர். —துளசி

## சமைத்துப் பார்

### தக்காளிப் பழ ஜாம்

தேவையான பொருட்கள்:- (1 1/2 ரு. ஜாமிற்கு)

*1 ரு. தக்காளிப் பழம்.*
*1 ரு. சீனி*
*3 பேணி நீர்*
*1/2 எலுமிச்சம்பழம்*

தயாரிக்கும் முறை:-

பழங்களிலுள்ள தோலே அகற்ற அவற்றின் மீது கொதி நீரை ஊற்றுங்கள். சில நிமிடங்களின் பின்பு தோலே உரித்தால் இலேசாகக்கழரும். சுத்தம் செய்த பழங்களேச்சிறு துண்டுகளாக நறுக்கி எண்ணே தடவிய அலுமினிய பாத்திரத்தில் இடுங்கள். இதனுடன் நீரையும் எலுமிச்சம்பழச் சாற்றையும் கலந்து பழம் மெதுவாக வரும்வரை நெருப்பில் வையுங்கள். இதன் பின் சீனியையும் சேர்த்துக் காய்ச்சுங்கள் சீனி பானியாக வந்து ஜாம் பதத்தை (இது ஜாம் கரண்டியிலிருந்து ஊற்றுகையில் கட்டிகட்டியாக விழவேண்டும் நன்ருக முறுகவிடக் கூடாது) அடைந்ததும் பாத்திரத்தை நெருப்பிலிருந்து இறக்கி ஆறவிட்டு ஈரப்பிடிப்பு அற்ற காற்றுப் புகாத கண்ணுடி ஜாடிகளுள் பத்திரப்படுத்திஞல் பல நாட்கள் பாவிக்கலாம்.

தக்காளிப் பழம் மலிவாக உள்ள இந்நாட்களில் இதைத் தயாரித்து உங்கள் சிறுவருக்கு ரொட்டி, பிட்டு முதலிய வற்றுடன் பரிமாறி அவர்களே மகிழ்வியுங்கள்.

—துளசி

# சிறுவர் பூங்கா



## முத்திரை சேகரிப்பு கற்றுத்தரும் பாடங்கள்

— க. பத்மநாதன் —

[முத்திரை சேகரிக்கும் பழக்கமுள்ள இக்கட்டுரை ஆசிரியர், அதனுல்பெறும் நன்மைகள் குறித்து இங்கே விளக்குகிருர். சிலருக்கு முத்திரை சேகரிப்பதில் மிக்க ஆர்வமுண்டு. இவ்வகையான பலதரப்பட்ட கட்டுரைகளே 'சிறுவர் பூங்கா' வரவேற்கிறது.]

1

முத்திரை சேகரிப்பு எனது வாழ்வில் சில நல்ல சீரான முறைகளேக்கையாளுவதற்குரிய பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்தந்த நேரத்தில் அந்தந்த வேலேயைச்செய்யும் ஒருமுறையை எனக்கு இது கற்றுத்தந்திருக்கிறது. அனுபவத்தால் ஏற்படும் குறிப்பிட்ட ஒரு முறையைப் பின்பற்ருத ஒருவர் தொடர்ந்து முத்திரை சேகரிப்பவராக இருக்கமுடியாது என்பதை முதலில் கூற விரும்புகின்றேன்.

2

ஒன்றைக் கிரகிக்கும் தன்மையை முத்திரை சேகரிப்பு எனக்கு ஏற்படுத்தியுள்ளது. வெகு கவனமாக அவதானித்துக் கிரகித்துக்கொள்ளும் தன்மையில்லாவிடில் எதிர்காலத்தில் எவ்வளவோ பெறுமதியாய் இருக்கக்கூடிய முத்திரைகளிலுள்ள தவறுகளேக் கண்டுபிடிக்கவே முடியாது போய்விடும். உலகில் கிரகிக்கும் சக்தி, அவதானிக்கும் ஆற்றல் உள்ளவர்கள்தான் மற்றவர்களே விட நல்ல நிலேயிலிருப்பதை நாம் அறிகின்ருேமல்லவா?

3

முத்திரை சேகரிப்பு எனக்கு இதுவரை பலதரப்பட்ட அறிவுகளே ஏற்படுத்தியுள்ளது. சரித்திரத்தின் ஒவ்வொரு திருப்பமும் முத்திரை மூலமாக நாம் அறியக் கூடியதாக இருக்கிறது. சரித்திரத்தின் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் அவ்வப்போது வெளியாகும் விசேஷ முத்திரைகள்மூலம் ஞாபகப் படுத்தப்படுகிறது. இதனுல் முத்திரை சேகரிப்பவருக்கு முத்திரை சேகரிக்காதவரை விட பலதரப்பட்ட விஷயங்களில் அதிக அறிவு பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

சென்ற இருபது வருடங்களில் முத்திரைகளின் அமைப்புக்கள் 'டிஸைன்' கள் பல மாற்றத்துக்குள்ளாகியுள்ளன. இதில் தற்போது பல சித்திரக்காரர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இதனுல் புதுமை பொலிவு பெறுகிறது. இது இப்போது ஒரு புதுக்கலேயைத் தோற்றுவித்துள்ளது. மனிதன் எப்போதும் புதுமுறையில் மாறிக் கொள்ளவே விரும்புகின்ருன் இவ்விதம் புதுமுறையில் மாறிக் கொள்பவன் எப்போதும் முன்னேறுவான் எனக் கூறலாம்.

4

இறுதியாக முத்திரைசேகரிப்பு எனக்கு பொறுமை, சகிப்புத்தன்மை இவற்றைக் கற்பித்துள்ளது என்பதையும் கூற விரும்புகின்றேன். பொறுமையில்லாமல் முத்திரை சேகரிப்பவர் வெற்றி பெற்றுவிடமுடியாது. இன்னும் பேனு நண்பர்களுடன் தொடர்பு கொள்ளும்போது பரஸ்பரம் நல்லெண்ணத்தைத் தோற்றுவிக்கும் வகையில் ஒருவித பொறுமையுடன் நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவர் தமது வாழ்வில் வெற்றி பெறுவதற்கும் இவ்வித அம்சங்கள் தேவை. இந்தவகையில் இவற்றையெல்லாம் ஏற்படுத்தித்தரும் முத்திரை சேகரிப்பு வாழ்க்கையில் எவ்வளவோ கற்றுத்தருகிறது. இதை மறுக்க முடியாது.

நீ வாழ்க்கையைநேசிக்கிருயா? அப்படியாஞல் நேரத்தை வீணுக்காதே. ஏனென்ருல் வாழ்க்கையின் மூலப் பொருள் நேரம்தான்.

—பிராங்க்ளின்

ரவி:- என்ன மணியம், உனக்குக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுசறுக்கிப்போய் விட்டதாகக் கேள்விப் பட்டேன்?

மணியம்:- அது ஏன்தெரியுமா? நான் என் வேலேயை மட்டும்தான் செய்கிறேனும். அவன் (உயர்ச்சிபெற்றவன்)மனேஜர் விட்டு வேலேயையும் சேர்த்துச் செய்கிருனும்.

—கந்த. ரவிச்சந்திரன், சாவகச்சேரி,

## கூடாது தம்பி

— செ. மகேந்திரன் —

கூடாது கூடாது தம்பி! — நன்று
கூடியே ஆடிஞய் கண்ணனே டன்று
வீடேகிப் போனபின், தம்பி! — கண்ணன்
வீணனென் றுரையாதே கூடாது தம்பி!

தவறுநீ கண்டதும் கூறு — கண்ணன்
தவறுகள் நீங்கநற் துணேயிருந் தோது!
அவனிலா வேளேயில் எள்ளி — நகைத்(து)
அவன் குறை கூறுதல் கூடாது தம்பி!

அன்புள நெஞ்சமே தம்பி — நல்ல
அறிவுள நெஞ்சமாய் வளருமே தம்பி!
இன்பமே எந்நாளும் வாழும் — அரு(கே)
இல்லாதவர் குறை கூருதே தம்பி!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இலக்கியக் கவி நயம்

# யாழ்செய் வண்டு

சுரும்பு, வண்டு, தும்பி, ஞிமிறு என்பன வண்டின் பலவகைகள். இவை இசை பாடி மலரின் தேனை உண்ணும் தொழிலுடையன. இவற்றிற்கு மதுகரம் எனவும் பெயருண்டு. அது வடசொல். தேனை ஈட்டுவது என்பது அதன் பொருள். வண்டு தேனை விரும்பியே மலரைச்சூழ்ந்துகீதம்இசைக்கிறது. பூஞ்சோலைகளில் அழகிய வண்டுகள் இசை செய்வது ஓர் அழகு. ''கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ் செய் குற்றாலம்'' என்பது ஞானசம்பந்தர்வாக்கு. வண்டுகள் பாட மலர்மொட்டு அவிழும். அதன் பின்பு பூவில் உள்ள மதுவை உண்டு வண்டினம் ஆனந்த மிகுதியால் இசைபாடும். அந்த இசையைச்செவிமடுத்த மந்திகள் ஆனந்தத்தால் துள்ளிப்பாயும். இக்காட்சியை,

''தாதுவிண்ட மதுவுண்டு
வரும் வண்டினம்
கீதம் பாட மடமந்தி
கேட்டுகளும்கேதாரமே''

என ஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

ஒரு சோலை. பகற்காலம் சூரியனது கிரணங்களாகிய சேனை வளைப்ப அஞ்சி இருள் ஒதுங்கியிருந்த தன்மை போன்ற சோலை. அச்சோலையில் வெயில் நுழையமாட்டாது. ஆனால் குயில் நுழையும். அங்கே மயில் நடனம் செய்கிறது. தும்பி எனஅழைக்கப்படும் வண்டு வேய்ங்குழலிசைக்கின்றது. இனிய ஓசையை உடைய வண்டினங்கள் யாழ் இசையை உண்டாக்குகின்றன. இந்த நடனத்தையும், இசையையும் குரங்கு பார்த்து மகிழ்கின்றது. இக்காட்சியை,

''பரிதியஞ் செல்வன் விரி
கதிர்த் தானைக்கு
இருள்வளைப்புண்ட மருள்
படு பூம்பொழிற்
குழலிசை தும்பி கொளுத்
திக் காட்ட
மழலைவண்டினம் நல்லியாழ்
செய்ய
வெயினுழை யறியாக் குயி
னுழை பொதும்பர்
மயிலாடரங்கின் மந்தி
காண்பன காண்'',

என மணிமேகலை என்னும் காப்பியம் அழகுற எடுத்துப் பேசுகிறது. ஞிமிறு என்னும் வண்டினம் பாடும் இசை வேய்ங்குழலிசைக்கு உவமையாக மணிமேகலையில் மாத்திரம் கூறப்படவில்லை. கலித்தொகையிலும் அவ்வாறே கூறப்பட்டுள்ளது. நரம்பினையுடைய யாழிலிருந்தெழும் இனிய ஓசையை தாளம் கெடாதவாறு நிறுத்த உதவும்குழல் வாத்தியத்தின் ஓசைபோல் தும்பிக்கூட்டங்களோடு ஞிமிறு என்னும் தேனீக்கூட்டங்களும் ஓசை செய்கின்றனவாம்.

''நரம்பின் தீங்குழல் நிறுக்
கும் குழல்போல்
இரங்கிசை ஞிமிறொடு
தும்பி தாதூத''

என்பது பாலைக்கலி.

நெய்தல் கலியிலே வண்டிற்கு உவமையாகக் கூறப்படும் ஒரு புதுவித யாழைக் காண்கிறோம். தனக்கு இனமாகிய மீன்களின் பகை அழியும்படி அவற்றைத் தாக்கி வென்ற சின மிக்க சுறு மீன் கொம்பால்செய்த பலகையைக்கோத்து நெய்தல் மலர்களை நாரில் தொடுத்துக்கட்டி கையால் வாசிக்கப்பெறும் யாழோசை போன்று வண்டுகள் வாய் திறந்து பாடும் எனக் கலித்தொகைச் செய்யுளொன்று கூறுகிறது. வண்டின் இசையைப் பெண்களின் மிடற்றோசைக்கு உவமையாகவும் கலித்தொகை பிறிதோரிடத்தில் எடுத்துக் கூறுகிறது. முறுக்கற இழுத்துப் பூட்டப்பெற்ற யாழ் நரம்பு இசைப்பதுபோல வண்டுகளும், சுரும்புகளும் ஆரவாரப்பேரொலி எழுப்புகின்றன. பாடிப் பரிசாகப்பெற்ற

— வ. சுகசர்மா —

வளையல்களை அணிந்த கையினை உடையவளாகிய விறலியின் இனிய பாட்டுப் போல தும்பி இசையினை எழுப்புகின்றது. பல இசைக் கருவிகள் ஒன்றுசேர்ந்து இனியஓசையை எழுப்புவன போல தேனீக்கள் மலர்களை ஊதுகின்றன.

''வடிநரம்பு இசைப்ப
போல் வண்டொடு
சுரும்பார்ப்ப
தொடிமகள் முரற்சிபோல்
தும்பி வந்திமிழ் தர
இயன் எழி இயவைபோல்
எவ்வாயும் இம்மெனக்''

என்னும் கலித்தொகை அடிகளைப்படிக்கும்போது தற்காலத்தில் கூட்டாக ஒலிக்கும் இனிய பின்னணி வாத்தியங்களின் இசையை அநுபவிப்பதுபோல் இருக்கிறது.

வண்டுகளின் இசைதாலாட்டாகவும் கற்பனைசெய்யப் பட்டுள்ளது. திருச்செந்தூர் முருகன் எழுந்தருளியுள்ள தலம், கடற்கரையில் உள்ளது கடலுள் கருமுதிர்ந்த சங்குகள் உண்டு. அந்தச் சங்குகள் அலைகளில் அள்ளுப்பட்டு வருகின்றன. அலைகளின் வேகத்திற்குப் பயந்து அலறிக்கொண்டு நிலத்திற் தவழ்ந்து வருகின்றன. அண்மையில் உள்ள தடாகத்தில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் அத்தாமரை மலரில் சென்று சங்குகள் அச்சம் நீங்கி இளைப்பாறுகின்றன. வண்டுகள் இசை பாடுகின்றன. அந்த இசையால் சங்குகள் சுகமாக நித்திரை செய்கின்றன. இதனை,

''அலைமுகந் தவழ்ந்து
சினைமுதிர்ந்த சங்க
மலறிவந்து கஞ்ச — மலர்
மீதே
அளிகலந்தி சங்க
இசையுடன் துயின்ற
அரிய செந்தில் வந்த
—பெருமாளே''

என அருணகிரிநாதர் தமது திருப்புகழில் அழகுற எடுத்துக் கூறியுள்ளார்.

பெண்மிடற்றினின்றும் எழும் ஓசையை வண்டின் இசைக்கு உவமானமாகக் கூறுமிடத்து மற்றும் இரு காட்சிகள் நமது ஞாபகத்திற்கு வருகின்றன. இரண்டும் ஒன்றற்கொன்று தொடர்புடையன. முதலாவது காட்சியைப் பார்ப்போம். சிங்கம் போன்ற வலிமையினையுடைய கானவன் ஒருவன் தினைப்புனத்தில் உள்ள பரனின் கண்ணே கள்ளுண்டு களித்திருந்தான். அவனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கக் கருதினாள் அவன் மனைவியாகிய கொடிச்சி. அவளது கரிய கூந்தலை அசைந்துவரும் காற்று புலர்த்தியது. அவள் கூந்தலைத்தன் விரல்களால் கோதிவிட்டாள். பின்குறிஞ்சிப் பண்ணைத் தன் இனிய குரலால் பாடத் தொடங்கினாள். அவள் பாடத் தொடங்கு முன்பு யானை ஒன்று வந்து சில தினைகளை தாம் உண்ணும் படியாகத் தும்பிக்கைகளால் பிடுங்கிக் கொண்டது, இந்த நேரத்தில் கொடிச்சி பாடத் தொடங்கிவிட்டாள். அந்த இசையில் மயங்கிய யானை தினைக்கதிர்களை உட்கொள்ளவுமில்லை; அந்த இடத்தை விட்டு அசையவுமில்லை. மெய்மறந்து அப்படியே நின்றது. இது அகநானூற்றில் உள்ள ஒரு காட்சி.

இரண்டாவதுகாட்சியைப் பார்ப்போம். அவந்தி நாடு நீர்வளம் மிக்க நாடு. அங்கே உள்ள தடாகங்களில் குவளை மலர்கள் அதிகமாக மலர்ந்திருக்கும். அந்த மலர்களை எருமைக் கடாக்கள் உண்ணச் சென்றன. அவற்றைப் பற்றிக் கௌவிவிட்டன. அப்போது அந்த மலர்களில் உள்ள வண்டுகள் இசையை எழுப்புகின்றன. அவற்றின் இனிய இசையைக் கேட்ட எருமைக் கடாக்கள் அம்மலர் உண்ணுமல் அவற்றின்இசையில் மயங்கி நிற்கின்றன. முதற்காட்சியில் பாடியது பெண், மயங்கி நின்றது யானை; இக் காட்சியில் பாடியவை வண்டுகள்; மயங்கி நின்றது எருமைக் கடா. நளவெண்பா சுயம்வரகாண்டத்தில்உள்ள இக்கருத்துள்ள பாடல் பின் வருவது:

''வண்ணக் குவளை மலர்
வெளவிவண்டெடுத்த
பண்ணிற் செவிவைத்தப்
பைங்குவளை — உணு
தருங்கடா நிற்கும் அவந்தி
நாடாளும்
இருங்கடா யானை இவன்''

## தத்துவக் கதை

(II-ம் பக்கத் தொடர்ச்சி)

பிணத்தைச்சுற்றி, இனிச் சாம்பிணங்களின் ஓலம் எழுந்து பரவிக்கொண்டிருந்தது

குமரேசன் என்னை உலுப்பி உலுப்பி அழுதான்.

மனம் நேற்றைய இரவின் நுனியில் தொங்கிற்று.

மரணம் என்பது தேய்வும் இல்லை பிறப்பும் இல்லை அதைச் சுற்றியிருக்கும் நூறுயிரம் தத்துவங்களும்இல்லை. மரணத்திற்கு வரம்பில்லை. தனக்கு நெருக்கமான உயிரின் பிரிவை உணர்ந்தவன் மட்டும் உணரும் இரகசியமோ? பாஷைகள் தோற்கிற இடமும் அதுதானே?

நண்பன் விம்மலுக்கிடையில் அரற்றினன்.

''பாயில் படுத்த படுக்கையாய்க் கிடந்தாலும் நிறைவு இருந்தது. இனிஎன்னடா?''

கண்களை மெல்லத்துடைத்துக் கொண்டேன்.

(யாவும் கற்பனை)

## தெரிந்து கொள்ளவும்

பருந்துகளுள் மிகப்பெரியது தென்னமெரிக்காவில் அண்டீஸ் மலையில் காணப்படும் கொண்டோர். இது ஒன்றைவிட்டொரு வருடம் ஒரு முட்டையிடும். 1910-ல் கொண்டோர் முட்டை ஒன்று 300 டாலருக்கு விலை போயிற்று. கொண்டோர் முட்டை ஆறு வாரத்தில் பொரிக்கும். குஞ்சுக்கு இறக்கை முளைக்க ஐந்து மாதங்களாகும். கொண்டோர் செட்டை விரித்துப் பறக்கும்போது செட்டையின் ஒரு முனையிலிருந்து மறுமுனை 12 முதல் 14 அடி நீளமிருக்கும்.

ஃ

முதலைகள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். முட்டையின் ஓடு மினுக்கமுடையதாகவும் வைரமாகவுமிருக்கும். பெண்முதலை ஆற்றங்கரை அல்லது குளக்கரையில் குழிதோண்டி முட்டைகளை இட்டு மணலால் மூடிவிடும். சில சமயங்களில் அது தாவரப் பொருள்களைக் கும்பமாகச் சேர்த்துவைத்து அதனடியில்முட்டையிடுவதுமுண்டு. தாவரப்பொருள்கள் அழுகிச்சூடேறுவதால் முட்டைகள் விரைவில் பொரிக்கும். பொதுவாக முதலைகள் 20 அடி நீளம் வளரும். சில சாதி முதலை 30 அடி நீளம் வளரும். முதலைகளின் பற்கள் பல சிறை விழுந்து முளைக்கும். ஓரளவு வளர்ந்தபின் முதலைகள் சிறு கற்களை விழுங்குகின்றன. முதலை நீருள் மூழ்கி இருப்பதற்குப் பாரமாகக் கற்கள் பயன்படுகின்றன. முதலையின் முட்டைகள் இரண்டு மாதங்களில் பொரிக்கும். குட்டியின் நீளம் 8 அங்குலமளவிலிருக்கும்.

ஃ

பட்டுப் பூச்சிகளின் வாழ்க்கை 50 நாள். முட்டைகள் பத்து அல்லது பன்னிரண்டு நாட்களில் பொரிக்கும்.

ஃ

உலகில் மிகப் பெரியமரம் கனடாவில் மரிப்போசாத் தோப்பில் (Mariposa grove) உள்ளது. கிரிஸ்லி சயண்ட் (Grizzly giant) என்னும் இம்மரம் உலகில்மிகப்பெரியது. இதன் உயரம் 209 அடி. அடியின் விட்டம்34 அடி. இதன் எடை 37,000 தொன் எனக் கணக்கிடப் பட்டுள்ளது.

ஃ

தும்பிக்கு இரண்டு சோடி இறக்கைகளுண்டு. அவை ஒவ்வொரு சோடி இறக்கைகளையும் தனித்தனி அடித்துப் பறக்கும்.

ஃ

சித்தன்னவாசல் சுவர் ஓவியங்களை ரி. ஏ. கோபிநாத்ராயர் தற்செயலாக 1919-ல் கண்டு பிடித்தார்.

—திரட்டு; என். எஸ். கே.




### சங்கம்—பொங்கல் மலர்

ஆசிரியர்:- சமூகத்தொண்டன். விலை: 30 சதம்.

சங்கம் பொங்கல் மலரில் பல சான்றோரின் கட்டுரை, கவிதைகள் இடம்பெற்றுள்ளன. பண்டைத் தமிழர்கள் இயற்கைக் கருவிகளையும், செயற்கைக் கருவிகளையும் பயன்படுத்திப் பெரும்பொழுது சிறுபொழுதுகளைக் கணித்த பாங்கை, நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் 'காலங்காட்டும் கருவி'களில் விரிவாக விளக்குகிறார், 'தமிழா! நீ உலகில் இன்று அடிமையிலும் அடிமை! உன் மொழி அடிமை இனத்தின் மொழி..... கடைப் பிடிப்பொழுக்கில் தோன்றி...ம் தமிழன்தான் உலக விடுதலைப் படையாகத் முதல்முதலாய், முன்னணிப் படையாகத் தோன்றியவன் என்பதை மறவாதே! உணர்ச்சி கொள். ஆண்மையொடு எழு! தலைநிமிர்ந்து நில்!' என இளந்தமிழருக்கு எழுச்சியூட்டுகிறார், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை. 'தமிழரின் நெறி' என்ற கட்டுரையில் முத்தமிழ் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன் பல பொருள்களை பொருத்தமான உவமானங்களால் விளக்கியுள்ளார். மலையக கவிஞர் பி. ஆர். பெரியசாமி, திரு. எஸ். சுந்தரராஜ், இராஜம் புஷ்பவனம் ஆகியோரின் கவிதை, கட்டுரைகளும் மலருக்கு மணம் ஊட்டுவன.

### தமிழ்மகள் 1965 66

கூட்டாசிரியர்கள்:- திருமதி மா. மங்களம்மாள்,

(VIII-ம் பக்கம் பார்க்க)

# நம்பலாம் நடந்தது!

### கலையான சண்டைகள்

போர்னியோவில் சில காலத்துக்கு முன்னர் இடம்பெற்ற சண்டைகள் விசித்திரமானவை இரு ஆண்களுக்குள் சண்டை ஏற்படடுவிட்டால், உடனே தங்கள் மனைவியரை அழைத்து, அவர்கள் இருவரையும்சண்டை போடச் சொல்வார்களாம். எந்தமனைவி வென்றாளோ, அவள்கணவனும் வெற்றி பெற்றதாகப் பொருள்!

ஒரு சமயம் இரண்டு பிரெஞ்சுக்காரர்களிடையே ஏதோ காரணமாகச் சண்டை ஏற்பட்டது. உடனே அவர்கள் தற்பாதுகாப்புக்காகவும், பொலிஸின் கையில் அகப்படாதிருக்கவும், இருவரும் சிறியபடகில் ஏறிக்கொண்டு நடுக்கடலுக்கே சென்றுவிட்டார்கள். அங்குப்போய் ஒருவரையொருவர் துப்பாக்கியால் சுட்டுச்சண்டை செய்தார்கள். கடைசியில் ஒருவனின் படகில் குண்டுபட்டு ஓட்டையாகிப்படகே கடலில் மூழ்கிவிட்டது. அந்த ஆள் உடனே, ''ஐயோ, எனக்கு நீந்தத்தெரியாதே!'' என்று கத்த, உடனே எதிரி, சமுத்திரத்தில் மூழ்கி, நீந்திச்சென்று அவனைக் காப்பாற்றினும்!

எப்படிச்சண்டை?

### அதிசயம் ஆனல் உண்மை!

வால்டேர் நெல்சன் என்ற அமெரிக்கர், ஒரே சக்கரவண்டியில் 3,386 மைல்களை 117 நாட்களில் கடந்தார். இப் பயணம் வாஷிங்டன் பாலத்திலிருந்து தொடங்கி சாண்டியாக்கோவோடு முடிந்தது.

### கவிமணியின் பெருந்தன்மை!

ஒரு முறை கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையினுடைய நண்பரொருவர், ஏதோ விருந்துவைபமொன்று நடாத்துவதற்காக கவிமணியினுடைய அழகான வீட்டைத் தந்துதவுமாறு வேண்டினர். கவிமணியும் அதற்கு இசைந்தார்.

கவிமணியின் வீட்டில் அன்று ஏகப்பட்ட கூட்டம். விருந்து நடைபெறுவதற்கு ஒரு சொற்ப நேரமே இருந்தது. அப்போது ஓர் ஆள் ஓடிவந்து கவிமணியின் காதுக்குள் ''உங்கள் பெயருக்கொரு தந்தி வந்திருக்கிறது.'' என்றான். உடனே கவிமணி வெளியில் சென்று தந்திச்சேவகனிடமிருந்து தந்தியை வாங்கி எதுவும் பேசாது சட்டைப்பைக்குள் வைத்து விட்டார். கவிமணியின் காலத்தில், தற்போது போலல்லாது, துக்கசெய்தியை மட்டும் அது தாங்கிவரும். தந்தி என்றால் அப்போது எல்லாருக்கும் பயம்தான்! ஆனாலும் கவிமணி தந்தியைப் பிரிக்கவில்லை. ''இதைப்பிரித்துப்படித்ததும் எனக்கு வேதனை ஏற்படும். மற்றவர்களும் விஷயத்தை அறிந்துவிடுவார்கள். விருந்து நடத்தும் நண்பர் அறிந்தால் மிகவும் துக்கப்படுவார்'' என்று எண்ணியபடியாலேயே கவிமணி தந்தியைப் பிரிக்கவில்லை. விருந்து முடிந்ததும் தந்தியைப் பிரித்தார். அதில்- 'தங்கள் மருமகள் இறந்துவிட்டாள்; உடன் வரவும்' என்றிருந்தது. —ராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் மகன் தனக்கு......

—பெரி. சண்முகநாதன்—

வா வா கருங்குயிலே! வானமுதம் என் செவிக்குக்
கூ கூ எனப்பாடிக் கொண்டூட்டும் கோகிலமே
என்னைப் படைத்தாளும் எம்மான் புகழ்பாடிக்
கண்டி நகர்ப்புறமாய் இன்று நீ செல்வாயேல்
தன்னிகரில்லாப் பேராதனை யதனில்
என்மகனைக் கண்டு இது சேதி நீ யுரைப்பாய்
அஞ்சாறு நாட்களாய் அஞ்சல் வரவில்லை
அஞ்சிக்கிடக்கின்ருள் அன்னையெனச் செப்பிடுவாய்!
நான்பெற்ற பிள்ளை நலமானல் நான் நலமே
தான் சிறிதும் அங்கே கவலற்க என்றுரைப்பாய்!
மட்டின்றி நீண்டும் பயன்படா மாமரங்கள்
வெட்டுண்டே தீக்கிரையாய் வீசப்படுமென்ற
வாக்குண்டு நல்ல வரமுண்டு வாய்ப்புண்டாம்-
ஆக்கமது கல்வி அதைப்பெறுக என்றுரைப்பாய்!
ஆல்போல் நிழல்தந் தருள் செய்ய மாட்டாயேல்
காலில் செருப்பாய்க் கடன் செய்ய வேண்டுமடா
போக அமுத விருந்தாக மாட்டாயேல்
தாகம் தீர்க்கின்ற தண்ணீராய் வாழ்ந்திடுவாய்
ஒன்றேனும் நன்ருய் உலகிற்குச் செய்திடுவாய்
இன்றெனில் தீதேதும் எண்ணுமை நன்றென்பாய்
அத்தனைக்குங் கல்வி அடிப்படையாய் வேண்டு
மெனச்
சித்தம் தெளியச் சொல் சீரார் கருங்குயிலே!
போன ஒரு பொழுது பொன் கொடுத்தால் மீளாதே
ஆனதால் காலம் அறிந்து படியென்பாய்!
ஆசிரியர் பாடம் அருளிச் செய்யும் வேளையில்
நீ சிறிதும் வேறே நினைக்காமல் கேட்டிருந்து
ஐயந் திரிபறுத்(து) ஆய்ந்து கலை பயின்று
வையத் தொரு மகனய் வாழும் புகழ் வேண்டும்
சுற்ருர் பழிக்கக் கடுஞ்சொல் வருமாயின்
பெற்ற பொழுதில் பெருந்துன்பம் நானடைவேன்
உன்னைப் பெறும்பொழுதே ஓராசை நான்பெற்றேன்
அன்னை எனக்கதனை ஆற்றிடுக என்றுரைப்பாய்!
நன்ரும் உன் கல்விக்கு நண்பர் இடரானல்
அன்றே அவருறவை அப்போதே விட்டிடுக
உன்னேடு சேர்வார் உணர்ந்து பயில்வாரேல்
அன்னர் தம் கேண்மை அணுவும் பிழையாதே
கற்றலே நோக்கம் கவலை உனக்கில்லை
மற்றவை யாவும் எனக்கே என மொழிவாய்!
ஓயாத துன்பம் ஒருகோடி வந்தாலும்
தாயானேன் தந்தையுமாய்த் தாங்கிடுவேன் என்
றுரைப்பாய்;
மாதமொரு நூறு மகிழ்ந்தே அனுப்புகிறேன்
போதாமை உண்டாயின் உண்டென்றெழுதென்பாய்!
கன்னங்கருங்குயிலே காதல் மகன் தனக்(கு)
இன்னவை யாவும் இனிக்கவே கூறிய பின்
தாயென் மனம் மகிழ மைந்தன் நலமறிந்து
வாயார நீ பாட வா!

# 'என்னதம்பி, மெலிந்து போனய்?'

(I-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரோடு போராடிக் கொண்டிருக்கும் நோயாளிகளைக் காணும்போதும் 'பேஷ், இன்றைக்கு மிகவும் நல்லாயிருக்கிறீர்களே! என்னுடைய மருந்தை தொடர்ந்து சாப்பிட்டுவாருங்கள்' என்று உற்சாகம் அளிக்கும் வகையில்தான் பேசுவார்கள். இதைக் கேட்டதும் நோயாளிகளுக்கு உண்மையாகவே புதிய தெம்பு பிறந்துவிடுகிறது. தான் குணமடைந்துவிடுவதாகவே அவன் நினைத்துக்கொள்ளுவான். அந்த மன நிறைவே அவனுக்குப் பூரணசுகம் தருவதற்கும் ஏதுவாகும்.

வளர்ந்துவரும் குழந்தைகளும் இப்படித்தான். குழந்தை கணக்கில் பிழைவிட்டுவிட்டால், அந்தப் பிழையைச் சுட்டிக்காட்டி அவனில் குறை காண்பது புத்திசாலித்தனமல்ல. 'ஒரு நாளைக்குச் சொன்னல் கேட்கமாட்டாய். எப்ப பார்த்தாலும் இதே பிழையை விட்டுக்கொண்டிருக்கிருய்' என்று அந்த இடத்தைச் சுற்றிச் சுற்றி அழுத்தினல் குழந்தை மீண்டும் அந்தப் பிழையை விடுமேயொழிய ஒருபோதும் திருந்தப்போவதில்லை.

வழி, தெருவில் நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போது, இங்கிதமாக நடந்து கொள்ள முயல வேண்டும். முகத்தை 'உம்'மென்று உப்பிவைத்துக் கொண்டு 'ஏன் தம்பி மெலிந்து போனய்' என்று அபஸ்வரமாகவும் அவலமாகவும் கேட்பதை விடுத்து, உண்மையில் ஒருவர் மெலிந்து போயிருந்தாலும் கூட, அதை மனதில்இரகசியமாகக் குறித்துக் கொண்டு, சிரித்தமுகத்துடன் 'எப்படித் தம்பி, சௌக்கியமா' என்று குசலம் விசாரிப்பதுதான் முறை.

வெளியூர்களிலிருந்து வருபவர்களை வினவும் வேறுசில அசம்பாவிதமான கேள்விகளும் உண்டு. இங்கிதம்தெரியாதவர்கள் வெறுக்கத்தக்க கேள்விகளைக் கேட்டு நாலு பேர் முன்னிலையில் ஒருவருடைய சொந்த விவகாரங்களை அம்பலப்படுத்தலாகாது.

'இப்ப என்ன குடுக்கிருன்கள்?'

'இன்னும் தனிச் சோறு தான் தின்கிருயோ?'

'பெண்சாதியோடே இப்ப சந்தோஷமே?'

'அந்த வழக்கு என்ன வாய் முடிஞ்சுது?'

இவையெல்லாம் சில அருமையான உதாரணங்கள்.

இந்த அவஸ்தைகளுக்குட்பட விரும்பாத ஒருவர், லீவில் ஊருக்கு வருங்காலத்தில், 'எனக்கு வயது 34. கல்யாணமாகி 3 குழந்தைகள். புருஷன் மனைவி ஒற்றுமையாக இருக்கிறேம். எனக்கு இப்பொழுது சம்பளம் 250 ரூபாய். தயவு செய்து என்னிடம் கடன் கேட்காதீர்கள். நான் நான் நாளைக்கேதிரும்பிவிடுவேன்.' என்று ஒருபட்டியல் தயாரித்து அதைக்கழுத்தில் மாட்டிக்கொண்டு வெளியே உலாவினலும் அதைக்கண்டு ஆச்சரியப்படவேண்டியதில்லை.

# தமிழ் வளர்த்த வீர மாமுனிவர்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனவும், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனவும், "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" எனவும் மிகப் பரந்த மனப்பண்பினைக்கொண்ட மாபெரும் மக்களைத்தோற்றுவித்த தமிழகமும், தமிழ் மொழியும் தனிச் சிறப்புடையனவாகும்.

வேறுஎந்நாட்டிற்கும், எம்மொழிக்கும்இல்லாத சிறப்பு -ஆற்றல் இவற்றிற்குண்டு.

மனித உள்ளத்தைப் புனிதப்படுத்தும் மாண்பு மிக்க எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியில் சிறந்து காணப்படுவதுபோல் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை.

"வணிகத்தின் மொழி ஆங்கிலம் என்றல்-சட்டத்தின் மொழி இலத்தீன் என்றல்-தூதின்மொழி பிரான்சு என்றல்-இசையின் மொழி கிரேக்கமென்றல்- தத்துவத்தின்மொழி செருமானியம் என்றல்-உலகிலே பக்தியின் மொழி தமிழாகும் - எனத் தவத்திரு தனிநாயக அடிகளார் தாம் எழுதியுள்ள தமிழ்த்தூது எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு சமயக் கருத்துக்களைத் தன்னகத்தேகொண்டிருந்த தமிழ் நாடு அவ்வச் சமயங்களின் கருத்துக்களைத் தனது மொழியாம் தமிழ் மொழியில் வெளியிட இடம் கொடுத்தது.

சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், புத்தர்களும், கிறிஸ்தவர்களும், இஸ்லாமியர்களும் தங்கள் சமய இலக்கியங்களைப் பண்டத்து மகிழ்ந்த ஒரே உலகமொழி தமிழேயாகும். தமிழ் மொழிபோல் பழம் பெருமை வாய்ந்த இலத்தீனுக்கோ, வடமொழிக்கோ இவ்வாருன சிறப்பு இல்லை எனலாம்.

இவ்வரிசையில் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய கிறிஸ்தவர்களில்பெரும் பாலோர் மேலை நாட்டுப் பாதிரிகளே. இவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகச் செய்த முயற்சி தமிழுக்கும் நன்மை அளித்தது எனலாம்.

மேலைநாட்டறிஞருள் தலைசிறந்தவர் வீரமாமுனிவர் ஆவார். இத்தாலி நாட்டிலுள்ள காஸ்திக்கிளியோன் எனும் ஊர்தான் கி. பி. 1680-ம் ஆண்டில் தமிழ் வளர்த்த தைரியநாதரைத் தமிழகத்திற்குத்தந்து தனிப்புகழ் பெற்ற பெருநிலமாகும். வீரமாமுனிவரின் இளமைப் பெயர் கான்ஸ்டன்டைன் யோசெப் பெஸ்கி.

1698-ல் துறவியான இவர் 1711-ல் இந்தியாவிற்கு வந்தார். தமிழ் நாட்டிற்கு வந்துசேர்ந்த இவர் தமிழரோடு தமிழராய் வாழ்ந்து சமயப்பணிஆற்ற எண்ணினர். இதற்குத் தடையாக உள்ள தமது முதற்பெயரை மாற்றித் தைரிய நாதர் எனும் பெயரைத் தாங்கினர். தமிழ் நாட்டில் தம் சமயப்பணி வெற்றிபெறத் தமிழ் அறிவு இன்றியமையாதது என அறிந்தார். முனிவர் நம் தமிழ்மொழிக்குச்செய்துள்ள தொண்டுஈடு இணையற்றது.

**புலவர்**
**ஏ. டபிள்யு அரியநாயகம்**

தமிழரோடு தமிழராய் வாழ்ந்து தமிழை வளர்த்தார். செந்தமிழ் நலம் கனிந்த காவியம் செய்து சிறப்புப்பெற்ருர் — வசன நடைக்கு வழிகாட்டி வான் புகழ் படைத்தார். இலக்கண நூல்கள் இயற்றி ஏற்றமடைந்தார். தமிழ் உரை நடைக்கு வளர்ப்புத்தந்தையாராய் உள்ள முனிவர்—தமிழ் அகராதிக்குத் தனித் தந்தையர் ஆனர்.

இவர் வெளியிட்ட சதுரகராதியானது பெயர்-பொருள்-தொகை-தொடை என்பன பற்றிப் பிரிக்கப்பட்டுள்ளது.

தொன்னூல், கொடுந் தமிழ் இலக்கணம், வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகமறுத்தல், பரமார்த்தகுரு கதை என்பன இவர் இயற்றிய நூல்களில் தலைசிறந்தவையாகும்.

வீரமாமுனிவர் இயற்றிய பரமார்த்தகுருவின்கதையே தமிழில் முதன் முதலில் தோன்றிய "ஏளன" (Satire) இலக்கியமாகும். இந்நூல் ஆங்கிலம், பிரான்சு, செர்மன், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவரின் திருக்காலூர்க் கலம்பகம், கித்தேரி அம்மாள் அம்மானை எனும் நூல்கள் கத்தோலிக்க சமய இலக்கியங்களில் இன்றும் சிறந்து விளங்குகின்றன. 'ஏ', 'ஓ' முதலிய எழுத்துக்களில் இவர் அமைத்த மாற்றம் குறிப்பிடத்தக்கதாகும்.

சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னல் "தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை முயன்று, தமிழ் மொழியிலுள்ள திறமான புலமைதனை வெளி நாட்டார் வணங்கும்படியான முயற்சியை முதலிற் செய்தவர் வீரமாமுனிவரே."

தமிழின் சிறப்பை மேலை நாடுகள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, தமிழ் - இலத்தீன் அகராதி ஒன்றையும், தமிழ் போர்த்துக்கீசிய அகராதி ஒன்றையும், தமிழ்-லத்தீன்-போர்த்துக்கீசிய மொழி அகராதி ஒன்றையும் வெளியிட்டு மேலை நாடுகளுக்கு வழங்கியதோடு, வான் புகழ்கொண்ட வள்ளுவரின் திருக்குறளை முதன் முதலில் பிறமொழியாகியஇலத்தீனிலும் மொழி பெயர்த்தார்.

தேன் சொட்டும் தேம்பாவணி எனும் பெருங்காப்பியம் இயற்றிக் காப்பியக் கவிஞராக விளங்குகின்ருர். 3 காண்டங்களையும், 36 பாடல்களையும், 365 விருத்தப்பாக்களையும் கொண்டது இந்நூல்.

முனிவரால் தமிழன்னை பெருமையடைந்தாள். தமிழன்னையால் வீரமாமுனிவர் புகழடைந்தார்.

## இலங்கையில் மீன்....

(Iம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுபோகின்ருர்கள். இத்தரகர்களை நீக்கி மலிவான முறையில் பெறவே நியாய விலைக்கடைகள் தோற்றுவிக்கப்பட்டன. மீன் விலை கூடுவதற்குக் காரணம் தரகர்களே. நியாய விலை மீன்கடைகள் நேரடியாக மீனவர்கள் கொண்டு வரும் மீன்களை வாங்கி மக்களுக்கு நேரடியாகவே விற்பதால் நியாயமான விலைக்கு மீன் வாங்கும் வாய்ப்பு பொதுமக்களுக்குக் கிடைக்கின்றது. அத்துடன் மீன்களின் தரத்திற்கேற்ப விலைகள் குறிக்கப்பட்டுள்ளதால் தரம் கூடிய மீனையும் நியாயமான விலையில் வாங்க முடிகிறது.

# நமது நூல் நிலையம்

(VIIம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி தி. புவனேஸ்வரி தேவி. விலை:- ரூ. 2-00

தமிழ்மகள்பதினைந்தாவது ஆண்டு மலர்கிடைக்கப்பெற்றேம். மகளிர் வளர்ச்சிக்குரிய கருத்துக்கள் பல கட்டுரைகளில் பரந்திருக்கின்றன. மங்கையர் குலத்திற்குச் சிறந்த வழிகாட்டிகளாக விளங்கும் அன்னை சாரதா தேவி, சகுந்தலை, மாதவி ஆகியோர் பற்றிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. தமிழ் மகளின் வாழ்க்கைக் குறிக்கோளை கோவையூர் கிழார் திரு. ம. இராமச்சந்திரன் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். மகளிர் மட்டுமன்றிஅனைவரும் படித்தின்புற பலபெரியார்களின் சீரிய வாழ்க்கை வரலாறுகளும் நூலை அலங்கரிக்கின்றன.

—பூரணி

**கலைவாணி** நான்காவது வருட நிறைவு விழா மலர், அப்போதிக்கரி-பாமசிஸ்ற் இந்து மாணவர் சங்கம், இலங்கை வைத்தியக் கல்லூரி, ஆசிரியர்: த. நமசிவாயம்.

கொழும்பு வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த அப்போதிக்கரிபாமசிஸ்ற்இந்து மாணவர் சங்கத்தினரின் 1965-ம் ஆண்டு நான்காவது வருட நிறைவு விழா மலர் தமிழ் இலக்கிய மலர்களால் தொடுக்கப்பட்ட அழகிய மாலையாக தமிழன்னைக்கு காணிக்கையாகச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

வைத்தியக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு தமிழ் இலக்கியத்தில் உள்ள ஈடுபாட்டுக்கு அவர்கள் தொகுத்துத்தந்துள்ள இந்த கலைவாணி இதழ் ஒரு நற்சான்று. இந்துசமயப்பற்றினலும், தமிழ் இலக்கியத் துடிப்பினலும் அளவிடமுடியாத கஷ்டங்களையும் சமாளித்து, அச்சேற்றி தமிழ் கூறும் நல்லுலகத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சஞ்சிகையை அழகுபடுத்தும் ஒவ்வொரு மலரையும் நுகர்ந்து பார்க்கும்போது ...

ஈழத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்ட திருமுருக கிருபானந்தவாரியார் எழுதியுள்ள 'அகஞானம் அகன்று சிவஞானம்பெறுக!' சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களின் 'திருக்கேதீச்சரம்' ஆகிய இரு கட்டுரைகளும் மலருக்குத் தனிமணம் கொடுக்கின்றன.

கவிஞர் இ. நாகராஜனின் அருவினை தீர்க்கும் அரன் ஆலயம் அடைந்தோம்" என்ற கவிதையைப்படிக்கும் போது ஏதோ ஒருவிதமான சக்தி ஆட்கொள்ளப்பார்ப்பது போன்ற உணர்ச்சி....

முனியப்பதாசனின் 'அம்மா' சிறுகதை மலருக்கு தனி அழகைக் கொடுக்கிறது. 'இலங்கையர்க்கோன்' சிறிகதைப் போட்டிமூலம் சிறுகதை, கதையுலகிற்கு அறிமுகமான 'முனியப்பதாசன்' சிறுகதைத் துறையில் மென்மேலும் வளர்ச்சி பெற்றுவருவதை இக்கதையில் பார்க்கலாம்.

மற்றும் வித்துவான் க. கார்த்திகேசு, புலோலியூர் க. சதாசிவம், கமலா பெரியதம்பி, சைவப் புலவர் சி. வல்லிபுரம், நாதன், புத்தொளி, த. நமசிவாயம், மணி ஆகியோரும் மலருக்குச் சிறப்புக் கொடுத்துள்ளனர்.

மொத்தத்தில்—

அழகுற, கவர்ச்சி அட்டையுடன், உள்ளே மூவர்ண கலைவாணியின் படத்துடன் நல்லமுறையில் இம்மலரை வெளியிட்ட வைத்தியக்கல்லூரி மாணவர்கள் பாராட்டுக்குரியர்.

— பாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org